பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 13 திங்கட்கிழமை (28.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 032

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துரைக்கிறார்:

# தமிழ் வேட்பாளர் அல்லது பகிஷ்கரிப்பு; இரண்டுமே தமிழருக்கு பயன்தர மாட்டா!

### கூட்டமைப்பினர் வழிகாட்டுநரின் சொற்கேட்கவேண்டும்



கொழும்பு, டிசெம்பர் 28

"இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதோ அல்லது பகிஷ்கரிப்பதோ தமிழர்களுக்கு எந்தப் பயனையும் தரா. அப்படி நாங்கள் தமிழ் மகன் ஒருவனுக்கு வாக்களித்தாலோ அல்லது பகிஷ்கரித்தாலோ அது எங்கள் ஜனநாயக உரித்தை நாங்களே விட்டுக் கொடுத்தவர்களாக அமைந்துவிடும்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாகப் பேசுவதை நிறுத்த வேண்டும். கூட்டமைப்பை வழிநடத்தும் ஒருவரின் வழி காட்டலுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்."

- இவ்வாறு வலியுறுத்திச் சுட்டிக்காட் டியிருக்கின்றார் உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

மருத்துவ சிகிச்சைக்காகத் தமிழகம் சென்றிருந்த அவர் சில தினங்களுக்கு முன்னர் நாடு திரும்பியிருந்தார்.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து முன்னர் பேசப்பட்டபோது, அதற்கு நீதியரசர் விக்னேஸ்வரனின் பெயரும் சில தரப்புகளால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் இத் தேர்தல் தொடர்பில் அவரது நிலைப்பாட்டை அவரைத் தொடர்பு கொண்டு கேட்டோம்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

(17ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடியாம்

## தம்பர அமில தேரர் கைது

கொழும்பு, டிசெ.28

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் வண. தம்பர அமிலதேரர் நேற்று குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவார் எனக் கூறிப் பலரிடம் பணம் பெற்றிருந்தார் என்றும், இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்காகவே அவர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாரத்ன கூறினார்.

குளியாப்பிட்டி மற்றும் ஹொரணை போன்ற இடங்களில் உள்ளவர்களிடமிருந்து தேரர் பணம் பெற்றமை தொடர்பாகத் தமக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (சி)

## கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, டிசெ.28

தற்போதைய பண்டிகைக் காலத்தில் கொழும்பு மாநகருக்கு வருகைதரும் மக்களின் நலன்கருதி, விசேட பாதுகாப்புத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாகத் திருடர்கள் மற்றும் பல்வேறு மோசடிகளில் ஈடுபடுபவர்களிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதே இந்தத்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்கு தமிழ்க்காங்கிரஸ் நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி முடிவு செய்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள தமிழ்க் காங்கிரஸ் கட்சி, கூட்டமைப்பு இவ்விடயத்தில் ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முன்னர் தனது முடிவை நேற்று எடுத்தது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் விசேட பொதுக் குழுக்கூட்டம் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. சுமார் எழுபத்

(20ஆம் பக்கம் பார்க்க)

## நீதியான தேர்தல் நடத்தப்படாவிடின் ஜீ.எஸ்.பி. சலுகை நிரந்தரமாக ரத்தாகும்

### ஐரோப்பிய ஒன்றியம் எழுத்து மூலம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 28

எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதும், நீதியானதுமாக நடத்தப்பட வேண்டும் - என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் முறைகேடுகள் இடம்பெற்றால் இலங்கைக்கான ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டம் நிரந்தரமாக ரத்து செய்யப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று யாழ். ஆயரைச் சந்தித்துப் பேச்சு

### அரசியல் நிலைவரம் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.28

இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்கள் வகிக்க வேண்டிய பங்கு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ். ஆயர் அதிவண.தோமஸ்சௌந்தரநாயகத்துடன் நேற்று கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், சொலமன் சூ.சிறில் ஆகிய நால்வரும் நேற்றுக் கூட்டாக யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகத்தை யாழ். இல்லத்தில் சந்தித்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி, அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதே இன்று அவசர, அவசியமான விடயமாக உள்ளது. அதை முன்னெடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஆயர் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பங்கு எந்த வகையில் அமைய வேண்டும் என்ற கருத்தை ஆயரிடம் எம்.பிக்கள் கேட்டறிந்து கொண்டதாகவும் அறியவந்தது. (ஒ-1)

## இடம்பெயர்ந்தோரில் இதுவரை மொத்தமாக 10 வீதத்தினரே வாக்களிக்க விண்ணப்பம்!

### மேலும் கால அவகாசம் வழங்க கண்காணிப்பு அமைப்புகள் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.28

இடம்பெயர்ந்த மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு தம்மைப் பதிவு செய்வதற்கான - விண்ணப்பிப்பதற்கான- கால எல்லை கடந்த வியாழக்கிழமையுடன் முடிவடைந்துள்ளபோதிலும், மிகக் குறைந்த எண்ணிக்கையானோரே வாக்களிப்பதற்கு விண்ணப்பித்திருக்கின்றனர் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2008 ஆம் ஆண்டின் தேர்தல் பட்டியலின்படி குறைந்த பட்சம் இரண்டு லட்சம் பேர் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் டிசெம்பர் 24ஆம் திகதி - பதிவுத் தினம் வரை - ஆக 22 ஆயிரம் பேரே தம்மைப் பதிவு செய்துகொண்டுள்ளனர் எனத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து, இவ்விடயத்தை ஒட்டி வடபகுதி தேர்தல் அதிகாரிகளுக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -தேர்தலில் வாக்களிப்பதற்காகத் தம்மைப் பதிவுசெய்து கொள்வதற்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு மேலும்கால

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சேதமடைந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆஸ்பத்திரிகள் மீண்டும் இயங்குகின்றன

## சகல வசதிகளுடன் அவை மீளத் திறப்பு

கொழும்பு,டிசெ.28

கிளிநொச்சி பிரதான ஆஸ்பத்திரி அடங்கலான கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பல பிரதான ஆஸ்பத்திரிகள் மீண்டும் திறக்கப் பட்டுள்ளன. இவற்றுக்குத் தேவையான மருத்துவர்கள் அடங்கலான ஆளணி மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திர சிறி தெரிவித்தார்.

100 படுக்கையறை வசதிகளுடன் கிளிநொச்சி வைத்தியசாலை ஆரம்பிக்கப் பட்டுள்ளதோடு, 'எக்ஸ்ரே' வசதி, இரத்த வங்கி வசதி என்பன வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முழங்காவில் ஆதார வைத்தியசாலையும் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. இங்கு மூன்று மருத்துவர்கள் உட்பட பணியாளர்கள் சேவையாற்றி வருகின்றார்கள்.

முல்லைத்தீவு வைத்தியசாலையும் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. அந்த வைத்தியசாலைக்கு மருத்துவ அதிகாரிகள் மற்றும் பணியாளர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர். 4 'அம்புலன்ஸ்' வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மீள்குடியேற்றப் பணிகளுடன் இணைந்ததாக சேதமாக்கப்பட்ட வைத்தியசாலைகள் துரிதமாகப் புனரமைக்கப் பட்டு மக்கள் நலனுக்காக திறக்கப்பட்டு வருகின்றன. மோதல்கள் இடம்பெற்ற போது புலிகள் பல வைத்தியசாலைகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்ததுடன் அவற்றைச் சேதமாக்கி இருந்தனர் என்றும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

# நான்கு வைத்தியசாலைகளுக்கு பல் டாக்டர்கள் நியமனம்

குருநகர், டிசெ.28

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் பிரதான வைத்தியசாலைகளுக்கு நிரந்தரமாக பற்சிகிச்சை வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிரதேச வைத்தியசாலை சாவகச்சேரி, பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறை, ஆதார வைத்தியசாலை ஊர்காவற்றுறை, ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை ஆகிய நான்கு வைத்தியசாலைகளுக்கே வைத்திய அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-51)

# 47 கோடி சதுரமீற்றர் நிலப்பரப்பு துப்புரவு; கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதம்

## வடக்கு, கிழக்கு நிலைகுறித்து இராணுவத்தரப்பு விளக்கம்

கொழும்பு, டிசெ. 28

வ்டக்கு, கிழக்குப் பிரதேசத்திலுள்ள ஏழு மாவட்டங்களில் இராணுவத்தினர் மாத்திரம் இதுவரை 45 கோடி 4 இலட்சத்து 2 ஆயிரத்து 744 சதுர மீற்றர் (450, 402,744) நிலப்பரப்பிலிருந்து கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை அகற்றியுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்,வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து படையினர் இதுவரை 34 ஆயிரத்து 336 கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை மீட்டெடுத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் தற்போதைய நிலையை நேரில் பார்ப்பதற்குத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து ஊடகவியலாளர்கள் குழுவொன்று கடந்த புதனன்று அங்கு அழைத்துச் செல்லப்பட்டது.

பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமைகள், நிவாரணக் கிராமங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசு செய்து கொடுத்துள்ள வசதிகள், மற்றும் துரித மீள் குடியேற்றத்திற்காக படையினர் மற்றும் ஏனைய அமைப்புகளால் முன்னெடுக்கப் படும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை ஊடகவியலாளர் குழுவினர் பார்த்து அறிந்தனர்.

பின்னர் பெரிய தம்பனை, பெரிய பண்டிவிரிச்சான் ஆகிய பிரதேசங்களில் அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளையும் பார்வையிட்டனர். அதன்போது அங்கு கூடியிருந்த ஊடகவியலாளருக்குக் கருத்துத் தெரிவித்த பிரிகேடியர் மேலும் தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

மக்களை மீளக்குடியமர்த்தும் நோக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை அரசின் வேண்டுகோளுக்கிணங்க படையினரும் பல்வேறு வெளிநாட்டு நிபுணத்துவ அமைப்புகளும் மேற்கொண்டு வருகின்றன.

2002ஆம் ஆண்டு முதல் இதுவரை 34 ஆயிரத்து 336 கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை இராணுவத்தினர் மீட்டெடுத்துள்ளனர். 17 ஆயிரத்து 323 கண்ணிவெடிகள், 19 யுத்த தாங்கி ஒழிப்பு கண்ணிகள் 16 ஆயிரத்து 994 வெடி பொருள்கள் இவற்றில் அடங்குகின்றன - என்றார்.

சுவிட்ஸர்லாந்தைத் தளமாகக் கொண்ட (பெடரேஷன் சுவிஸ் டீமைனிங்) எப்.எஸ்.டி. என்ற அமைப்பு பெரிய தம்பணை, பெரிய பண்டிவிரிச்சான் பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் 2 கோடி 2 இலட்சத்து 74 ஆயிரத்து 571 சதுர மீற்றர் (20,274,571) நிலப்பரப்பிலிருந்து பெரும் எண்ணிக்கையான கண்ணிவெடிகளையும் பல்வேறு வெடி பொருள்களையும் அவர்கள் மீட்டுள்ளனர் என மேற்படி அமைப்பின் பிரதிநிதியான இந்திய நாட்டைச் சேர்ந்த மேஜர் ராஜு தெரிவித்தார்.

அடர்ந்த காடுகளாகவும், பாழடைந்த பிரதேசங்களாகவும் இருப்பதால் பல்வேறு நவீன இயந்திரங்கள், உத்திகள் இதற்குப் பயன்படுத்தப் படுகின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-சி)

# யாழ். நகரில் அகற்றப்பட்ட காவலரண்கள் மீண்டும் அருகில் முளைக்கின்றன

குருநகர்,டிசெ.28

யாழ். நகரில் குறிப்பிட்ட சில இடங்களில் இருந்த இராணுவ காவலரண்கள் அண்மைக் காலத்தில் அகற்றப்பட்டிருந்தன. ஆனால், அந்த இடங்களுக்கு அருகில் தற்போது திடீரென காவலரண்கள் மீண்டும் முளைக்கத் தொடங்கியுள்ளன.

யாழ். பிரதான வீதியில் விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த காவலரண் அண்மையில் படையினரால் அகற்றப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் காவலரண் தற்போது யாழ். பிரதான வீதியில் கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தின் கிழக்குப் பகுதியில் அமைக்கப் பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பருத்தித்துறை வீதியின் கிழக்குப் புறத்தில் மற்றொரு காவலரண் ஏற்கனவே அகற்றப்பட்டிருந்தது. ஆனால் தற்போது இக்காவலரண் இதற்கு வடமேற்குப் புறத்தில் முதலாம் குறுக்கு வீதிக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு படையினர் நிலைகொண்டுள்ளனர்.

இதேவேளை யாழ். முதலாம் குறுக்கு வீதியில் யாழ். வேம்படி கல்லூரிக்கு அருகில் சேர். யோகேந்திரா துரைச்சாமி வீதிக்குப் பக்கமாக அமைக்கப்பட்டிருந்த படையினரின் காவலரணும் இயங்கி வருகிறது. போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த பகுதி மட்டும் அகற்றப்பட்டு படையினர் அங்கு தொடர்ந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-51)

# வல்லிபுரத்தில் இன்று வைகுண்ட ஏகாதசி

வடமராட்சி,டிசெ.28.

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது.

மாலை 5 மணிக்கு நடைபெறும் விசேட பூசையைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு முதலாம் சாயரட்டைப் பூசை இடம்பெறும். தொடர்ந்து ஏகாதசி புராணம் அதிகாலை வரை படிக்கப்படும்.

இரவு 10 மணிக்கு இரண்டாம் காலப் பூசையும் 12 மணிக்கு மூன்றாம் காலப் பூசையும் இடம்பெறும். அதிகாலை 5 மணிக்கு புராணபடிப்பு முடிவுற்று சுவாமி வீதியுலா வருவார். பின்னர் பாறணைப் பூசை இடம் பெறும். (ஒ-07-236)

# வைரவர் திருவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.28.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சாமுண்டி சிவஞான வைரவர் ஆலயத்தில் பரணித்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. விசேட பூசைகள், வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று சுவாமி உள் வீதி உலா வருவார். (ஒ-78)

# ஜனஜய சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,டிசெ.28

ரூபவாகினி தொலைக்காட்சி நிகழ்ச்சியாக நேற்று நடைபெற்ற அபிவிருத்தி லொத்தர் சபையின் ''ஜனஜய'' 87ஆம் இலக்க சீட்டிழுப்பில் விசேட இலக்கமாக 9 உம் வெற்றி இலக்கங்களாக 13, 22, 33, 64 ஆகிய இலக்கங்களும் தெரிவுசெய்யப் பட்டுள்ளன.

இதன்பிரகாரம் சுப்பர் பரிசும், மற்றும் விசேட இலக்கத்துடன் இலக்கங்களைக் கொண்ட சீட்டிற்கான இரண்டாவது பரிசு மற்றும் 4 இலக்கங்களைக் கொண்ட சீட்டிற்கான மூன்றாவது பரிசு என்பன வெல்லப்படவில்லை.

மூன்று வெற்றி இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 39 பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரத்து ஐநூறு ரூபா கிடைக்கும்.

இரண்டு வெற்றி இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 2,838 பேருக்கு ஐந்தாம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும்.

ஒரு வெற்றி இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 43,331 பேருக்குத் தலா இருபது ரூபா கிடைக்கும். (அ-10)

# சிரம வாசனா சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, டிசெ.28

தேசிய லொத்தர் சபையின் சிரம வாசனா 209 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் W என்ற ஆங்கில எழுத்தும் 02, 30, 40, 43 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்திற்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசுத் தொகை மற்றும் முதலாம் பரிசு என்பன வெல்லப் படவில்லை.

மூன்று இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 164 பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஆயிரம் ரூபாய் கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்களை சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 5,894 பேருக்கு மூன்றாம் பரிசாக தலா ஐம்பது ரூபாய் கிடைக்கும்.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 64,508 பேருக்கு நான்காம் பரிசாக தலா இருபது ரூபாய் கிடைக்கவுள்ளது. (அ - 10)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சுந்தரலிங்கம்

நடுத்தெரு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் பாலாவி தெற்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுந்தரலிங்கம் நேற்று (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலாவி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாலாவி தெற்கு,*
*கொடிகாமம்.* (91919) தகவல்: அருணாசலம் (மைத்துனர்).

## முத்து சுப்பையா

### (ஓய்வுபெற்ற பரிசாரகர், யாழ்.போதனா வைத்தியசாலை)



கட்டப்பிராய், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் இல.3, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட முத்து சுப்பையா நேற்று (27.12.2009) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகனும் கந்தையா, கனகம்மா, நாகம்மா ஆகியோரின் சகோதரரும் கலாநிதி, விஜயகுமார், வசந்தாதேவி, கங்காதேவி, சுரேஸ்கரன், கருணாகரன், சதீஸ்குமார் (நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலானந்தன் (இலங்கை மின்சாரசபை, புறநகர் பகுதி, யாழ்ப்பாணம்), சிவதாஸ், கிருஷ்ணசசி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், யோகராஜா (சிறைச்சாலை உத்தியோகத்தர்), சின்னராசா, கோபாலகிருஷ்ணன் (பொலிஸ் சார்ஜன்ட்) மற்றும் சண்முகராஜா (வர்த்தகர், வைரவர் களஞ்சியம்), அருளானந்தம் (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்), ஜெயலட்சுமி, சிவசோதி, நகுலேஸ்வரி, கலாமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இரத்தினம், மருதவாணர் ஆகியோரின் சகலனும் அபிராமி (யாழ். மாவட்டச் செயலகம்), ரஞ்சித் (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), சாம்பவி, சங்கரி, அன்ரூட் சிவபாலன் ஆகியோரின் அன்புப் பேரனும் கோகுல்நாத்தின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணிக்கு தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.3, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.இல. 021 2226590 (91917) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## ரகுநாதன் இராசமணி (திரவியம்மணி)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரகுநாதன் இராசமணி (திரவியம்மணி) அவர்கள் நேற்று (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ரகுநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இளையதம்பி - நாகம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற செல்லம் - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும் ரகுதாஸ் (பிரான்ஸ்), சாமினி, செல்வதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜி, மகேந்திரம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சஞ்சனா, துசானி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3மணிக்கு தகனக்கிரியைக்காக குச்சம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் தெற்கு,*
*மட்டுவில்.* (91918) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சமூகத் தலைவர்களும் தலையிட்டு வழிகாட்ட வேண்டிய விவகாரம்

சமூகத்துக்குப் பேரிடர் வருகின்ற போது, சமூகம் தவறாக வழி நடத்தப்படுகின்ற சூழ்நிலை எழுகின்ற போது, அவ் விடயங்களில் தலையிட்டு வழிகாட்டவேண்டிய பொறுப்பு சமூகத் தலைவர்களுக்கு உண்டு.

அத்தகைய ஓர் அரும்பணியை காலத்தின் தேவை கருதியும் அவசரம் கருதியும் தாமாக ஆற்ற முன்வந்திருக்கின்றார் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஸி.வி.விக்னேஸ்வரன்.

தமது நீதித்துறைப் பணியின் போது பக்கம் கோடாது - ஆட்சித் தரப்பின் அதிகார அழுத்தங்களுக்கு இடம் தராது - மசிந்து கொடுக்காது - பட்டவர்த்தனமாகத் தீர்ப்புக்களைக் கூறி, கருத்துக்களையும் யதார்த்த உண்மைகளையும் வெளிப்படையாக எடுத்தியம்பி, தம் தனித்துவச் சிறப்பை அவ்வப்போது வெளிப்படுத்திய நீதியரசர் அவர் என்ற மாண்பைப் பெற்றுக்கொண்டவர் விக்னேஸ்வரன்.

ஈழத் தமிழர்களின் உரிமைக்கான - கௌரவ வாழ்வுக்கான - நீதிக்கான - ஆயுதப்போராட்டம், ஆயுதப் பலாத்காரம் மூலமாகவே மௌனிக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில் தமிழினம் அரசியல் அந்தகார சூழலில் சிக்கித் தவித்து நிற்கின்றது.

இப்போது இருக்கக்கூடிய பற்றுக்கோட்டை அவதானமாகப் பற்றிப்பிடித்து, தன்னைத்தேற்றி நிமிர்ந்து எழ வேண்டிய தமிழினத்தை, சில பொறுப்பற்ற அரசியல் தலைவர்கள் குழப்பியடித்து, மீள முடியாப் பேரவலத்துக்குள் நிரந்தரமாக ஆழ்த்தி விடுவார்களோ என்ற அச்சம் - பெரும் பீதி - இப்போது சூழ்ந்து நிற்கின்றது.

தாம் இதுவரை அரசியல் கட்சி எதனையும் சாராதவராயினும், சமூகப் பொறுப்புடைய சமுதாயத் தலைவர் என்ற முறையில், இந்த அரசியல் இக்கட்டு நிலையில் நீதியையும், நியாயத்தையும், உண்மையையும், யதார்த்தத்தையும் தமது மக்களுக்கு எடுத்தியம்பி வழிகாட்ட வேண்டிய கடப்பாடு தமக்கு உள்ளது என்பதை உணர்ந்து நீதியரசர் விக்னேஸ்வரன் அந்தப் பொறுப்பை ஆற்ற முன்வந்திருக்கின்றார்.

ஆயுதபலம் மௌனிக்கப்பட்டிருக்கும் இச்சமயத்தில் ஜனநாயகத் தேர்தலில் 'வாக்கு' என்ற ஒரே பலத்தை எப்படித் தமக்குச் சார்பாகப் பயன்படுத்துவது என்பதை ஆழ்ந்து நோக்கி அவதானித்து, சாதுரியக் காய் நகர்த்தல் மூலம் முன்னெடுத்துத் தமது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதே தமிழர்கள் இன்று செய்ய வேண்டிய முக்கிய வேலையாகும். வரலாற்றுத் திருப்புமுனையில் இந்த மிக முக்கிய தீர்மானத்தை எக்காரணம் கொண்டும் தவிர்க்க இயலாத நிலையில் மேற்கொள்ள வேண்டியவர்களாகத் தமிழர்கள் உள்ளனர்.

இந்த நிலையில், தனித் தமிழ் வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது, தேர்தலைப் பகிஷ்கரிப்பது போன்ற பயனற்ற வேலைகள் குறித்து சிலர் சிலாகிக்கின்றனர்.

ஒற்றுமை என்ற தமிழர்களின் ஒரே பலத்தைச் சிதறடிப்பதற்காக சில தற்குறிகள் உள்ளேயிருந்தே குழி பறிக்க எத்தனிக்கின்றன. தமிழர்களின் ஒற்றுமை தமக்குப் பாதிப்பைத் தரும் என்று கருதும் சில தரப்புகள் தமிழ் மக்கள் மத்தியில் வேற்றுமைகளை விதைக்கின்றன.

இத்தகைய பேராபத்துகளுக்குத் தமிழர்கள் இடமளிப்பது விபரீதமான விளைவுகளைத் தமிழர்களுக்கு ஏற்படுத்தி விடும் என்பதால், அவற்றைப் பார்த்திருக்க இயலாது என்ற நிலைமையில், தமது சமூகக் கடமையை ஆற்ற முன்வந்திருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

தனித் தமிழ் வேட்பாளரை நிறுத்துவது, தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோருவது, தமிழ்க் கூட்டமைப்பின் தலைமைக்குக் கட்டுப்படாது தான்தோன்றித்தனமாகவும், எதேச்சையாகவும், பொறுப்பற்றும், எல்லாவற்றையும் குழப்பியடிக்கும் விதத்திலும் நடப்பது போன்ற கைங்கரியங்களில் ஈடுபட வேண்டாம் என்பதைச் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குப் பகிரங்கமாக எடுத்துக் கூற முன்வந்திருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

அரசியல் சேற்றில் கால் வைக்கிறோமே என்று அருவருக்காமல், சமுதாயத்தை வழிநடத்தும் சமூகப்பணி இந்தச் சமயத்தில் தமது தோள் மீதும் சுமத்தப்பட்டிருக்கின்றது என்பதை உணர்ந்து, அதனடிப்படையில் செயலாற்ற முன்வந்த நீதியரசர் விக்னேஸ்வரன் மெச்சப்பட வேண்டியவர்.

அவரின் வழியைப் பின்பற்றி சமூகத்துக்கு நீதி, நியாயம், உண்மைகளை எடுத்துரைத்து வழிகாட்ட மேலும் பல சமுதாயத் தலைவர்கள் முன்வர வேண்டும்.

''ஆயிரம் மலர்கள் மலரட்டுமே!'' - என்பதுபோல தமிழர்களின் இன்றைய அவல நிலையில் அவர்களை வழிப்படுத்துவதற்கான ஆயிரம் விக்னேஸ்வரன்கள் உருவாகட்டுமே.!

சமூக, சமுதாயத் தலைவர்கள் ஒவ்வொருவரும் தமது பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து இந்த விடயத்தில் தமிழ் மக்களுக்கு சரியான வழியைக் காட்ட முன்வரவேண்டும்.

இந்த வகையில் மதிப்புக்குரிய முன்னாள் சிவில் அதிகாரி தேவநேசன் நேசையாவும் காத்திரமான கருத்துகளை முன்வைத்திருக்கின்றார். தமிழர்களைச் சரியாக வழிப்படுத்துவதற்கு இந்த ஆலோசனைகள் நன்கு உதவும் என்று நம்பலாம்.

# அரசு தரப்பு பிரமுகர்களின் கருத்து முரண்பாடுகளால் ஏற்பட்டுள்ள சிக்கல்

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் போட்டிகள் சூடுபிடித்திருக்கும் இவ்வேளையில் கடந்த பல நாள்களாக ஜனாதிபதி ராஜபக்ஷ சார்பான பிரசாரங்கள் திசைமாறிப் போய்க்கொண்டிருப்பதாகவே தென்படுகின்றன.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைவதற்கு வந்த புலிகளின் உயர்மட்டத் தலைவர்களான நடேசன், புலித்தேவன் மற்றும் ரமேஷ் ஆகியவர்களைச் சுட்டுக்கொன்று விடுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பிரிகேடியர் (இப்பொழுது மேஜர்) சவேந்திர சில்வாவுக்குக் கட்டளை பிறப்பித்திருந்தார் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்ததாக வெளிவந்திருந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாகவே கடந்த பல நாள்களாகக் கவனம் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது.

**நேற்று 27.12.2009 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகிய அரசியல் கட்டுரையிலிருந்து எடுக்கப் பட்ட ஒரு பகுதி இது.**

'சண்டே லீடர்' பத்திரிகைக்கு வழங்கியிருந்த நேர்காணல் ஒன்றில் இந்தக் குற்றச்சாட்டுகளை ஜெனரல் பொன்சேகா கூறியிருந்தார்.

ஜெனரல் பொன்சேகா மீது கடும் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி மேற்கொள்ளப்பட்டு வந்த பிரசாரங்களுக்கிடையில் ஜெனீவாவில் உள்ள இலங்கைக்கான ஐ.நா. தூதுவர் ஷேனுக்க செனவிரத்னாவுக்கு ஐ.நா விசேஷ அறிக்கையாக பிலிப் ஆல்ஸ்ரனிடமிருந்து இந்தப் படுகொலைகள் தொடர்பாக மூன்று பக்கங்களைக் கொண்ட கடிதமொன்று கிடைத்திருக்கிறது. ஜெனரல் பொன்சேகா வெளியிட்டிருந்த தகவல்கள் பற்றி அவர் குறிப்பிட்டிருந்தார். இக்கடிதத்தின் பிரதிகளை செனவிரத்ன, அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவுக்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜெயசிங்க மற்றும் சட்டமா அதிபர் மோஹான் பீரிஸ் ஆகியோருக்கும் அனுப்பி வைத்திருந்தார்.

ஆல்ஸ்ரன் தனது கடிதத்தில் சண்டே லீடர் செய்தி தொடர்பாகத் தாம் முன்கூட்டியே முடிவுக்கு வர விரும்பவில்லையென்று தெரிவித்திருந்ததோடு தமது கவனத்துக்குக் கொண்டு வரப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தெளிவுபடுத்திக்கொள்வது தமது கடமையென்றும் தெரிவித்திருந்தார்.

மேலும் நடேசன், புலித்தேவன் மற்றும் ரமேஷ் ஆகியோரின் மரணம் தொடர்பாகவும் அவர்களின் குடும்பத்தவர்களின் மரணங்கள் தொடர் பாகவும் நான் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருக்கிறது. எனவே இது தொடர்பான உங்கள் ஒத்துழைப்பையும் அவதானிப்புகளையும் வழங்கி உதவும் படி கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்திருந்தார். அத்துடன் பின் வரும் கேள்வி களையும் அவர் இணைத் திருந்தார்.

தெரிவிக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுக்கள் சரியானவைதானா? அவ்வாறு இல்லையெனில் இதுபற்றிய உறுதிப்படுத்தும் தகவல்களையும், ஆவணங்களையும் பகிர்ந்துகொள்ளவும்.

2009 மே 18ஆம் திகதி கொல்லப்பட்டவர்களான நடேசன், புலித்தேவன் மற்றும் ரமேஷ் ஆகியோரின் குடும்பங்கள் தொடர்பான என்ன விவரங்கள் உங்கள் அரசிடம் உள்ளன?

மேற்படி விடயம் தொடர்பாக பொலிஸ், இராணுவ, நீதித்துறை அல்லது வேறு விசாரணைகளின் விவரங்களையும் வழங்குங்கள்.

சரணடைபவர்களைத் தாக்குவதும், கொலை செய்வதும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது என்பவைகளை அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ரமேஷ் என்பவர் இருக்கவில்லை என்றும் அவர் தற்காலிகமாகப் படையினரின் பாதுகாப்பில் இருந்தாரென்றும் ஆனால் மோதல் ஒன்றின்போது கொல்லப்பட்டாரென்றும் படையினர் தெரிவித்துள்ளனர்.

### ஐ.நா. கொழும்பில் புலனாய்வு

போரின் இறுதிக்கட்டங்களின்போது நடைபெற்றிருக்கலாம் என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. புலனாய்வுகளைச் செய்து வருகின்றது. ஐ.நாவின் விசேஷ அறிக்கையாளர் ஆல்ஸ்ரன் கொழும்பிலுள்ள பல்வேறு மேற்குலக ராஜதந்திர வட்டாரங்கள், சர்வதேச அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் ஐ.நா முகவர் அமைப்புகள் போன்றவற்றிடம் விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளார். அவர் இப்போது போரின்போது கடமையில் இருந்துள்ள மிக உயர்ந்த அதிகாரி வெளியிட்டுள்ள கருத்துகளின் உண்மைத் தன்மையை அறிவதில் ஈடுபட்டுள்ளார்.

ராஜபக்ஷவை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதல் முக்கிய பிரசார விடயமாக இது இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

### அமைச்சருக்கு தெரியாமல் செயலாளர் அனுப்பிய கடிதம்

பேராசிரியர் விஜேசிங்க காலம் தாழ்த்தாமல் ஆல்ஸ்ரனின் கடிதத்திற்குப் பதில் அனுப்பியிருக்கிறார். வெளிநாட்டமைச்சரையோ, பாதுகாப்பு அமைச்சரையோ கலந்தாலோசிக்காமல் இதில் எதுவித பிரச்சினையும் எழவில்லையென்ற முறையில் அவர் பதில் அனுப்பியிருக்கிறார். அப்படியான கருத்து எதனையும் தாம் கூறவில்லையென்று ஜெனரல் பொன்சேகா கூறியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவரது பதில் ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வெளிநாட்டமைச்சின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

ஆல்ஸ்ரன் அனுப்பிய கடிதத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு விஜயசிங்க கேட்டிருந்தார் என்று 'லங்காதீப'

## பொன்சேகாவின் கூற்றை வைத்தே அவரைத் தாக்கும் முயற்சி தோல்வி

பத்திரிகை பிரத்தியேகமாகச் செய்தி வெளியிட்டிருந்தது. ஜெனரல் பொன்சேகா தாம் கூறியதாக வெளியான கூற்றினை வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டார் என்பதால் ஆல்ஸ்ரன் தமது கடிதத்தை வாபஸ் பெற வேண்டும் என்று இவர் கேட்டிருந்தாராம். ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை அவர் நம்பாமல் இருப்பாரானால் ஆல்ஸ்ரன் பக்கம் சாராத மனிதனாக இருப்பார் என்று விஜயசிங்க குறிப்பிட்டுள்ளார். இம்மாதிரியாக செய்திகளை வெளியிடுகின்ற வேறும் சில ஊடகங்கள் இருக்கின்றன. தேர்தல் நடைபெறுவதற்கான நாள் நெருங்கி வருவதால் இத்தகையான செய்திகளை அவை வெளியிடவே செய்யும். தமக்கு சாதகமாக முடிவுகள் வரவேண்டும் என்று விரும்புகின்ற குழுக்கள் பொறுப்பில்லாமல் இப்படி நடந்துகொள்வார்கள் என்று விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதிக்கு பிடிக்கவில்லை

விஜயசிங்கவின் இந்தச் செயற்பாடு ஜனாதிபதிக்கு பிடித்தமாய் இல்லை. சிரேஷ்ட ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில்ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியவர்களுக்கும் இதில் விருப்பமில்லை.

ஜெனிவாவிலுள்ள இலங்கை ராஜதந்திரிகளுக்கு வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆல்ஸ்ரனுக்கு அக்கடிதம் சென்றடையாமல் தடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இலங்கை அரசிடம் இருந்து ஆய்வு செய்யப்பட்ட, ஒன்றிணைக்கப்பட்ட பதில் அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்படும் என்று அவர் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

இந்த நிலைமையில் அமைச்சர் சமரசிங்க அவசரமாக பத்திரிகையாளர் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

விஜயசிங்கவின் பதிலானது உத்தியோக பூர்வமற்றது என்று தெரிவித்த அதே [illegible] பத்திரிகையாளர் கூட்டத்தில் பிரசன்னமாய் இருந்த தனது செயலாளரையும் அவர் முகம்சுழிக்க வைக்காமல், அவர் கருத்தை மறுத்துரைப்பதல்ல தமது நோக்கம் அது மிகவும் வெளிப்படையாக இருக்கிறது என்று கூறிச் சமாளித்தார்.

பொன்சேகா தெரிவித்த கருத்துக்காக அவரை அரசின் பிரசார சாதனங்கள் எல்லாம் குற்றஞ்சாட்டி வருகின்றன. உத்தியோகபூர்வ இரகசிய காப்புச் சட்டத்தின் கீழ் அவர் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி சட்டமா அதிபர் ஆலோசனை நடத்திவருகின்றார். தொலைக்காட்சியில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் அவரைக் கண்டிக்கும் காட்சிகள் காட்டப்பட்டன. முன் எப்பொழுதும் இல்லாத வகையில் அரசின் ஊடகங்கள் ஆல்ஸ்ரனின் கடிதத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தன. பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் இராணுவ அதிகாரிகள் இனிமேல் வைத்திய சிகிச்சைக்கும் கூட வெளிநாடுகளுக்கு போக முடியாது என்றார். ஆல்ஸ்ரன் கடிதத்தினால் அவர்கள் எல்லோருமே மனித உரிமைகளை மீறிய சந்தேக நபர்களாகப் பார்க்கப்படுவார்கள் என்றார். அதிபர் ராஜபக்ஷவை ஆதரிக்கும் பௌத்த குருமார்கள், ஜெனரல் பொன்சேகாவின் காரியாலயத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர்களைப் பொறுத்தவரை அரசியல் மட்டத்தில் ஜெனரல் பொன்சேகாவைத் தாக்குவதற்கு ஆல்ஸ்ரனின் கடிதம் மிகச் சாதகமான ஒன்றாக இருந்திருக்கலாம்-ஆனால் அது நீடித்திருக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் தாம் அப்படிக் கூறவில்லை என்று மறுத்துள்ளார் என்று கூறியதன் மூலம் ஜெனரல் பொன்சேகா மேற்கொண்டும் "சங்கடங்களுக்கு உள்ளாகாதபடி செய்துவிட்டார் அமைச்சின் செயலாளரான ஒருவர். எனவே அரசின் பிரசார விடயம் ஒன்று தவிடு பொடியாகி விட்டது. இதனால் மனிதஉரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் நிலைப்பாட்டில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஒதுங்கிப் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

### மறுக்கவில்லை விளக்கம்தான்

ஆனால் விஜயசிங்க கூறியது போன்று பொன்சேகா கூறிய குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கிறாரா என்றால் அதுதான் இல்லை. அவர் விளக்கம் ஒன்றைத்தான் விடுத்துள்ளார். அவர் கூறியதாவது: யுத்தம் முடிந்த இரண்டு நாள்களின் பின்னர் அந்தச்சமயத்தில் பிரிகேடியர் சவேந்திரசில்வாவுடன் இருந்துள்ள பத்திரிகையாளர் ஒருவர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடமிருந்து சட்டவிரோத கட்டளையொன்று அவருக்கு வந்ததாக அவரிடமிருந்து கேள்விப்பட்டேன். அந்த சட்டவிரோத கட்டளையானது களமட்டத்தில் செயற்படுத்தப்படவில்லை. களத்தில் நடைபெற்ற அனைத்துக்கும் நான் பொறுப்பேற்கின்றேன் என்று கூறியிருந்தார்.

அரசதரப்பில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய குறைபாடுகளில் ஒன்று என்னவென்றால் அரசாங்கத்தின் தரப்பில் பேசுகிறவர்களில் மிகப் பொறுப்பானவர் முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவது தான். இந்த வருடம் மே மாதத்தில் அப்போதைய வெளியுறவு செயலாளர் பாலித கொஹன பிரெஞ்சு முகவர் அமைப்புக்குத் தெரிவித்த ஒரு தகவலில் படையினரிடம் சரணடைய வந்த புலிகளின் தலைவர்கள் அவர்களின் போராளிகளாலேயே பின்பக்கமாகச் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று கூறியிருந்தார். இவ்வாறு கூறியதன் மூலம் சில புலி உறுப்பினர்கள் சரணடைய வந்துள்ளார்கள் என்பதை அவர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

அவர் கூறியிருந்ததாவது:- ஐ.சி.ஆர்சி. என்னோடு உரையாடியபோது இரண்டு (பொன்சேகா மூவர் என்று கூறியுள் ளார்) போராளிகள் சரணடைய விரும்பினார்கள். அவர்களை வெள்ளைக் கொடியுடன் மெதுவாக இராணு வத்தை நோக்கி பயமுறுத்தலோ வன்முறை செயற்பாடோ இன்றி முன்னோக்கிச் செல்லும்படி நான் கேட்டுக்கொண்டேன்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 14 | 29.12.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | துவாதசி |
| | காலை 07.01 வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை |
| | மு.ப 11.41 வரை |
| சுபநேரம்: | 10.58-12.28 வரை |
| ராகுகாலம்: | 03.28-04.58 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

வீட்டுடன் தங்கியிருந்து வீட்டு வேலை செய்வதற்கும் வயோதிபப் பெண்ணைப் பராமரிப்பதற்கும் பெண் வேலை ஆள் தேவை.

தொடர்பு:42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை சூசைப்பிள்ளை



மனுத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் சில்லாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்கள் 26.12.2009 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - ஞானப்பு தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற எட்வீசம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சந்தியாப்பிள்ளை, மனுவேற்பிள்ளை மற்றும் அருட்சகோதரி செல்சஸ் (திருக்குடும்பக்கன்னியர் மடம், நானாட்டான்), றோசா ஆகியோரின் அன்புச்சகோதரரும். எட்மன் வரதறாஜ் (இயந்திர இயக்குநர் R.D.A. யாழ்.), பற்றிக் ஜெயறாஜ் (ஜேர்மனி), மேரிபற்றிமா, ஜோதினி, சிபோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேமினி, வேஜினியா, ஜெறிபின், ஜெகநாதர், விஜயகுமார், நிர்மலன், ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றெபேக்கா, சாம்அன்ரனி, நிறோஸ்கிளிங்ரன், சாள்ஸ் வினோத், அன்றுபிரகாஸ், சக்திதாசன், தேனுசாந், ருஷான், ஸ்ரன்சியான் ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.12.2009) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் இருந்து இறுதி ஆராதனைக்காக சில்லாலை கதிரைமாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, இளவாலை பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:-
எட்மன் வரதறாஜ் (மகன்)
(இயந்திர இயக்குநர், R.D.A. யாழ்.)

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (91913)

## முத்துச்சாமி அன்னம்மா (ஈஸ்வரி)

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி அன்னம்மா (ஈஸ்வரி) அவர்கள் நேற்று (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் தம்பு - தங்கம்மா தம்பதியரின் மருமகளும் முத்துச்சாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், சிவகாமிப்பிள்ளை, கந்தசாமி ஆகியோரின் சகோதரியும் சிவமலர், சித்திவிநாயகர், சகுந்தலா, கௌசலா ஆகியோரின் அன்புத் தாயும் சண்முகநாதன், சகுந்தலாதேவி (சுவிஸ்), அமரர் கோபாலகிருஸ்ணர், கணேசலிங்கம் (செல்லக்கிளி) ஆகியோரின் மாமியாரும் கார்த்தீபன், நிருஜா, பிறேம்ஜா, தனுஜா, கஜானா (சுவிஸ்),சகானா (சுவிஸ்), சோபிதா, ரூபிதா, நிஷாந்தா, சுலக்ஸ்சனன், சுகந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரிய தம்பிரான் கோயில் ஒழுங்கை,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (சி/563550)

தகவல் :
குடும்பத்தினர்.

## திருமதி சிவலிங்கம் தங்கம்மா



மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் வாழ்ந்தவரும், தற்போது சுவிஸ், பாசல் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் தங்கம்மா அவர்கள் 21.12.2009 அன்று சுவிஸில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் செல்லத்துரை - சீதேவன் (கட்டுவன்) தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை நாகலிங்கம்-சேதுப்பிள்ளை (கொக்குவில்) தம்பதிகளின் மருமகளும் பாலசரஸ்வதி (சாந்தா-சுவிஸ்), சிவகுமார் (ஜேர்மனி), ஜெயந்தி (கொழும்பு), ஜெயகுமார் (ஜெயா-சுவிஸ்), சர்மிளா (றெஜி-சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், திருச்செல்வம் (சுவிஸ்), வசந்தகுமாரி (ஜேர்மனி), கைலேஸ்வரன் (கொழும்பு), வளர்மதி (சுவிஸ்), சுதர்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், இனிஷாஞானசிறி (விஜி-சுவிஸ்), திலீப், இந்துஷா, றொபின், றொபிஷா, றொகான், றெஜீஸ், நிதுஷா, ராதிக், ரமிலோ, ரிஷா ஆகியோரின் பாசமிகு பாட்டியும், ஷாமியா, ஷாமிரா ஆகியோரின் அன்புப்பூட்டியும், சிவஞானம், செல்வரத்தினம், நாகரத்தினம், சிவமணி, சிவபாக்கியம், சிவலிங்கம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட்கிழமை சுவிஸில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலைஅனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
நமசிவாயம் விக்னேஸ்வரன்
(பெறாமகன்).

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (91914)

## அருட்சகோதரி விக்டோரியா மாசலின் (தி.கு)

யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி விக்டோரியா மாசலின் நேற்று (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

இவரது இறுதி நல்லடக்க ஆராதனைத் திருப்பலி இன்று (28.12.2009) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்பக்கன்னியர் சிற்றாலயத்தில் நடைபெறும். பின்னர் இவரது பூதவுடல் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:-
அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ்
மாகாணத் தலைவி.

121, பிரதானவீதி,
யாழ்ப்பாணம். (91915)

# வடக்கில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை

## 50 ஆயிரம் கன்றுக்குட்டிகளை வழங்க ஏற்பாடு

கொழும்பு, டிசெ.28

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு 50 ஆயிரம் கன்றுக்குட்டிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி முசலி, மடு, மாந்தை மேற்கு, துணுக்காய், பூநகரி, வவுனியா மற்றும் கனகராஜன்குளம் ஆகிய பகுதிகளில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு 2,373 கன்றுக்குட்டிகள் வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாண அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணி தெரிவித்தது.

இதுதவிர கிராம மட்டத்தில் 50 ஆட்டுப் பண்ணைகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வடபகுதியில் கோழி வளர்ப்புத் திட் டங்களை மேம்படுத்தும் வகையில் ஒரு மாதம் கொண்ட 11 ஆயிரம் கோழிக்குஞ்சுகளை மீள்குடியேற்றப்படும் மக்க ளுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,500 கோழிக்குஞ்சுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

## இன்று ஒளிவிழா

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் ஒளிவிழா இன்று மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் பங்குத்தந்தை வண. பிதா றோ.நேசராஜா அடிகளார் தலைமையில் நடைபெறும்.

* * *

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த ஒளிவிழா நிகழ்வு இன்று மாலை 5 மணிக்கு ஆலய பங்குக்குரவர் யாவிஸ் அடிகளார் தலைமையில் நடைபெறும். (ஒ-23)

## வீடும் காணியும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பூங்கன்குளம் வீதியிலுள்ள மின்மாற்றிக்கு அருகில் நான்கு அறைகளும் சகல வசதிகளும் கொண்ட வீடும், 4 ½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 2263097
(மாலை 6மணிக்குப் பின்பு)

(91010)

## தவறிவிட்டது

கொல்லவிளாங்குளம், வவுனிக்குளம் எனும் முகவரி உடைய தியாகலிங்கம் உஷாந்தினி என்பவருடைய தே.அ.அட்டை (886102089V) மற்றும் நலன்புரி முகாம் அடையாள அட்டையும் (1713386) யாழ். பஸ் நிலையப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

தி.செல்வராசா, இல.54, பால்ப் பண்ணைவீதி,
திருநெல்வேலி. தொ.பே: 0774271705

## அரசுத் தரப்பு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அவர்கள் அவ்வாறு முன்னோக்கிச் சென்றபோது பின்னாலிருந்து விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று கூறியிருந்தார்.

இப்பொழுது அப்படியான ஒன்றும் நடக்கவில்லையென்று ஐ.நாவிடம் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அரசுக்கு ஆதரவான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல்வீரவன்ச பத்திரிகைச் செய்தியாளர்கள் கூட்டமொன்றில் பேசும்போது ஜெனரல் பொன்சேகாவின் கூற்று சர்வதேசச் சதித்திட்டமொன்றின் ஒரு பகுதியாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நிலைமைகள் எவ்வளவு நகைச்சுவையாக மாறிக்கொண்டிருக்கின்றன என்பதற்கு இன்னும் ஓர் உதாரணம் என்னவென்றால் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளிப்படுத்தியுள்ள விடயமாகும்.

ஜி.எஸ்.பி+ வர்த்தகச் சலுகை வசதிகளை தர மறுப்பதன் காரணமாக ஐரோப்பிய யூனியனுக்கு எதிராக அரசு சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்லும் என்று அவர் கூறியுள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டப்பேராசிரியராகவும், உபவேந்தராகவும் இருந்துள்ள பேராசிரியர் பீரிஸ், ஐரோப்பியயூனியன் ஜி.எஸ்.பி+ வரிச்சலுகையை வழங்க மறுப்பதானது இலங்கையின் மனித உரிமைகளை மறுக்கும் செயலாகும் என்றும் தெரிவித்துள்ளார். இத் சலுகைகளை தொடர்ந்து பெற்றுக்கொள்ள வழிவகைகளைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவில் இவரும் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் இடம்மாற்றம், அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், டி.செ.28

ஆசிரியர் இடம்மாற்றம் இடம்பெற்று வருவதை அடுத்து சம்பந்தப்பட்ட அரச முக்கிய அதிகாரிகளுடன் சந்தித்து கலந்துரையாடும் வகையில் அவசரகூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் உயர்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் நலன்கருதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களின் விடயம் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது என்றும் - கல்விசாரா ஊழியர்களும் இதில் கலந்து கொண்டு தமது கோரிக்கைகளை முன் வைக்க முடியும் என்றும் வடக்கு மாகாண ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-1)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
23.01.1951

ஆண்டவன் அடியில்
28.11.2009

அமரர்
### செல்லர் செல்வரத்தினம்

அன்பு மொழிபேசி அரவணைத்து எம்மை
பண்புடனே உயர்த்தி பயன்பெறவும் வைத்து
பாரினிலே எம்மை எல்லாம் பரிதவிக்கவிட்டு
நீங்கள் பரமசிவன் பாதாரம் சென்றதேனோ ?

கடந்த 28.11.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் செல்லர் செல்வரத்தினம் அவர்களின் 31ஆம் நாளான இன்று (28.12.2009) திங்கட்கிழமை மு.ப. 9மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (சி/563549) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இராசையா தவநாதன்



(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை மின்சாரசபை)

கற்பக்குனை, அம்பலவாணர் வீதி, உடுவில், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தவநாதன் நேற்று (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பவளம் தம்பதியினரின் சிரேஷ்ட மகனும் கமலேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சுபாஜி, மஹிந்தன் மற்றும் சுபந்தினி ஆகியோரின் தகப்பனாரும், பொன்னுத்துரையின் (விஜயகுமார் - ஆசிரியர், அருணோதயக் கல்லூரி) மாமனாரும் சங்கமித்தா, மஹிந்தன், முகுந்தன், சுகந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட்கிழமை பி.ப. 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கப்புலம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்பக்குனை,
உடுவில். தொ.பே:0213219704 (91916)

தகவல்:-
குடும்பத்தினர்


## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...

அங்கீகரிக்கப்பட்ட கணனி டிப்ளோமா சான்றிதழ்கான கற்கைநெறிகள்.

- Diploma in Microsoft Office 2007
- Diploma in PC Application
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Diploma in Computerized Accounting



புதிய பிரிவுகள்
4/1/2010,11/1/2010
Time 10 a.m

26/12/2009 ம் திகதி முதல்
முதலில் பதிவு செய்யும் 200 மாணவர்களுக்கு மறைமுகக்கட்டணம், நிபந்தனைகள் எதுவுமின்றி Internet E-mail or Hard ware Technology Course முற்றிலும் இலவசம் !

Internet E-mail
Hardware Technology

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி

DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்லை ஆதிகோயிலடி எம்.ஜி.ஆர்.நற்பணி மன்றத்தினரால் கொண்டாடப்பட்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 25ஆவது நினைவு விழாப் படங்கள் இவை.

எம்.ஜி.ஆர்.நற்பணி மன்றத் தலைவர் தி.ஜெயராஜ் தலைமை உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் ஆதிசக்தி கலாசாரமன்றச் செயலாளர் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும் ஈ.பி.டி.பி.கட்சியின் பிரமுகர் செந்தில்நாதன் சிறப்புரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட பார்வையாளர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

# யாழ்.மாவட்டத் தனியார் சிற்றூர்திச் சங்கத்திற்கென புதிய பஸ்கள்; 'ஹற்றன் நஷனல்' வங்கி உதவியுடன் கொள்வனவு செய்யப்படும்

## இலங்கைத் தனியார் சிற்றூர்திச் சங்கத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பஸ் உரிமையாளர்களுக்கு 'ஹற்றன் நஷனல்' வங்கி ஊடாக கடனடிப்படையில் புதிய பஸ்கள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

இலங்கைச் சிற்றூர்திச் சேவைச் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்திருந்த இலங்கைச் சிற்றூர்திச் சேவைச் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் மினிபஸ் சங்கத்தின் உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச். சங்கத் தலைவர் பொ.கங்காதரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர் ஆர்.ஜெயராஜசிங்கம் மற்றும் மினிபஸ் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கெமுனு விஜயரட்ண தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் தனியார் சிற்றூர்திச் சேவையில் ஈடுபடும் பஸ்கள் மிகச் சிறியனவாகவும் ஆசனங்கள் குறைந்தனவாகவும் காணப்படுகின்றன.

இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இத்தகைய நிலையினைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்குப் பெரிய "டாட்டா" (TATA) ரகத்திலான பஸ்களை ஹற்றன் நஷனல் வங்கி ஊடாக, கடனடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கடன் திட்டத்தினை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு பலமுறை முயற்சி செய்தபோதும் இதுவரை அதுதொடர்பான முடிவுகள் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறவில்லை.

இதனால் காலத்தை இழுத்தடிக்காது ஹற்றன் நஷனல் வங்கியுடன் தொடர்பு கொண்டு குறைந்த வட்டி வரிச்சலுகையுடன் புதிய பஸ்களைப் பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தனியார் பஸ்தரிப்பு நிலையத்திற்கான இடத்தைத் தெரிவு செய்வதற்குப் பல தடவை முயற்சி செய்துள்ளேன். இதுவரை அந்த முயற்சி கை கூடவில்லை. வெகு விரைவில் அதற்கான இடத்தைத் தெரிவுசெய்து தனியார் மினி பஸ் தரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன்- என்றார்.

(04-9)

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த அம்புலன்ஸ்சினை சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (1-78)

## சரிந்தது இஞ்சியின் விலை!

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.குடாநாட்டில் இஞ்சியின் விலை திடீரெனக் குறைவடைந்துள்ளது.

முன்னர் கிலோ 700 ரூபாவரை விற்கப்பட்ட இஞ்சியின் விலை தற்போது கிலோ 300 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது.

தரைப்பாதையூடாகப் பெருமளவு இஞ்சிக் கிழங்கு எடுத்துவரப்பட்டதாலேயே இதன் விலை தற்போது சடுதியாக வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. (04-224)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் பற்களைச் சுத்தம் செய்யும் இயந்திரம் பழுதடைந்துள்ளது

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பற்சிகிச்சை நிலையத்தில் பற்களைச் சுத்தம் செய்யும் இயந்திரம் பழுதடைந்துள்ளது.

இந்த இயந்திரம் பழுதடைந்துள்ளதால் பற்களைச் சுத்தம் செய்யவரும் நோயாளிகள் பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

பழுதடைந்த இந்த இயந்திரத்தைச் சீர்செய்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (04-224)

# பருத்தித்துறை- கொழும்பு வரையிலான நேரடி மினிபஸ் சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.28

பருத்தித்துறைக்கும் கொழும்புக்கும் இடையேயான நேரடித் தனியார் மினிபஸ் சேவை இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் தலைவர் பொ.கங்காதரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

தற்போது வவுனியா வரையே இந்தத் தனியார் மினிபஸ் சேவைகள் நடைபெற்று வருகின்றன.

இதேசமயம்- யாழ்.நகரில் இருந்தும் தனியார் மினி பஸ்கள் இன்று தொடக்கம் நேரடியாகக் கொழும்புவரை தமது சேவைகளை மேற்கொள்ளவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




(04-224)



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான விசேட கல்விப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலய விசேட கல்வித்துறை ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.கோகுலதாஸன் வெற்றிக் கிண்ணத்தை முகிழ்நிலை ஆசிரியை விஜயநிதிக்கு வழங்குவதையும், ஜனசக்தியின் சாவகச்சேரிக் கிளைமுகாமையாளர் பே.அருள்பிரகாசம் அன்பளிப்புச் செய்த வெற்றிக் கிண்ணத்தை அதிபர் வி. எஸ். மகேந்திரன் முகிழ்நிலை ஆசிரியர் மதனரூபனுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## மீளக்குடியமர்ந்த குழந்தைகளுக்கு நத்தார் தினத்தில் சத்துணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், டிசெ.28

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்களின் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவுகளை யாழ்.மன்றக் கல்வி நடுநிலையம் நத்தார் தினத்தன்று விநியோகித்துள்ளது.

300இற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இந்தப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

பால்மாப் பைக்கற்றுக்கள் உட்பட மற்றும் சில சத்துணவுப் பொருள்கள் இவ்வாறு விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(04-224)

ஜனாதிபதித் தேர்தல்

# தபால் மூலம் வாக்களிப்பதற்கு யாழ்.மாவட்டத்தில் 4,737 பேர் தகுதி!

யாழ்ப்பாணம்,டிசெ.28

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 4 ஆயிரத்து 737 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று யாழ்.தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதியில் இருந்து தபால் மூலம் வாக்களிப்பதற்கு 5 ஆயிரத்து 795 பேர் தமது விண்ணப்பங்களை யாழ். தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்பிவைத்தனர்.

இதில் 4 ஆயிரத்து 737 பேர் தபால்மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். அதேவேளை ஆயிரத்து 58 வாக்காளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இம் முறை அதிகூடுதலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணம் வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை ஒழுங்கான முறையில் பூர்த்தி செய்யாமையும், விண்ணப்பங்களை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவர்கள் அதனைக் கவனிக்காமல் விட்டமையுமே ஆகும் என்று யாழ்.தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

இதேவேளை -தபால்மூலம் வாக்களிப்பதற்குத் தகுதிபெற்றுள்ள வாக்காளர்களுக்கான வாக்குச் சீட்டுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அத்துடன் தபால்மூல வாக்களிப்பின்போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாகக் கடமையாற்றவுள்ளவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது. (04-9)

## சமுகமளிக்கவும்

யாழ்ப்பாணம், டிசெ.28

இந்து மகளிர் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

(04-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் கல்வி வலய முறைசாரக் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினத்தையொட்டிய நிகழ்வுகளில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை, இளவாலை புனித கன்னியர் மடம் பாடசாலை, நவீல்ட் பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் நிகழ்வில் கலந்து கொண்ட பார்வையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# மீளக்குடியமர்ந்த பல குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள்கூடக் கிட்டவில்லை

## 'ரொய்ட்டர்' செய்திச் சேவை தகவல்

கொழும்பு, டிசெ. 28

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த பின்னர் அரசினால் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள், தமது பகுதிகளில் அடிப்படை வசதிகள் எவையும் இல்லாத நிலையில் வாழ்கின்றனர் என அந்த மக்களை மேற்கோள்காட்டி 'ரொய்ட்டர்' செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இந்தச் செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த பின்னர் தமது பகுதிகளுக்கு மீண்டும் சென்ற ஆயிரக்கணக் கணக்கான தமிழர்கள், அரசின் மீள்குடியேற்றத் திட்டத்தில் போதியளவு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகிறது எனத் தெரிவிக் கின்றனர்.

''எமக்கு குடி தண்ணீர் வசதியோ அல்லது மலசலகூட வசதியோ இல்லை. காடுகளையே நாம் மலசலகூடமாகப் பயன் படுத்துகிறோம்.'' - என மன்னாரில் மீள் குடியேற்றப்பட்டுள்ள - மூன்று பிள்ளைகளின் தந்தையான - முத்தையா சிவயோக நாதன் (வயது - 53) தெரிவித்தனர்.

பயங்கரவாதத்தில் ஈடுபட்டவர்களை அரசு கண்டிக்கட்டும். அதற்காக அனைத்த மக்களையும் ஏன் தண்டிக்க வேண்டும் - என்று அவர் கேள்வியெழுப்பினார்.

அரசு எமக்கு எல்லா வசதிகளையும் செய்து தருகிறது என உறுதியளித்தது. எனினும் கடந்த இரண்டு மாதங்களாக அவர்கள் எதனையும் செய்யவில்லை என்றார் அவர்.

- இப்படி 'ரொய்டர்' மேலும் குறிப்பிட்டுள்ளது. (சி)


## பயிற்சிப் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?

பத்திரிகைத்துறையில் பணியாற்ற வேண்டுமென்ற ஆர்வமும் துடிப்பும் உங்களிடம் இருந்தால் பயிற்சிப் பத்திரிகையாளர்களாக மாறுவதற்கு உதயன் கைகொடுக்க காத்திருக்கிறான்.
ஆர்வமுள்ளவர்கள் -

- புலனாய்வு இதழியல்
- ஒளிப்பட இதழியல்
- வெளிக்கள இதழியல்
- செய்தியைச் செப்பமாக்கல்
- ஆவண இதழியல்



போன்ற துறைகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து உங்கள் விண்ணப்பங்களை உடனேயே அனுப்பிவையுங்கள்.
பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், முன்னர் பத்திரிகைகளில் உங்கள் ஆக்கங்கள் பிரசுரமாகியிருந்தால் அவற்றின் போட்டோப் பிரதிகள், கல்வித் தகைமை என்பன அடங்குமாறு உங்களது கையெழுத்தில் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

**உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 05.01.2010

➡ விண்ணப்பங்கள பரிசீலிக்கப்பட்டு நடத்தப்படும் தகுதி காண் பரீட்சையில் சித்தியடைபவர்கள் பயிற்சிப் பத்திரிகையாளர்களாக இணைத்துக் கொள்ளப்படுவர்.

➡ பயிற்சிப் பத்திரிகையாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக மாதாந்தம் 5,000 ரூபா வழங்கப்படும்.


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 16 | | 13 |
| 11 | | 01 |
| 1950 | | 2003 |



**மார்க்கண்டு ஆனந்தராசா**

திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி (28.12.2009)

எம் அன்புத் தெய்வமே!
எம் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும்
ஒளியூட்டிய தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்.

இராஜ வீதி, தோப்பு,
அச்சுவேலி.
(91903)
என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்


## ஐங்கரன் காகிதாதிகள்

சகல விதமான அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:

**ஐங்கரன் காகிதாதிகள்**
இல.06, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (91882)

2000 ரூபாவுக்குக் குறையாத பொருள்களைக் கொள்வனவு செய்யும் மாணவர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்படும். இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.


### தவறிவிட்டது

உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடி என்னும் முகவரியுடைய வரதராசா நிசாந்தினி என்பவரின் தே.அ. அட்டை (875942409V) கடந்த 23.11.2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779905440 என்னும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (91905)


### வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக்காணியுடன் கூடிய வீடும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அடைக்கலமாதா கோவிலுக்கு அண்மையில் 1½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434 (91970)

### உடன் வேலைவாய்ப்புகள்

உலகெங்கும் 25 வருடங்களுக்கு மேலாக இயங்கிக் கொண்டிருக்கும் கனடியன் நிறுவனத்தினால் யாழ். நகரில் திறக்கப்பட்டுள்ள இரண்டு கிளைகளிலும் 60 வேலை வாய்ப்புகள் உள்ளன.
Post of Vacancies- Superviser, Acc. Manager, Managers. Call Immediately 021-4900001 0214900350, 0778086581.
அனுபவம் தேவையில்லை, மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். (91899)

### விற்பனையாளர் தேவை

புடைவை வியாபாரம் ஒன்றிற்குப் பழகக் கூடிய அல்லது அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்.
தொடர்பு:
த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்
21, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி -0773086894 (91900)

### வீடு வாடகைக்குத் தேவை

நான்குபேர் ...ண்ட ஒரு குடும்பத்துக்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0777286061, 0212222538 (91901)

### ஆட்டுக்கடாக்கள் விற்பனைக்குண்டு

தனிக்கறுப்பு நிற ஆட்டுக்கடாக்கள் விற்பனைக் குண்டு.
தொடர்பு: V. சண்முகலிங்கம்,
[illegible]
யாழ்ப்பாணம். T.P. [illegible] (91902)


## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் சுப்பிரமணியம்



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நேற்று (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (ராசு)- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான வேலாயுதம்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், கமலாதேவி, நாகேஸ்வரி (லண்டன்), கதிர்காமநாதன், மகேஸ்வரி, சண்முகநாதன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் ஜீவரெட்ணம் (லண்டன்), மகேஸ்வரி, தவராசா, மகேஸ்வரி, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் மாமனாரும், அன்னபூரணம், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கணபதிப்பிள்ளை, நல்லையா, நல்லம்மா ஆகியோரின் சகோதரனும், குமரேசு, காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், கந்தையா, யோகம்மா, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும், ரஜனி, ரஜனிகாந்தன், யாழினி(லண்டன்), சிவகுமார் (கொழும்பு), சிவகாந்தன், சசிகலா (டென்மார்க்), சசிரேகா, சரன்ராஜ், ஜெகதீஸ்வரி, தயாழினி, காந்தரூபன் (டோகா), தவரூபன் (யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்) ஆகியோரின் பேரனும், பவோஜன், வந்தனா, டினேஸ், டிசானி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட் கிழமை மு.ப 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.29/16, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (91898)
தகவல்:
குடும்பத்தினர்

### திருமதி விஜயகுமார் சர்வேஸ்வரி



ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயகுமார் சர்வேஸ்வரி 25.12.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லன் மற்றும் சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமன்- வள்ளி தம்பதியரின் அன்பு மருமகளும் விஜயகுமாரின் அன்பு மனைவியும், யர்த்திகா, யதீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலைஅனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர். (91904)
தகவல்:
விஜயகுமார் குடும்பத்தினர்
(கணவர்-குமார்).

### திருமதி ஆறுமுகம் காசியம்மா

இல.635, கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் காசியம்மா நேற்று (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், தயானந்தன் (பொறியியலாளர்),நித்தியானந்தன் (U.K), சிவானந்தன், விவேகானந்தன் (அதிபர்,யா/உயரப்புலம் மெ.மி. த.க.பா.), காலஞ்சென்ற ஜெயலக்ஷ்மி மற்றும் விபுலானந்தன் (பிரான்ஸ்), விமலானந்தன் (பிரான்ஸ்), சறோஜாதேவி, மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 635, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (91907)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய, கால்நடை வளர்ப்புப் போட்டிகளில் மாவட்ட ரீதியில் வெற்றிபெற்றோரின் அனுபவப் பகிர்வுகள்

**யாழ்.விவசாயத் திணைக்களம் மாவட்ட மட்டத்தில் நடத்திய விவசாயப் போட்டிகளில் வெற்றிபெற்ற விவசாயிகள் தமது அனுபவங்களையும் கருத்துக்களையும் உதயன் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார்கள்.**

### கூடிய விளைச்சலைப் பெற்ற 'நெல்' விவசாயி



**க.அருளானந்தம் நாவற்குழி**

நான் நெற்செய்கையில் ஈடுபட ஆரம்பித்தது 2002ஆம் ஆண்டளவில்தான். அப்போது நெற்செய்கை குறித்து பெரிய அளவில் எதுவும் அறிந்திருக்கவில்லை. இன்றைக்கு ஒரு ஏக்கரில் 80 புசல் நெல் உச்சவிளைச்சலைப் பெற்றிருக்கின்றேன். அதிகூடிய விளைச்சலைப் பெற்ற நெல் உற்பத்தியாளன் என்ற சான்றிதழைப் பெறுகிறேன் என்றால் அதற்கு யாழ்.விவசாயத்திணைக்கள அதிகாரிகளே காரணம். உச்சவிளைச்சலைப் பெற உரியநேரங்களில் காலநேரம் பிந்தாமல் உரங்களைப் போடுவதுடன் நின்றுவிடாது, முன்னதாக உழவு மூலம் புல்லுகளைக் கட்டுப்படுத்தவும் வேண்டும். நான், 3½ மாத நெல்லுக்கு 45-50 நாள்களுக்குள் மணிக்கட்டு உரம் போடுவேன். 4½மாத நெல் எனின் 60 நாள்களுக்குள் போடவேண்டும். இந்தக் கணிப்பில் ஏக்கருக்கு 80 புசலுக்கு மேல் பெற முடியும். பி.ஜி.406, பி.டபிள்யூ. 351 ரகங்கள் நல்லதரம் வாய்ந்தவை. விவசாயத் திணைக்களம் இதனை வழங்குகிறது.

என்னிடம் மில் இருப்பதால் அரிசி உற்பத்தியும் செய்கின்றேன். இம்முறை விவசாய சம்மேளனம் மற்றும் சில விவசாயிகளுக்கு விதை நெல்லும் வழங்கியுள்ளேன். எனது தேவைக்கான கையிருப்பை வைத்துக் கொள்வதால் அரிசி எனக்கு ஒரு பிரச்சினையாக இதுவரை இருக்கவிலலை. வாழ்வுக்கு முக்கிய ஆதாரமான விவசாயத் துறை எமது குடாநாட்டில் மேம்பாடடைய எடுக்கப்படும் முயற்சிகளுக்கு விவசாயிகள் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். சுமார் 60 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் உள்ள பூமி நமது என்கிறார்கள். அவர்கள் தமது தொழிலைச் செய்யக்கூடியதான நிலைமை உருவாக்கப்படுவதுடன் விவசாயிகளுக்குத் தேவையான வளங்களை வழங்கி தொழில் முயற்சிகளில் அவர்கள் விருப்புடன் ஈடுபடவும் அரசாங்கம் உதவ வேண்டும்.

### உழைப்புக்குக் கிடைத்த பரிசு



**வீ.சிவனேஸ்வரி மாதகல்**

உழுந்து, அரிசி, குரக்கன் வகைகளைப் பயன்படுத்திப் போஷாக்கு மிக்க உணவுப் பொருள்களைச் சிறந்த முறையில் தயாரித்தமைக்காக எனக்கு இந்தப் பரிசு கிடைத்துள்ளது. எனது கணவர் விவசாயி என்பதால் போஷாக்கு உணவுக்குத் தேவையான மூலப்பொருள்களைப் பெரிய அளவில் வெளியில் வாங்கவேண்டிய அவசியமில்லை. எனது சுயமுயற்சியாக வீட்டில் இவற்றைச் செய்துவரும் நான் மகளிர் சங்கத்தின் தலைவி என்ற வகையில் சங்கத்தின் மூலம் உறுப்பினர்கள் வருமானம் பெறத்தக்கதாக அங்கும் இந்தத் தொழிலைச் செய்துகொள்ள ஏற்பாடுகளைச் செய்துள் ளேன். ஒருசில சங்கங்கள் மாதந்தோறும் குறிப்பிட்ட ஒரு தொகையைக் கொள்வனவு செய்கிறார்கள்.

நல்லெண்ணை உற்பத்தியும் நான் செய்கிறேன். வருமானம் நான் போடும் முதலைப் பொறுத்தது. மாதம் ரூபா 10 ஆயிரம் செலவு செய்தால் ரூபா 5000/- வருமானமாகக் கிடைக்கிறது. விவசாயம், கால்நடைத் திணைக்களங்கள் இணைந்து இதுபோன்ற உற்பத்திகளுக்கான போட்டி ஒன்றை நடத்தியது. இதுதான் முதல் முறை என நினைக்கிறேன். இன்று எமது சிறார்களில் போஷாக்கின்மையுடையவர்களே அதிகம் என்று கூறப்படுகிறது. பெண்களுக்கு இதில் ஒரு கடமை இருப்பதாக எண்ணுகிறேன். வீட்டில் சும்மா தொலைக்காட்சிப்பெட்டிக்கு முன்பாக இருந்து நாடகங்களில் வரும் கொடூரங்களைப் பார்த்து ரசிப்பதைவிட தங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான போஷாக்கு நிறைந்த சத்துணவுப் பொருள்களைத் தயாரித்து வழங்கினால் அவர்களும் ஆரோக்கியமாக இருப்பார்கள். சின்னதாக ஒரு வருமானமும் கிடைக்கும். இந்தப் பரிசு எனது உழைப்புக்குக் கிடைத்த பெருமை என்பதே எனது எண்ணம்.

### மெதுவாக எடுத்தடி வைப்போம்



**க.வீரசிங்கம் தொட்டிலடி, சங்கானை.**

40 பரப்பில் தோட்டம் இருக்கிறது. 4 பரப்பில்தான் தோட்டம் செய்கிறார். ஏன் அப்படி? என்று கேட்டபோது அவர் கூறியது. 'மெதுவாக எடுத்தடி வைப்போம்' என்று கூறிய வீரசிங்கம் மிளகாய், வெங்காயம், தக்காளி, பூக்கோவா போன்றவைகளையும் செய்கிறேன். வெறுமனே மரக்கறியுடன் நிற்கவில்லை எனது தோட்டச் செய்கை. தோட்டச் செய்கையுடன் நெல் உற்பத்தியும் செய்வதாகக் கூறும் அவர் நான்கு மாடுகள் வளர்ப்பதால் தனது தோட்டத்திற்கு சேதனப் பசளைகளை மட்டும் பயன்படுத்துவதாகவும் பால் விற்பனையில் ஈடுபடுவதால் அதில் மட்டும் மாதம் ரூபா 3000/- வரை கிடைக்கிறது. தோட்டச் செய்கை வழமையானது என்பதால் அதன் வருமானம் வேறு எனவும் தெரிவித்தார். பணத்துக்காக இரசாயன உரங்களையும் கிருமி நாசினிகளையும் பயன்படுத்தக் கூடாது. மக்கள், தமக்கு உணவளிக்கும் விவசாயிகள் தீங்கு ஏற்படக்கூடிய எதையும் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் இருப்பவர்கள்.

என்னைப் பொறுத்தவரை அவர்களின் நம்பிக்கைக்குப் பாதகமாக எதையும் செய்ய மனம் இடம்கொடுக்கவில்லை. சேதனச் செய்கை மூலம் மக்களுக்குப் பாதகமற்ற உணவு உற்பத்தி செய்வதில் இந்த வெற்றி எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. விவசாயத் திணைக்களத்துக்கு எனது நன்றிகள் உரியது.

### முந்திரிகைச் செய்கையே முக்கிய உற்பத்தி



**செ.நிஷாந்தினி உரும்பிராய்**

நீர்வளம் உள்ள பகுதி என்பதால் எல்லாப் பெண்களுமே தமது சுயமுயற்சியாக வீட்டுத்தோட்டம் செய்வதில ஈடுபடுவார்கள் என்பதல்ல. எங்களிடம் 30 பரப்புக் காணி உண்டு. இஞ்சி, மஞ்சள் உட்பட மரக்கறிகள் உற்பத்தி செய்தாலும் முந்திரிகைச் செய்கைதான் எனது முக்கிய உற்பத்தி. தவிர கோப்பிச் செடியும் வைத்திருக்கிறேன். ஒரு போகத்திற்கு 5 கிலோ கிடைக்கிறது. வீட்டுத் தேவைக்குப் போதுமானது. முந்திரிகைச் செய்கையில் மிகவும் கூடுதல் வருமானம் கிடைக்கிறது. போட்டிக்காக வீட்டில் தோட்டம் செய்யவில்லை. அதனால் எனது வீட்டுத் தேவைகளை நிறைவு செய்ய முடிவதுடன் வருமானமும் கிடைக்கிறது. எனது உற்பத்திப் பொருள்கள் நுகர்வோருக்குத் தீங்கற்ற விவசாயத் திணைக்களத்துக்கே விலைக்குக் கொடுக்கிறேன். ஒவ்வொருவரும் சிறிய அளவில் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டால் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்யமுடியும் என்பதுடன் நச்சுத் தன்மையற்ற நல்ல காய்கறிகளை உணவுக்காகப் பயன்படுத்த முடியும். முயற்சியும் நம்பிக்கையும் இருந்தால் விவசாயம் கைநிறையக் காசும் தரும் என்றார்.

### சிறந்த மாமரச் செய்கையாளர்



**சி.செல்வநாயகம் கொடிகாமம்**

சிறந்த மாமரச் செய்கையாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செல்வநாயகம், திருநெல்வேலி விவசாயத் திணைக்களம் வழங்கிய பயிற்சியே தனது மாமரச் செய்கையின் வெற்றிக்குக் காரணமாக இருந்தது எனக் கூறுகிறார். இதுவரை மரங்களைத் தன்போக்கில் வளரவிட்டுக் கிடைக்கக்கூடிய காய்களை விற்பனை செய்துவந்துள்ள இவர் தன்னிடம் 20 மாங்கன்றுகள் இருப்பதாகவும் தான் பெற்ற பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு மேல்நோக்கி வளரும் கொப்புகளை வெட்டிக் கிளைகளில் சூரியஒளி படக்கூடிய முறையில் செய்துள்ளேன் என்றார். வெட்டப்பட்ட கிளைகளில் முளைக்கும் சிறிய கிளை களைக் கிள்ளிவிடவேண்டும். கோடை காலத்தில் காய்கள் குறைவாக இருக்கும். எனினும் கோடையில் காய்க்கும் காய் களே நன்றாக இருக்கும். இக்காலத்தில் சுமார் 15ஆயிரம் ரூபா வரை பெறக்கூடியதாக இருக்கிறது. உற்பத்திக்காகப் பெரிய செலவுகள் என்று எதுவும் கிடையாது. பின்நேரங்களில் புகைபோடுகிறேன். மருந்துகள் பயன்படுத்துவதில்லை. பூச்சித் தாக்கங்களை புகை மூலம் கட்டுப்படுத்த முடிகிறது. மாமரம் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றதால் ஏனையவர்களும் தங்களது மாமரங்களைக் கத்தரித்துச் சீரமைக்க எனது உதவியைக் கோருகிறார்கள். அதனாலும் எனக்கு வருமானம் கிடைக்கிறது. மாமரச் செய்கை யின் மூலம் எனது வாழ்க்கை நல்ல முறையில் சென்றுகொண்டிருக்கிறது என்றார்.

**சந்திப்பு: லக்ஸ்மன்**

---

## தனியார் பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள் அடுத்தமாதம் முதல் சீருடை அணியவேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.மாவட்டத்தில் சிற்றூர்தி சேவைச் சங்கத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் மினிபஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோர் அடுத்தமாதம் தொடக்கம் சீருடைகள் கட்டாயம் அணிய வேண்டும் என்று இலங்கை தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தென்னிலங்கையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ்களின் நடத்துநர், சாரதிகள், அதற்கான சீருடைகளை அணிந்தவாறு கடமையில் ஈடுபடுகின்றனர்.

அத்தகைய நிலைமை யாழ்ப்பாணத்தில் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. எனவே தற்போது யாழ்ப்பாணத்தில் சுமுகமான நிலை நிலவுவதால் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் செயற்பாடுகள் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தனியார் சிற்றூர்திச் சேவையில் ஈடுபடும் மினிபஸ்களின் சாரதி, நடத்துநர், சீருடைகளை அடுத்தமாதம் முதல் அணிந்துகொள்ள வேண்டும்.

அதற்கான சீருடைத் துணிகளை யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்திடம் அடுத்த வாரமளவில் கையளிக்கவுள்ளேன்-என்றார். (04-09)

## காரைநகர்மணிவாசகர் சபையின் 55ஆவது விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் 55 ஆவது ஆண்டு மணிவாசகர் விழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நான்கு தினங்களுக்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் இந்த விழா நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் ஆரம்பமாகும் முதல் நாள் நிகழ்வில் ஆதீனகர்த்தா மு.சுந்தரலிங்கம் திருவாசகத் திருமுறை ஒத, சபைப் பொருளாளர் நடராஜா பாரதி வரவேற்புரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து 'அவனருளாலே' என்னும் தலைப்பில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சொற்பொழிவு நிகழ்த்துவார். தொடர்ந்து சபையினால் நடத்தப்பட்ட சைவ சமயப்பரீட்சையில் முதன்மைச் சித்தி பெற்ற 5 மாணவர்களுக்கு தங்கப் பதக்கமும் வகுப்புரீதியாக 5 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். (1-236)







கரவெட்டி ஞானா[illegible] கல்லூரியின் பரிசளிப்புவிழா, [illegible] சாலை அதிபர் ச.ஸ்ரீராமச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற[illegible] எடுக்கப்பட்ட படங்களே இவை.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்[illegible] வலயக்கல்வி அபிவிருத்திப் பிரதிப் பணிப்பாளர் ச.புஸ்பலிங்கம், அவரது பாரியார் திருமதி பு.புஸ்பகுமாரி, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினர் ச.புஸ்பலிங்கம் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், பிரதம விருந்தினரின் பாரியார் மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: மூர்த்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுண்ட ஏகாதசி விரதமும் அதன் மகிமையும்

இன்று வைகுண்ட ஏகாதசி விரத நன்னாள். இந்தவிரதம் மிகவும் புனிதமும் மகத்துவமும் மிக்க ஒரு விரதமாகும். காத்தற் கடவுளாகிய எம் பெருமான் ஸ்ரீ விஷ்ணுவைக் குறித்து அனுஷ்டிக்கப் பெறுகின்ற இந்த வைகுண்ட ஏகாதசி விரதம் சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இந்த வைகுண்ட ஏகாதசி விரதம் என்றால் என்ன? இது ஏன் அனுஷ்டிக்கப்படுகின்றது? இதன் தத்துவார்த்தம் என்ன? இதை அனுஷ்டிப்பதால் என்ன நன்மை கிடைக்கும்? இதனை நோற்று விரதங்காத்தால் வைகுண்டம் போகலாமா? என்றெல்லாம் பல கேள்விகள் நம்மிடையே எழுகின்றன. இந்த வினாக்களுக்கு விடை தேடுமாப்போல சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

மகா விஷ்ணு புராணத்திலே இது பற்றியுள்ள விபரத்தினைச் சிந்தனையில் எடுப்போம்.

எங்களையெல்லாம் காத்து இரட்சித்துத் திருவருள் புரிகின்ற மாகாவிஷ்ணுவாகிய எம்பெருமான் ஒருமுறை பிரஜை சமுத்திரத்திலே ஆலிலைமேல் பள்ளிகொண்டிருந்த வேளையில் தம்முடைய உந்திக் கமலத்திலிருந்து பிரம்மாவைத் தோற்றுவித்தார்.

அவ்வாறு தோன்றிய பிரம்மாவுக்கு ''நான்'' என்ற அகங்காரமும் எனது என்ற மமதையும் ஏற்பட்டது. அந்த வேளையில் ஸ்ரீ மாவிஷ்ணுவுடைய காதுகளிலிருந்து இரண்டு அசுரர்கள் தோன்றினார்கள். அந்த இரண்டு அசரர்களும் பிரம்மாவைக் கொல்வதற்கு எத்தனித்தார்கள். அப்போது மகா விஷ்ணு பிரமனைக் கொல்ல வேண்டாம் என்று தடுத்தார். அதனால் அந்த இரு அசுரர்களும் எம் பெருமானாகிய ஸ்ரீ மாகாவிஷ்ணுவிடம் அகங்காரமும் கோபமும் கொண்டு கர்ஜித்தார்கள். அப்போது விஷ்ணுவானவர் ''இப்படி அகங்காரம் கொண்டு கத்துகின்ற நீங்கள் என்னால் கொல்லப்பட்டு அசுரர்களாகப் பிறக்கக் கடவது'' என்று சபித்தார். அதனால் அந்த

**சிவநெறிக்கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்**

அசுரர்கள் இருவரும் அவ்வாறு எங்களை தண்டிக்க வேண்டாம். தேவரீரோடு ஒரு மாதம் போர் புரிந்து ஈற்றில் உங்களுடைய அனுக்கிரகத்தால் நாங்கள் மோட்ஷமடைய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுதலைப் பெருமான் ஏற்றுக்கொண்டார்.

அதன் பயனாக மார்கழி மாதம் வருகின்ற சுக்கில பட்ஷ ஏகாதசியன்று வடக்கு வாசலைத் திறந்து அந்த அசுரர்கள் இருவரையும் ஸ்ரீ மகாவிஷ்ணு, வானவர் வைகுண்டத்திலே சேர்த்துக்கொண்டார். அவ்வேளையில் அசுரர்கள் இருவரும் எங்களுக்கு வைகுண்டத்தில் இடமளித்தது போல் மார்கழி மாத சுக்கிலபட்ச ஏகாதசி அன்று சொர்க்கவாசல் வழியாக நுழைந்து தங்களை வழிபாடு செய்கின்ற எல்லோருக்கும் நன்னருள் புரிய வேண்டும் என்று எம் பெருமானை பிரார்த்தித்துக் கொண்டார்கள். அதன் படியே வருடம் தோறும் மார்கழியில் வருகின்ற இந்த வைகுண்ட ஏகாதசி தினத்தில் வைஷ்ணவத் தலங்களில் சொர்க்கவாசல் வழியாக வந்து ஸ்ரீ மகா விஷ்ணுவை வழிபடுபவர்கள் அனைவரும் பிறவிப் பிணி நீங்கி பூமியில் பிறவாத பெரும் பயனைப்பெற்று முத்தியடைகின்றனர் என்று கூறப்படுகின்றது.

அது முதலாக இந்த வைகுண்ட ஏகாதசிப் பெருநாளில் உண்ணாமலும் உறங்காமலும் இருந்து விரதங்காத்து ஒரே சிந்தனையுடன் விஷ்ணுவின் திருவடிகளை வணங்கி சிந்தித்து, வந்தித்து, செபித்து அடியார்கள் நன்மையடைகின்றனர்.



ஆகவே இன்று பெருமால் கோயிலில் ஸ்ரீ வெங்கடேசனைப் பிரார்த்தனை செய்து சுவர்க்க வாயில் ஏகாதசி என்று சொல்லப்படுகின்ற வைகுண்ட ஏகாதசி பெருவிழாவில் அடியார்கள் அனைவரும் பங்குபற்றி பேரானந்த மயமான பெருவாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சுகபோக வாழ்வுக்கு அடிகோலுவோமாக. ★

## விசேட பஜனை

யாழ்ப்பாணம், டிசெ.28

பாரத்தனை ஐயப்பன் ஆலயத்தில் இடம்பெற்றுவரும் விஷேட பஜனையில் கோண்டாவில் பிரம்ஸ்ரீ வாசுதேவக் குருக்களின்பஜனை கச்சேரி இன்று திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு ஆரம்பமாகும். ஐயப்பன் அடியார்கள்வந்து கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(1)

## பரிசு வழங்கும் நிகழ்வு

சுழிபுரம்,டிசெ.28

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் 2009 இல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பராட்டி பரிசில் வழங்கல் சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டப்பாடசாலைகள் சங்கானை கோட்டம் பதினாறு பாடசாலை மாணவர்கள், சண்டிலிப்பாய் கோட்ட பதினெட்டு பாடசாலை மாணவர்கள் பரிசு பெறவுள்ளனர்.

இவர்களுக்கான பரிசு வழங்கல் சங்கானை கலாசார மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குசம்மேளனத் தலைவர் க. புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

(28)


## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஆறுமுகம் கனகரட்ணம்

திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி

(28.12.2009)

மலர்வு 17★02★1924

உதிர்வு 07★01★2009

ஆண்டு ஒன்று சென்றாலும்
அன்பான வார்த்தைகளும்
அமைதியான உங்கள் பண்பும்
அரவணைக்கும் நற்குணமும்
என்றும் நிலைத்து நிற்கும் எம்மனதில்
ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டி நிற்கும்

'பிருந்தாவனம்',
நவாலி வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(91539)

## இதயம் நெகிழும் 27 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
பவளரத்தினம்
சரஸ்மேற்றின் (சரஸ்)

அவதாரம் 07★10★1950

அமரத்துவம் 02★12★2009

குடும்பத்தின் ஆணிவேராய் பாசத்தின் நிறைகுடமாய்
தாயாகத் தந்தையாக வழிகாட்டிய
புன்னகை சிந்தும் பொன்முகத் தாயே!
புலம்புகின்றோம் நின் நினைவுடனே
விண்ணுறைய வேண்டுகின்றோம் மன்னவன் போசுவை.

அன்னாரின் நினைவுத் திருப்பலி இன்று திங்கட்கிழமை (28.12.2009) முற்பகல் 11 மணிக்குக் கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய உபசரணையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல 07, சென்.மேரிஸ்,
முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

(91897)

பிரிவின் ஆற்றாமையுடன்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## யாழ். - வண்ணை
## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
## சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்
## இன்று (28.12.2009) திங்கட்கிழமை

விசேட நிகழ்ச்சி நிரல்

மாலை: 5மணி - வசந்த மண்டபப் பூஜை, சுவாமி வீதி உலா தொடர்ந்து மங்கள வாத்தியம் கு. பாலமுரளி குழுவினர்
இரவு 7.30 மணி - பஜனை - தேவஸ்தான பஜனைக்குழுவினர்
8.30 மணி - ஈழத்துப் பிரபல கலைஞர்கள் பங்குபற்றும் இசை அர்ச்சனை
11.00மணி - சொற்பொழிவு - பக்தியின் மகிமை திரு. இரா.செல்வவடிவேல்
12.00 மணி - சொற்பொழிவு-திரு.செ.ஸ்கந்தசத்தியதாசன் M.A (ஆசிரியஆலோசகர், வலிகாமம் கல்விவலயம்)
1.00மணி - சங்கீதக் கச்சேரி- ஆசிரியர் திரு.ந.ஸ்ரீராம்குமார், -ஆசிரியர் திரு.ந.லக்ஸ்மன்குமார்.

தொ. பே - 021 222 2476

ஆதீன மகாசபை.

(கி/563536)

## மஹஜன சம்பத / மஹாஜன சம்பத / Mahajana Sampatha

25.12.2009

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2192

வெற்றி எழுத்து U — வெற்றி எண்கள் 7 0 5 6 5 9

| | | | |
|---|---|---|---|
| | U 7 0 5 6 5 9 | ரூபா. 11,224,334/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 7 0 5 6 5 9 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | 0 5 6 5 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 09 |
| 3 பரிசுகள் | 5 6 5 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 112 |
| 4 பரிசுகள் | 6 5 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1071 |
| 5 பரிசுகள் | 5 9 | ரூபா. 100/= | பரிசுகள் 10542 |
| 6 பரிசுகள் | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 105695 |
| 7 பரிசுகள் | 7 0 5 6 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 10 |
| 8 பரிசுகள் | 7 0 5 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 106 |
| 9 பரிசுகள் | 7 0 5 | ரூபா. 100/= | பரிசுகள் 1063 |
| 10 பரிசுகள் | 7 0 | ரூபா. 50/= | பரிசுகள் 10665 |
| 11 பரிசுகள் | U | ரூபா. 20/= | பரிசுகள் 42,178 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 11,948,210.00

Rs. 11,224,334.00

தேசிய லொத்தர் சபை

## பிறந்தநாள் வாழ்த்தும் ஓராண்டு நினைவஞ்சலியும்



அமரர்
ஆண்டி முருகையா

தோற்றம் 25.12.1935

மறைவு 07.01.2009

திதி: ஏகாதசி

எங்கள் குடும்பத்தின் தன்னிகரில்லாத் தலைவனாய்
எம்மை எல்லாம் வழிப்படுத்தி
எம்மை எல்லாம் தரணியில் தலை நிமிர்ந்து வாழவைத்த
தவப் பெருமகன் நீங்கள்!
ஆண்டு ஒன்று நகர்ந்தாலும் உங்கள் பாசம்
என்றும் விட்டு அகலாது!

எங்கள் கண்ணீர்ப் பூக்கள் என்றென்றும் உங்களுக்காக
ஆண்டவன் அடியில் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தியேட்டர் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(91873)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.09.1986
★ யாழ்.குடாநாட்டு நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக வெளிநாட்டுச் செய்தியாளர்கள் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்.
★ புதுடில்லியில் நடைபெறவிருக்கும் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பான மூன்றாம் கட்டப்பேச்சுக்களில் கலந்துகொள்ளுமாறு சுதந்திரக் கட்சிக்கும் இலங்கை அரசு அழைப்பு.
★ புதுடில்லியில் இடம்பெறவுள்ள மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் சமசமாஜ க்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மக்கள் கட்சி என்பவற்றின் தலைவர்களும் கலந்து கொள்வர்.

02.09.1986
★ இலங்கை இனப்பிரச்சினை குறித்து ஹராரேயில் நடக்கும் அணிசேரா இயக்க மாநாட்டில்கலந்து கொள்ளும் பிரதமர் பிரேமதாசாவும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் மூன்று சுற்றுப் பேச்சுக்களை நடத்துவர்.
★ அரசபடைகளுக்கும் போராளிகளுக்கும் இடையே வசாவிளானில் நடந்த மோதலில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய கட்டடங்கள் தகர்ப்பு.
★ பௌத்த மத பீடங்கள் ஒன்றிணைந்து அரசின் மாகாண சபை யோசனைகளைக் கைவிடுமாறு ஜனாதிபதி ஜே.ஆரை நிர்ப்பந்திக்க முடிவு.

03.09.1986
★ தமிழ்ப் போராளிகளிடம் தரையிலிருந்து வானத்துக்கு ஏவும் பிரிட்டிஷ் தயாரிப்பு'சாம்' ஏவுகணைகள் உள்ளதாக வடபகுதி இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவிப்பு.
★ தீவிரவாதிகளுக்கு எதிரான இறுதித் தாக்குதலுக்கு அரசுதிட்டம் வகுத்து வருவதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி தெரிவிப்பு.
★ கைவிடப்பட்ட வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் மீண்டும் முகாம் அமைத்து நிலை கொள்ளுமாறு வடபகுதி இராணுவத்துக்கு அரசு உத்தரவு.

04.09.1986
★ மன்னார் நகரம் முழுவதும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முழுக் கட்டுப் பாட்டில் வந்தது.
★ தமிழ்த் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சுமார் நானூறு சிங்கள இளைஞர்கள் பொலிஸாரால் கைது.
★ என்னை அழைத்துக்கொண்டு போருக்குப் போவதற்கு முன்னர் ஜனாதிபதி ஜே.ஆர் ஒரு தடவை வடபகுதிக்குச் சென்று திரும்பி வரட்டும் பார்க்கலாம் என சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ கிண்டல்.

05.09.1986
★ கிழக்கில் விமானங்கள் மீது போராளிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு விமானம் சேதம்: மற்றொன்று தரையிறங்க முடியாது கொழும்புக்குத் திரும்பிச் சென்றது.
★ தனிநாடு தவிர்ந்த வேறு வழியை இந்தியா காட்டினால் அதனை எமது மக்கள் முன் சமர்ப்பிப்போம் என விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் தெரிவிப்பு.
★ அரசு-கூட்டணி பேச்சுக்களின் பெறுபேறுகளை நுணுக்கமாக ஆராய்ந்த பின்னரே போராளிகள் தரப்புக்களைப் பேச்சுக்களில் பங்குபற்ற அழைப்பதா? இல்லையா? என்பதை இந்தியா தீர்மானிக்கும் எனத் தெரிவிப்பு.

07.09.1986
★ புதுடில்லியில் நடைபெறவுள்ள மூன்றாம் கட்டப் பேச்சுக்களின் போது தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரும் பங்குபற்றுவார் என ஊகம் தெரிவிப்பு.
★ ஹராரேயில் தம்மைச் சந்தித்த இலங்கைப் பிரதமர் பிரேமதாச, இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக முன்வைத்த மூன்று கோரிக்கைகளையும் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி முற்றாக நிராகரிப்பு.
★ ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தால் நடத்தப்படும் ஈழம் தபாற்சேவைக்கான முத்திரைகள் குடா நாட்டில் புழக்கத்தில் விடப்பட்டன.

08.09.1986
★ முதலாம் கட்டப் பேச்சுக்களின் போது இணங்கிய விடயங்களை இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் வாபஸ் வாங்கியதன் மூலம் இலங்கை அரசு தனக்கு அரசியல் துணிச்சல் இல்லையென நிரூபித் துள்ளதாக இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.
★ மூன்றாம் கட்டப் பேச்சுக்களுக்கு முன்னர் அரசியல் கட்சிகளின் மாநாடொன்றைக் கூட்ட ஜனாதிபதி ஜே.ஆர் தீர்மானிப்பு.
★ சகல பிரிவினைவாத பிரகடனங்களையும் அணிசேரா இயக்க நாடுகள் கண்டிக்க வேண்டும் என இலங்கை அரசு முன்வைத்த பிரேரணை அணிசேரா இயக்க நாடுகள் மாநாட்டில் கைவிடப்பட்டது.

09.09.1986
★ இராணுவத்தினரால் ஏவப்பட்ட 'ஷெல்'லால் யாழ்.பெரியாஸ்பத்திரி 'வார்ட்டு'க்கள் சேதம்; தெய்வாதீனமாக நோயாளிகள் உயிர்தப்பினர்.
★ யாழ்.கோட்டை முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் போராளிகளால் அடுக்கி வைக்கப் பட்டுள்ள மண்மூடைகள் அகற்றப்படும்வரை 'ஷெல்' தாக்குதல்கள் தொடருமென ஆயுதப் படை உயரதிகாரி யொருவர் தெரிவிப்பு.
★ மாகாணசபை யோசனைகளை ஆட்சேபித்து கண்டியில் மகாசங்கத்தைச் சேர்ந்த பிக்குமார் உண்ணா விரதம் அனுஷ்டிப்பு.

10.09.1986
★ யாழ்.ஆஸ்பத்திரி மீதான இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதலைக் கண்டித்து யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்களும், ஊழியர்களும் யாழ்.செயலகம் வரை ஊர்வலம்.
★ ஹராரேயில் தம்முடான சந்திப்பின் பின்னர் இந்தியப் பிரதமர் தெரிவித்த கருத்து, அவர் சிலரால் தவறான முறையில் வழிநடத்தப்படுவதாகத் தோன்றுவதாக பிரதமர் பிரேமதாச விமர்சிப்பு.
★ மாகாண சபைக்கு வழங்கப்படும் அதிகாரங்களை ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியால் வாபஸ் பெறப்பட முடியுமென தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி தெரிவிப்பு.

11.09.1986
★ நாட்டில் யுத்தநிலை மேலும் ஒருவருடம் நீடிக்குமானால் நாடு வங்குரோத்து நிலைக்கு உட்பட நேருமென நிதி அமைச்சர் ரொனி டி மெல் எச்சரிக்கை.
★ திருகோணமலை தமிழரிடம் பறிபோவதை அனுமதிக்க இயலாது என்பதால் வடக்கு-கிழக்கு இணைப்பு யோசனையை எதிர்ப்பதாக சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.
★ தமிழீழம் அமையப் போவதைத் தடுக்கவே அரசு மாகாண சபைகளை அமைக்கத் தீர்மானித்துள்ளதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி அறிவிப்பு.

12.09.1986
★ திருகோணமலை மாவட்டத்துக்கு 'லக்சபானா' மின்சாரம் வழங்கும் வயர்களைத் தாங்கும் பிரதான கோபுரங்களில் ஒன்று குண்டுவைத்து தகர்க்கப்பட்டதால் திருகோணமலை மாவட்டம் இருளில் மூழ்கியது.
★ இலங்கை அரசு தமிழ்மொழிப் பிராந்தியம் வழங்குவதற்கு எந்த அளவுக்கு உடன்பாடாக உள்ளது என்பதைப் பொறுத்தே தமிழ்ப் போராளிகள் தரப்புக்களைப் பேச்சில் கலந்துகொள்ள அழைக்க இயலுமென இந்திய அரசு தெரிவிப்பு.
★ ஹராரேயில் வைத்து இந்தியப் பிரதமர் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் தமக்கு குழப்பத்தையும் கவலையையும் தருவதாக ஜனாதிபதி ஜே.ஆர், தூதுவர் டிக்ஸிற்றிடம் தெரிவிப்பு.

13.09.1986
★ இலங்கைக் கடலில் இந்தியப் படகுகள் அத்துமீறிப் பிரவேசிப்பது அதிகரித்து வருவதை இந்திய வெளியுறவு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருமாறு தூதுவர் பேர்னாட் திலகரத்னவுக்கு இலங்கை அரசு பணிப்பு.
★ திருகோணமலை நகரில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளில் 300 தமிழர்கள் விசாரணைக்காகத் தடுத்துவைப்பு.

14.09.1986
★ பிரஸல்ஸ் நோக்கிச் சென்ற விமானமொன்று கனடா விமான நிலையத்தில் தரித்து நின்ற போது அதில் பயணம் செய்த 9பேர் கொண்ட தமிழ்க் குடும்பமொன்று விமானத் திலிருந்து இறங்கி கனடா அதிகாரி களிடம் அரசியல் தஞ்சம் கோரியதையடுத்து கனடாவில் தங்க அனுமதிப்பு.
★ புதுடில்லியில் நடைபெறவுள்ள மூன்றாம் கட்டப் பேச்சுக்களுக்கு இலங்கையில் உள்ள சகல அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சிகளையும் அழைக்க வேண்டுமென இந்திய அரசிடம் இலங்கை அரசு கோரிக்கை முன்வைப்பு.
★ மலைநாடு அமைவது வெகுதூரத்தில் இல்லை எனவும், அதற்கு அமைச்சர் தொண்டமான் கவர்னராகவும் செல்லச்சாமி முதலமைச்சராகவும் ஆவர் எனவும் மகா நாயக்கதேரர் ஊகம் தெரிவிப்பு.

15.09.1986
★ முதலில் மாகாணசபை; அதன்பின்னர் எல்லைகள் நிர்ணயிப்பு என இலங்கை அரசு இந்தியாவிடம் சமர்ப்பித்த யோசனையை த.வி.கூட்டணி முற்றாக நிராகரிப்பு.
★ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பேச்சுக்கள் நடத்த ஜனாதிபதி ஜே.ஆர் இந்தியாவிற்குச் செல்ல இருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.
★ இந்தியாவில் நடைபெறவிருந்த 'சார்க்' நாடுகளின் உச்சி மாநாடு திடீரென ரத்து.

# மீளக் குடியமர்ந்தோரின் நலன்களைக் கவனிக்கும் பாரிய பொறுப்பு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உண்டு.

## இணையத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.28

இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதார நலன்களைக் கவனிக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உள்ளது என யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த புதன் கிழமை இணைய அலுவலகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

கடந்த கால யுத்தத்தின் விளைவாக எமது மக்கள் பல்வேறு அழிவுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாம் குரல் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒருலட்சத்து 172 ஆயிரம் மக்களின் தேவைகளை இவ்வாறு கவனிக்க வேண்டிய பொறுப்புகள் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் உண்டு.

மக்களின் தேவைகளை, பிரச்சினைகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் அறிந்து செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாகச் சிறப்பான சேவையை வழங்க முடியாதிருந்தது. ஆனால் தற்போது யுத்தம் நிறைவு பெற்றிருக்கிறது. இந்நிலைமையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது சேவைகளை உரிய முறையில் வழங்கக்கூடியதாக இருக்கும்.

யுத்த காலத்தின் போது கைது செய்யப்பட்ட, காணாமல் போனோரின் நிலைமை தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும்-என்றார். (04-14)

# யாழ்.மாவட்ட பெண் சாரணியர்களுக்கு மலேஷியாவில் பயிற்சி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்.டிசெ.28

யாழ்.மாவட்ட பெண் சாரணியர்களுக்கு மலேஷியாவில் பயிற்சியளிப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட பெண் சாரணிய அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் திருமதி நீ.தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

இலங்கையில் பெண் சாரணியர்களின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கதாக உள்ள போதிலும், யாழ்.மாவட்டத்தில் அவ்வாறான நிலை இன்னும் ஏற்படவில்லை. இது எமக்கு மனவேதனை அளிக்கத்தகும் விடய மாகவே இருந்து வருகிறது.

இந்நிலைமையில், மலேஷிய பெண் சாரணிய அமைப்பின் சர்வதேச இணைப்பாளர் ஜெயதேவி சுப்பிரமணியம் அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்தபோது, இந்த விடயத்தை அவரிடம் எடுத்து விளக்கியிருந்தோம்.

யாழ்.மாவட்ட பெண் சாரணிய அமைப்பின் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்குரிய ஆலோசனைகளை மலேஷிய இணைப்பாளர் எமக்கு வழங்கியிருந்தார். அத்துடன் பெண் சாரணர்களை மலேசியாவிற்கு அழைத்து பயிற்சி வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

அந்த வகையில் முதற்கட்டமாக 30 பெண்சாரணியர்களுக்கும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் ஐவருக்கும் பயிற்சி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் மலேஷியாவில் நடைபெறவுள்ள 10 நாள் பயிற்சிப்பட்டறையில் இவர்கள் கலந்துகொள்ள ஏற்பாடுகள் நடந்துவருகின்றன - என்றார். (ஒ-14)

# தென்மராட்சியில் 18 பயனாளிகளுக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம்.டிசெ.28

தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த 18 பேருக்குச் சுயதொழில் உதவிக் கொடுப்பனவுகள் எதிர்வரும் முப்பதாம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் வழங்கப்படவுள்ளன.

இதன்போது பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வருமாறு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

ஆடு, மாடு, கோழி என்பவற்றை வளர்பதற்காக கீழ் குறிப்பிடப்படும் ஒவ்வொருவருக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளன. பயனாளிகள் விபரம் வருமாறு-

இ.கமலதேவி-மீசாலை கிழக்கு, வை. ஆச்சிப்பிள்ளை-மறவன்புலோ சந்தி, த.வசந்தராணி-சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி, சு.பரமேஸ்வரி-உசன், செ.மல்லிகா தேவி-நாவற்குழி தெற்கு, செ.குபேந்திர ராணி-நுணாவில் மத்தி, த. பத்மஜோதி-மீசாலை வடக்கு, கோ.ஜீவமலர்-மீசாலை மேற்கு, சி.அழகராசா-மிருசுவில் தெற்கு, ம.கமலாதேவி-மட்டுவில் வடக்கு, ம.ஜெகதீஸ்வரி-பாலாவி வடக்கு, வா.சிவபாக்கியம்-கல்வயல், சி.கவிதா- மட்டுவில் வடக்கு, ந.சறோஜாதேவி- தவசிகுளம், ச.பத்மாவதி-சண்முகானந்தா வீதி கல்வயல், ந.கனகம்மா-வெள்ளாம் போக்கடி, அ.சுஜீவன்-கைதடி தெற்கு, இ.தங்கராசா-மீசாலை வடக்கு. (04-7-207)

# ஆனந்தகுமார சுவாமி விடுதியினுள்ளும் வீதியிலும் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆண்கள் விடுதி அமைந்துள்ள ஆனந்தகுமார சுவாமி வளாகத்தில் மழை வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது.



கடந்த ஒரு வாரமாகப்பெய்த மழையைத் தொடர்ந்து விடுதி வளாகத்தினுள்ளும் அதற்கு முன்னால் உள்ள இராமநாதன் வீதியிலும் வெள்ளம் தேங்கியுள்ளமையால் பயணிகள், பல்கலைக்கழக, மாணவ, மாணவிகள் மற்றும் வாகனங்களிலும் செல்பவர்கள் ஆகியோர் பெரும் சிரமங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இந்தப் பகுதியில் வெள்ளம் தேங்கிக் காணப்படுவதனால் அப்பகுதியில் உள்ள வீடுகளிலும் மாணவர் விடுதியிலும் நுளம்புக்கடித்தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட பகுதியில் வெள்ளம் ஓடக்கூடிய வகையில் வடிகால் அமைப்புக்கள் காணப்படாமையாலேயே மழை காலங்களில் வெள்ளநீர் தேங்கி இப்பகுதியில் பெரும் நெருக்கடியான நிலமை ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் ஆத்திசூடிக் குளம் அமைந்திருந்த பகுதியிலேயே அந்தக் குளத்தை மூடி விட்டு ஆனந்தக்குமாரசுவாமி விடுதி அமைக்கப்பட்டதாகவும் எனினும் குளம் இருந்த பகுதியை நோக்கிப்பாய்ந்து வரும் வெள்ளத்தை திசை திருப்பும் வகையிலான வடிகாலமைப்பு இத்தனை வருடங்களான பின்னரும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இதனாலேயே ஒவ்வொரு வருடமும் வெள்ளத்தினால் இப்பகுதி பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-86)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் இன்று புதிய கட்டடத் தொகுதி திறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், டிசெ.28

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள வைத்திய நிபுணர்கள் விடுதி, மருத்துவ களஞ்சியம் ஆகியன அடங்கிய கட்டடத் தொகுதியின் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், ''நிக்கொட்'' திட்டப்பணிப்பாளர் ரி.லங்கா நேசன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஈ. ஞானஜோதி ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்."நிக்கொட்" அமைப்பின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.சிவரூபன், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், யாழ்.கட்டடத் திணைக்களப் பிரதம பொறியிலாளர் க.குகநேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் மேலாண்மைச் சட்டத்தை இல்லாதாக்க மீனவர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்

*'மீனவரின் வயிற்றில் அடிக்கும் புதிய சட்டம்; இந்திய அரசு கொண்டுவருவதன் பின்னணி' என்ற தலைப்பில் நேற்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.*

*(நேற்றைய தொடர்ச்சி.....)*

புயல், துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட காரணங்களால் மரணமும், உடல் ஊனமும் மீனவர் வாழ்வில் சர்வசாதாரணமாகிவிட்ட நிலையில் குடும்பத்தில் அதிக உறுப்பினர்களின் தேவை அவசியமாக இருக்கிறது. அப்போதுதான் இதுபோன்ற இடர்களை சமாளித்துக் கொண்டு, மீன்பிடித் தொழில் செய்து குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்பது அவர்களின் எதார்த்தம்.

வெள்ளப்பள்ளம் ஊராட்சி மன்றத் தலைவி ஜெயா சுப்பிரமணியனிடம் பேசியபோது, மீனவர்களுக்குக் கடலில் ஏற்படும் ஆபாயங்களைக் களையவே கடலோரக் காவற்படை அமைக்கப் பட்டது. மீனவர் பதிவுகள், மீன்பிடி தொழிலைக் கவனிக்கும் மீன் வளத்துறையிடம் உள்ளது.

இச்சட்டம் மீனவர்களின் உரிமம் தொடர்பான பதிவு நடைமுறைகளை மீன்வளத் துறையிடமிருந்து பிடுங்கி, கடலோரக் காவல் படையினரிடம் கொடுக்கிறது. இது நடைமுறையில் பல சிக்கல்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தும். அதிகாரங்களைக் கடலோரக் காவற்படையிடம் ஒப்படைத்தால், மீனவர்களுக்குத் தேவையான உதவிகளை அப்படையினர் எப்படிச் செய்வார்கள் என்று த.க.குழுவினரைப் பார்த்துக் கேட்டார்.

**ஐநூறு மீனவர் இதுவரை படுகொலை**

தமிழ்நாடு மீனவர் இளைஞர் பேரவை மாநிலப் பொதுச்செயலாளர் செ.செரோன்குமார் (இராமேஸ்வரம்) த.க. குழுவினரிடம் கூறியவை வருமாறு:-

மீனவர் நலம் சார்ந்த திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. இணையத்தளங்களில் சட்ட மசோதாவை அரசு வெளியிட்டுள்ளது. வரும் குளிர்கால கூட்டத் தொடரில் இதைத் தாக்கல் செய்து சட்டம் ஆக்கிவிட இந்திய அரசு முயல்கிறது. ஏற்கெனவே இராமேஸ்வரம் தீவில் சிங்கள அரசின் துப்பாக்கிச் சூட்டுக்கும், கொலை வெறித்தாக்குதல்களுக்கும் சிக்கி, பிடித்த மீன்களை பறிகொடுத்துவிட்டு ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாக கரை திரும்புவது அன்றாட நிகழ்வாகிவிட்டது.

இதுவரை ஐநூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் சிங்கள கடற்படையின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியாகியுள்ளனர். விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் தமிழீழப் பகுதி இருந்தவரை தமிழக மீனவர்கள் பாதுகாப்பாக இருந்தனர் என்பதை இங்கே கவனிக்க வேண்டும்.- என்றார் அவர்.

உலகமயமாதல், தாராளமயமாதல், தனியார்மயமாதல் என்ற கொள்கைக்கு அடிபணிந்து இயற்கை சுற்றுலா வழங்கிய அந்நிய செலாவணி என்ற மாயையை நம்பி ராஜீவ்காந்தி கடந்த 19.02.1991 அன்று கடற்கரையின் வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில், பன்னாட்டு உள்நாட்டு தொழில் நிறுவனங்களை திருப்திப்படுத்திட மீனவர் பயன்பாட்டுப் பகுதியை ஐநூறு மீற்றரில் இருந்து இருநூறு மீற்றராகக் குறைத்தார்.

கடல்மீன் தொழில் ஒழுங்காற்றல் மற்றும் மேலாண்மைச் சட்டம் 2009 சட்ட முன்வடிவு இதுவரை மீனவர்களின் கருத்துகளை அறிவதற்கான எவ்வித முயற்சியையும் எடுக்கவில்லை. கடலும் அதன் வளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் மீனவர்கள் ஒன்றிணைந்து இந்தச் சட்டத்தை எதிர்ப்போம் என்றார், தமிழ்நாடு மீனவர் சங்கம் ஏ.ஐ.டி.யூ.சி (இராமேஸ்வரம்) மாநிலச் செயலர் முருகானந்தம்.

**கச்சதீவு தாரைவார்ப்பு**

கடந்த 1974 ஆம் ஆண்டில் மீனவர்களின் கருத்தை அறியாமலேயே கச்சதீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது, இந்திய அரசு. அதன்பலனாக இதுவரை ஐநூறு மீனவர்களைப் பறிகொடுத்துவிட்டு தினம் தினம் சிங்கள கடற்படையின் அட்டூழியங்களுக்கு ஆளாகி வருகிறோம் என்றார், இராமநாதபுர மாவட்ட நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர் ராயப்பன்.

பன்னாட்டு கம்பனிகளுக்கு எந்தவித கட்டுப்பாடும் இல்லை. ஆனால், நம் மீனவர்களுக்குக் கடுமையான சட்டங்கள். இது எந்த ஊர் நியாயம் என்று கேட்கிறார், பாரத கடல் தொழிலாளர் மீனவர் முன்னேற்ற சங்கத் தலைவர் ஜான்.

இராமேஸ்வரத்தைப் பொறுத்த வரையில் பாம்பன், தங்கச்சி மடம், அக்காள் மடம் என மொத்தம் எழுபதாயிரம் மீனவக் குடும்பங்கள் உள்ளன. தமிழர் வரலாற்றில் மீன்பிடித் தொழில் குறித்த குறிப்புகள் மூவாயிரம் ஆண்டுகள் பழமையானவை. சிந்துவெளியில் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கடல் மீன்பிடித் தொழிலில் சிறந்தவர்கள் நம் தமிழர்கள் என்கிறது, வரலாற்றுக் குறிப்புகள். இந்தச் சட்டத்தால் இவ்வளவு நீண்ட பாரம்பரியம் ஒட்டு மொத்தமாக அழிக்கப்படும் அவலநிலை உருவாகிவிட்டது என்கின்றனர், தமிழறிஞர்கள்.

இதைத்தான் தமிழர் கண்ணோட்டக் குழுவினர் சந்தித்த மீனவர்கள் இப்படிக் கேள்வி எழுப்புகின்றனர்.

மனிதர்கள் தோன்றிய காலத்திலேயே விவசாயம் பார்க்க ஒரு பிரிவினரும், மீன் பிடிக்க ஒரு பிரிவினரும் பிரிந்து சென்றனர். அப்போது கடலுக்கு வந்தவர்கள்தான் எங்கள் முன்னோர்கள். எங்கள் வேர்கள் இந்தக் கடலில் ஆழமாக ஊன்றப்பட்டுவிட்டன. கடல்தான் எங்கள் நாடு. கடல்தான் எங்கள் பூர்வீகம். எங்கள் நாட்டிற்குள் எங்களை, அங்கே போகாதே, இங்கே போகாதே என்று சொல்ல இந்தியாவுக்கு என்ன உரிமை இருக்கிறது? - என்றனர்.

த.க.குழுவினர் மீனவக் கிராமங்களில் தங்கள் பயணத்தை முடித்துவிட்டு திரும்பிய பின்பு இரண்டு நாள்கள் கழித்துத் தான், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தும் மீன்பிடித் தொழில் ஒழுங்கு முறை புதிய சட்ட மசோதாவை எதிர்த்து அறிக்கை விட்டனர். (மக்கள் நலனில் இவர்கள் காட்டும் அக்கறையை என்ன வென்று சொல்வது?) அவர்களைத் தொடர்ந்து முதல்வர் கலைஞரும் அந்தச் சட்டத்தில் சில மாற்றங்கள் வேண்டும் என்று பொறுப்புடன் அறிக்கை விட்டிருக்கிறார்.

புதிய சட்டம் குறித்து, மாநிலங்களவையில் (நவம்பர் 26) பேசிய கனிமொழி, திருச்சி சிவா போன்றவர்கள், இந்தச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்று, கலைஞரை வழி மொழிந்திருக் கிறார்கள். அப்படியென்றால், மறைமுகமாக இந்தச் சட்டத்தை தமிழ்நாடு அரசு ஆதரிக்கிறது என்றுதானே அர்த்தம்? கடல்மீன்பிடி தொழில் ஒழுங்காற்றல் மற்றும் மேலாண்மை சட்டம் முழுவதையுமே திரும்பப் பெற வேண்டும் என்பதே ஒட்டுமொத்த மீனவர்களின் கருத்தாக இருக்கிறது.

அதே நேரத்தில் இந்த விவகாரத்தில் தமிழக அரசு காட்டும் மௌனம் இந்த அரசு மீது சந்தேகத்தை ஏற்படுத்து வதாகவும் மீனவர்கள தெரிவித்திருக் கிறார்கள். அரசியல் ரீதியாக மீனவர்கள் எழுச்சி பெற வேண்டிய நேரமிது. மீனவர்கள் பிரச்சினையில் கட்சி கடந்து தமிழர்கள் ஒன்று சேரவேண்டிய காலமிது என்பதே த.க. குழு முன்வைக்கும் கருத்து. *


யாழ் வாசிகளான உங்களுடன்
புதிய உத்வேகத்துடன் எப்போதும் இணைந்திருக்க
நாங்கள் தயார்



உங்கள் விவசாயத்திற்கு அவசியமான ஆலோசனைகள், சேவைகள் மற்றும் விவசாய இரசாயனங்கள், கால்நடை மருந்துகள், உழவு இயந்திரங்கள், ஹேஸ்பிறே போன்ற உபகரணங்கள் என்பவற்றைப் பெறுவதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள எமது புதிய காட்சியறைக்கு வாருங்கள்.

**ஹேலீஸ் அக்ரோ**
74, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்
சுரேஷ் – 777 594962
புவனேந்திரா – 777 594992

**ஹேலீஸ் அக்ரோ**
25,பொஸ்டர் ஒழுங்கை,
கொழும்பு 10. தொலைபேசி: 0112 688960-2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.



## புவனேந்திரராஜா துஷாயினி
### யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
### புள்ளிகள்-162

நான் எனது கல்வியை கொழும்பு இராமநாதன் இந்து மகளிர கல்லூரியில் ஆரம்பித்தேன். கல்வி கற்க ஆரம்பித்த சில தினங்களில் எனது தாயாரை இழந்தேன். பின்னர் தந்தையின் அரவணைப்பிலும் மாமிமாரின் உதவியுடனும் நான்காம் ஆண்டு கல்வி கற்றுவரும் போது தந்தையையும் இழந்தேன்.

எனது தந்தையின் ஆசை நான் 5ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்து கல்வியில் உயர்நிலை அடைய வேண்டும் என்பது. 2009 ஜனவரி முதல் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 5 ஆம் தரத்தில் கல்வியைத் தொடர வாய்ப்புக் கிடைத்தது. இங்கு மாமா, மாமி, அக்கா, அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலில் நானும் முயற்சிசெய்து படித்தேன். மு.வே.அன்பழகன் ஆசிரியர் எனது வகுப்பு ஆசிரியராக வாய்த்தமையும் நான் பெற்றபேறு என்றே கூறுகின்றேன். அம்மா, அப்பாவின் வெற்றிடத்தை ''கல்வி'' எனும் பயிரால் நிரப்பி என்னை இந்தப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய உதவிய எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்த உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் எனது கல்வியைத் தொடர்ந்து கற்று உயர்நிலை அடைந்து அப்பாவின் ஆசையைப் பூர்த்தி செய்யவும், என்னைச் சார்ந்த எல்லோரினதும் உள்ளங்களை மகிழ்விக்கவும் அருள்வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



## முரளிதரன் வாணி
### கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்
### புள்ளிகள்-140

இரவிலும் வகுப்பு ஆசிரியை நடத்தும் வகுப்பில் கலந்து கொள்வதுடன் ஆசிரியையின் வீட்டிலேயே இரவு தங்கிநின்று படிப்பதுடன் அதிகாலையிலும் எழுந்து படிப்பேன்.

பாடசாலையில் பாடநேரத்தில் ஆசிரியை பாக்கியலட்சுமி தவக்குமார் கற்பிப்பார். பாடசாலை முடிந்த பின்னர் எமது அதிபர் மேலதிக வகுப்புக்களை நடத்துவார்.

இரவில் மீண்டும் ஆசிரியையின் வீட்டில் வகுப்புகள் நடைபெறும். அங்கு இரவில் தங்கி நின்று படித்ததினால் சந்தேகங்களை ஆசிரியையிடம் உடன் கேட்டு அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. தனியார் கல்வி நிலையங்களுக்கு மேலதிக வகுப்புக்களுக்குச் செல்வது கிடையாது. பாடசாலையில் அடிக்கடி மாதிரிப் பரீட்சைகள் நடைபெறும். அந்தப் பரீட்சை விடைகள் திருத்தித் தருவதுடன் தவறு களை ஆசிரியையும் அதிபரும் சுட்டிக் காட்டி விளங்கப்படுத்துவார்கள். அதிபர், ஆசிரியர் என்மீது காட்டிய அக்கறையும் ஊக்கமுமே எனது இந்தப் பெறு பேற்றுக்குக் காரணம். அத்தகைய பெருந்தகைகளுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சந்திப்பு: நேசன், மூர்த்தி**



## விஜயராசா அருள்தாஸ்
### கரணவாய் மகாவித்தியாலயம்
### புள்ளிகள்-141

எனது அப்பா வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டவர். தாயார் குடும்ப அலுவல்களைக் கவனித்து வருகிறார். என் பெற்றோருக்கு நான் நான்காவது பிள்ளை. எனக்கு மூத்த சகோதரிகள் இருவரும் ஒரு சகோதரனும் இருக்கிறார்கள். அவர்களும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே.

நான் கரணவாய் மகாவித்தியாலயத்தில் தரம் 1 முதல் கல்வி கற்று வருகிறேன். நான் சித்தியடைவேன் என்ற உறுதியும் நம்பிக்கையும் எப்பொழுதும் இருந்தது. ஆனாலும் மேலும் அதிக புள்ளிகளைப் பெறுவேன் என்பது எனது எதிர்பார்ப்பாக இருந்தது.

எனது எதிர்பார்ப்புக்குக் காரணம் எனது பாடசாலைக் கல்வியில் நான் கொண்ட பற்றுறுதியாகும். எனது பாடசாலை கல்வியிலும் மற்றும் இணைப் பாடவிதானம் மற்றும் போட்டி நிகழ்வுகளிலும் பல வழிகளில் புகழ்பூத்து விளங்குகிறது.

இதற்கு அடிப்படையாக விளங்குபவர் எனது பாடசாலை அதிபர் சி.நற்குணலிங்கம் என்பதைப் பெருமையோடு கூறிவைக்க விரும்புகிறேன்.

அனுபவம் மிக்க ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளுடன் தனது ஆளுமைத் திறமையினால் பாடசாலை நிர்வாகத்தைப் பலரும் பாராட்டும் வகையில் வழிநடத்தி வருகின்றார்.

மேலும் எனது பாடசாலை அதிபர் எங்கள் பாடசாலையில் அதிபராகப் பொறுப்பேற்ற காலம்முதல் இன்றுவரை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் எவரும் தரம் 6-11 வரை கற்பதற்கு வேறு பாடசாலைகளை நாடிச் செல்வதில்லை. தொடர்ந்தும் இப்பாடசாலையிலேயே கற்றுவருகின்றார்கள். நானும் இதேவழியில் எனது கல்வியை இதே பாடசாலையில் கற்பதற்குத் தீர்மானித்துள்ளேன்.

மேலும் எனது இந்த வெற்றிக்குக் காரண கர்த்தாக்களையும் நான் கூறித்தான் ஆக வேண்டும். முதலில் எனது பெற்றோர், சகோதரர்கள் என் கல்வியில் மிகுந்த ஆர்வமும் ஊக்கமும் காட்டி நின்றார்கள். அடுத்துப் பாடசாலையின் அதிபர், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்கள் எனது வெற்றிக்குப் பல வழிகளிலும் வழிகாட்டியாக இருந்தனர்.



## ரவீந்திரராஜ் மாதங்கி
### கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்
### புள்ளிகள்-143

பாடசாலையில் எங்களுக்கு இலவசமாக வினாத்தாள்களைத் தந்து அடிக்கடி பரீட்சைகளை அதிபரும் ஆசிரியர்களும் நடத்துவார்கள். தனியார் கல்வி நிலையங்கள் எதற்கும் நான் போகவில்லை.

பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்காக வகுப்புகளைச் செல்வி நவரத்தினம் பகவதி ஆசிரியை நடத்துவார். இதனைவிட அதிபர் பாடசாலை முடிந்த பின்னர் விசேட வகுப்பை நடத்துவார்.

இரவு நேரங்களில் வீட்டிற்கு அழைத்து பாக்கியலட்சுமி தவக்குமார் ஆசிரியை வகுப்புகளை நடத்துவார். பல்வேறு விதமான பயிற்சி வினாத்தாள்களையும் பாடசாலையிலும் வீட்டிலும் செய்வேன்.

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில் வரும் மாதிரி வினாத்தாள்களையும் இரவு நேரங்களில் செய்து பார்த்தேன்.

விளங்காத விடயங்களை ஆசிரியர்கள், அதிபரிடம் கொண்டுசென்று கேட்டுப் படித்தேன். இந்தப் பெறுபேறு எமது பாடசாலையின் ஆசிரியைகளும் அதிபரும் எடுத்த முயற்சியின் பயனாகும். அனைவருக்கும் இந்தநேரத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

---

# அடுத்த வருட நடுப்பகுதிக்கு முன்னரே அனைவரும் மீளக்குடியமர்த்தப்பட்டு விடுவர்

## உடுத்துறை நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தகவல்

உடுத்துறை.டிசெ.28

வன்னிப்பகுதியிலிருந்து வந்தவர்கள் மட்டுமன்றி, வடமராட்சி கிழக்கில் இருந்து மற்றும் குடாநாட்டுக்குள் இடம்பெயர்ந்துள்ள அனைவருமே அடுத்த வருட நடுப்பகுதிக்குள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் உடுத்துறையில் வைத்து தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிர் நீத்தவர்களின் நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்ட டக்ளஸ் தேவானந்தா, அஞ்சலி செலுத்திய பின்னர் அங்கு கூடியிருந்தவர்கள் முன்னிலையில் உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் உரையாற்றும்போது கூறியவை வருமாறு-

இயற்கை அனர்த்தத்தினால் மட்டுமன்றி வேறு பல அழிவுகளுக்கு முகம் கொடுத்துள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வுகள் காணப்பட வேண்டும். இது தொடர்பாக விரிவான ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றம் செய்வதற்கும் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும். இங்கு மட்டுமல்ல யாழ்.குடாநாடு முழுவதிலும் இடம்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளன. அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பக் கூடியதுமான சகல நடவடிக்கைகளும் செய்துதரப்படும்.

விரும்பிய இடங்களில் அவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். சுனாமி பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

55ஆவது படை அணி அதிகாரி பிரிகேடியர் சுதக்பெரேரா மற்றும் படை அதிகாரிகள், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உட்பட ஏராளமானவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஒ-111-236)

## மீளக்குடியமர்த்தப்பட்ட விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்.டிசெ.28

மீளக்குடியமர்த்தப்பட்ட மற்றொரு தொகுதி விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பி.ப 2மணிக்கு, திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக விவசாய, காணி, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன் மீன்வளத்துறை திட்டமிடல் பணிப்பாளர் செ.பத்மநாதன், பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், திட்டமிடலாள்ரும் யாழ்.மாவட்ட இணைப்பாளருமான வி.செ. சுவாமிநாதன், கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப்பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம், கமநல உதவிஅபிவிருத்தி உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டவர்களில் 25 விவசாயிகள் விவசாய நடவடிக்கையினை மீள ஆரம்பிப்பதற்கு உதவும் நோக்குடன் அவர்களுக்கு 50வீத மானிய அடிப்படையில் 25 'எட்னா' நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப் படவுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் ஏற்கனவே நீரிறைக்கும் இயந்திரங்களைப் பெற்றுக்கொண்ட மீள்குடியேறிய 175 விவசாயிகள் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கென அழைக்கப்பட்டுள்ளனர். (7)

## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்ட உறுதிகள்

யாழ்ப்பாணம்.டிசெ.28

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கான உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் இதற்கான நடவடிக்கையை எடுத் துள்ளார்.

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்டவர்கள் இதற்கான உறுதிகளை பருத்திதுறை சமூகசேவைகள் அதிகாரி செ.சுரேந்திராவிடம் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (1-302)

## சுகாதார சேவைகள் திணைக்கள ஒளிவிழா நிகழ்வுகள்

குருநகர்.டிசெ.28

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஒளிவிழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

வண.பிதா எஸ்.ரவிச்சந்திரன் அடிகளார் கிறிஸ்மஸ் நற்செய்தியை வழங்கவுள்ளார். கிறிஸ் மஸ் ஆசிச் செய்தியை அருட் சகோதரன் பெனடிக்ற் வழங்கவுள்ளார். சிறுமிகளின் நடன நிகழ்வு சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது. (1-51)

# சர்வதேச சட்ட விதிகளை படையினர் மீறவில்லை

## மனித உரிமைகள் அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, டிசெ.28

கடந்த கால மோதல்களில் முப்படையினரும் பொலிஸாரும் சர்வதேச விதிகளை மீறிச் செயற்படவில்லை. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவிக்கும் முறைப்பாடுகள் ஆதாரமற்றவை.

மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சருமான மஹிந்த சமரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று இடம்பெற்ற தேசிய பாதுகாப்புநாள் நிகழ்வில் பேசுகையில் அமைச்சர் இதைத் தெரிவித்தார்.

நாடு தற்போது புதிய சவால் ஒன்றை எதிர்நோக்கி உள்ளது. நடந்து முடிந்த போரின் போது படையினர் நடத்தை குறித்து சரத் பொன்சேகா எழுப்பியுள்ள குற்றச் சாட்டுக்களால் அந்தச் சவாலை அரசு எதிர் கொண்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பாக எழும் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டு அவற்றுக்கு சரியான பதிலளிக்க அரசு தயாராக இருக்கின்றது - என்றும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "The World of Hayleys"

## இன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படுகின்றது



ஹேலீஸ் நிறுவனத்தினால் வழங்கப்படும் சகல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்திப் பொருள்களும் சேவைகளும் யாழ்ப்பாண மக்களுக்கும் இலகுவில் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக "The World of Hayleys" திறந்து வைக்கப்படுகின்றது.

மக்களின் வாழ்க்கைக்கு வளமூட்டுவதற்காக புதுப்புது வழிகளை அறிமுகப்படுத்தும் முயற்சிக்கு 130 ஆண்டுகளுக்கும் மேலாகத் தன்னை அர்ப்பணித்துள்ள ஹேலீஸ் நிறுவனத்தின் வரலாற்றில் இந்த நடவடிக்கை மற்றுமொரு மைல் கல்லாகும். யாழ்ப்பாண மக்களுடன் பழைய உறவுகளைப் புதுப்பிக்கவும் புதிய உறவுகளை ஏற்படுத்தவும் இது உதவும்.

**புதிய அனுபவத்தை பெற வாருங்கள் இல.47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்துள்ள "The World of Hayleys".**

The World Of
**Hayleys**
Since 1878

www.hayleys.com

Spirit & Soul

**ஹேலீஸ் அக்ரோ** – பேயர் குரொப்சயன்ஸ் விவசாய இரசாயனங்கள், அக்ரோடெக் ட்ரக்டர்கள், சூட்டிக்கும் இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள், ஹேஸ்பிறே தெளிகருவிகள், ஹேலீஸ் பசளைகள், விதை நெல், ஹெல்த்கெயார் விலங்குநல பொருள்கள்.
**ஹேலீஸ் கொன்சியூமர்** – பியூஜி பில்ம், ஜி.பி. மின்கலங்கள், டைட், பன்ரீன், ஹொட் அன்ட் ஷோல்டர்ஸ், பம்பேர்ஸ், விஸ்பர், பிரிங்கிள்ஸ், ஜிலெற், ஓலே, ஓரல் பீ, பிலிப்ஸ் லைட்டிங், **ஹேலீஸ் இன்டஸ்ட்ரியல்** – பவர் எஞ்ஜினியரிங்
**ஹேலீஸ் அட்வான்டிஸ்** – லொஜிஸ்டிக்ஸ் மற்றும் பயண வசதிகள் **ரயிலீஸ்** – தள விரிப்புகள் **டோயோ குஷன்** – வைட் கொம் போட் மெத்தைகள் **பியூரிட்டாஸ்** – முகக் கவசங்கள், குளிரூட்டியுள் துர்மணம் அகற்றிகள், பீன், பிறெஷ்
**தலவாக்கல்லை பிளான்டேஷன்ஸ்** – மடெல் தேயிலை **டிப்ட் புரடக்ட்ஸ்** – வீட்டுப் பாவனை றபர் கையுறைகள்



## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

திரு.திருமதி **சிவச்சந்திரகுமார்-சுகர்ணா** தம்பதிகளின் செல்வப் புதல்வி **பிரித்திகா** தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (28.12.2009) திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். அவர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்க என அவுஸ்திரேலியாவிலுள்ள அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா குடும்பம், கொழும்பில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், லண்டனில் வசிக்கும் பெரியமாமா, உரும்பிராயில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமா (கனிஸ்ரன்), அன்ரி (நிஜாழினி) மற்றும் அன்னம்மா குடும்பம் (பூட்டி), தெய்வானை குடும்பம் (பூட்டி) ஆகியோர் வாழ்த்துகின்றார்கள்.




தகவல்: குணரத்தினம் மயூரதன்
(மாமா - லண்டன்)
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.


# சட்ட விரோதமாக மணல் ஏற்றியோருக்கு அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றிச்சென்ற வாகனங்களின் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 55 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த புதன் கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

ஒரு வாகனத்தின் சாரதிக்கு 30 ஆயிரம் ரூபாவும், மற்றைய இரு வாகனங்களின் சாரதிகள் இருவருக்கு தலா 12 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகைச் செலுத்தத் தவறினால் முறையே 30 மாதங்கள், தலா 15 மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார் (ஒ-207)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1151 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 09 27 34 42

25-12-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 9,148,650/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 163,989 | 20/- | 3,279,780/- |
| 2 இலக்கங்கள் | 15,117 | 40/- | 604,680/- |
| 1 இல. + லக்கினம் | 15,019 | 60/- | 901,140/- |
| 2 இல. + லக்கினம் | 1,345 | 200/- | 269,000/- |
| 3 இலக்கங்கள் | 407 | 1000/- | 407,000/- |
| 3 இல. + லக்கினம் | 34 | 10,000/- | 340,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 200,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 9,148,650/- | 9.148.650/- |
| மொத்தம் | | | 15,150,250/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 195,918 | | 15,650,250/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : சரத் அபேரத்ன வத்தேகம

கைத்தொலைபேசி வெ[illegible]ளர்: ஆர்.காந்திதாஸ் கந்தப்பொல

2009 டிசெம்பர் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 500836336-6-39 |
| ஹம்பாந்தோட்டை | 500830330-0-35 |
| பொலன்னறுவை | 500829492-6-25 |
| கம்பஹா | 500825587-8-17 |
| [illegible]க்களப்பு | 500827845-7-08 |


## அல்வாயில் நாளை திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.28

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் திருவாசகம் முற்றோதல் இடம்பெறும். (1)


## லீலா

## பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

இம்முறையும் புதுப்பொலிவுடன் பல சித்திரங்களுடன் மாணவ சமுதாயத்திற்கு வேண்டிய பொது அறிவு, விஞ்ஞானம், உலகத் தலைவர்கள், சமயப் பெரியார்கள், அறிஞர்கள், இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் திருநாள்கள் யாவற்றையும் பார்க்கக்கூடிய முறையில் ஒரே ஒரு சித்திரக்கலண்டராக இரண்டு நிறங்களில் அச்சிட்டு வெளிவந்துவிட்டது.

வெளிநாடுகளுக்கும், உள்நாடுகளுக்கும் அனுப்பிக் கொண்டு இருக்கின்றோம். வியாபார அன்பர்கள், பாவனையாளர்கள், வாடிக்கையாளர்கள் தாமதிக்காது உடன் ஆடரை அனுப்பி தேவையான கலண்டர், டயரிகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தயாரிப்பாளர்கள்:

**லீலா பிறஸ் பிரைவேட் லிமிட்டட்**

இல.400, கே.சிறில், சி பெரேரா மாவத்தை,
கொழும்பு - 13.
தொலைபேசி: 2325930, 2325933
பக்ஸ்: 2446077
ஈமெயில்: leela@sltnet.lk



## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA No.1 புறொயிலர் குஞ்சுகள் 30.12.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு: **ராஜீவ்**
கால்நடைத் தீவன விற்பனை நிலையம்,
நவாலி வீதி,
(91800) ஆனைக்கோட்டை.



வீட்டுக்கு மற்றும் ஹோட்டலுக்கு



டயிடஸ் ஸ்ரோஸ்
2439422


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் வருமானம் பெற்றுத் தரும் சுய தொழிலாகக் காளான் செய்கை

ஸ்ரீரூபி கந்தசாமி

இயற்கையாக எமது சூழலில் உருவாகின்ற மொட்டு வடிவிலான காளானை அவை மலர்வதற்கு முன் அறுவடை செய்து உணவாக உள்ளெடுக்கும் பழக்கமானது எமது முதாதையரிடமிருந்து இன்றுவரை கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது யாழ். குடாநாட்டின் வருமானம் பெற்றுத்தரும் ஒரு சுயதொழிலாகக் காளான் வளர்ப்பானது தோற்றம் பெற்றுள்ளது.

தாவரங்களின் பரிணாம வளர்ச்சியில் ஆரம்ப காலத்தில் தோன்றிவிருத்தியடையாத தாவரங்களில் பூஞ்சணமும் ஒன்றாகும். பூஞ்சணங்கள் தமது இனப்பெருக்கத்திற்கு தேவையான வித்திகளை பூக்கள் போன்ற வடிவங்களில் உற்பத்திசெய்கின்றன. பூக்கள் போன்ற கனியுடலமே காளான் என அழைக்கப்படுகின்றது.



அறுவடைப் பருவத்திலுள்ள காளானின் கனியுடலம்

தாவரங்களில் பச்சையம் உள்ளது போன்று பூஞ்சணங்களில் பச்சையம் காணப்படுவதில்லை. காளான் ஒரு தாவர உணவாகும். எனவே அசைவ உணவை உட்கொள்ளாத மக்களும் காளானை தமது உணவில் சேர்த்துக்கொள்ளமுடியும்.

இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே இயற்கையாக வளரும் காளானை மனித உணவிற்காக பயன்படுத்தி வந்துள்ளனர். இயற்கையாக வளரும் காளான் அனைத்தும் உணவிற்கு பயன்படுத்தப்படமுடியாது. இயற்கையாக வளரும் காளான்களில் உணவிற்குப் பயன்படுத்தக்கூடிய காளானை சரியான முறையில் இனங்கண்டு உணவிற்கு பயன்படுத்த வேண்டும். அண்மைக்காலத்தில் காளானை உணவில் சேர்த்துக் கொள்வதில் மக்களுக்குள்ள ஆர்வம் அதிகரித்து வருகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு தமது தேவைக்கும், வருமானம் பெறவும் சில வீடுகளில் காளான் செய்கை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறைந்த இடப்பரப்பில் இலகுவாகக் கிடைக்கக்கூடிய மூலப்பொருளகளைப் பயன்படுத்தி காளான் உற்பத்தியை மேற்கொள்ளமுடியும். அதேவேளை 35-45 நாள்களில் முதலாவது அறுவடையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

### போசணைச் சத்துக்கள்

100 கிராம் அறுவடைசெய்யப்பட்ட புதிய காளானில் அடங்கியுள்ள போசணைப் பொருள்கள்.

| | |
|---|---|
| நீர் | -91கிராம் |
| சக்தி | -13 கிலோ கலோரி |
| புரதம் | -2.5 கிராம் |
| கொழுப்பு | -0.3 கிராம் |
| கல்சியம் | -20 மில்லி கிராம் |
| இரும்பு | -01 மில்லி கிராம் |
| தயமின் | -120 மைக்கிரோ கிராம் |
| றைபோபிளேவின் | -500 மைக்கிரோ கிராம் |
| நயாசின் | -5.8 மில்லி கிராம் |
| விற்றமின் சீ | - 3மில்லி கிராம் |



தயார் செய்யப்பட்ட ஊடகக் கலவையினால் நிரப்புதல்

காளானில் புரதம், பல்வேறு விற்றமின்கள், கனியுப்புக்கள் என்பன காணப்படுகின்றன. இறைச்சி, மீன், பால், பட்டர் போன்ற பல்வேறு விலங்கு உணவில் காணப்படும் புரதத்தைப் போன்று காளான் புரதமும் தரத்தில் சிறந்தது. முக்கியமாக தானியப்பொருள்களை உண்ணும்போது காளானையும் சேர்த்துகொள்வதன் மூலம் உடலிற்குத் தேவையான தரமான புரத அளவை அதிகரிக்க முடியும்.

### பூஞ்சணங்களின் வகைகள்

பூஞ்சணங்களில் காணப்படும் இயல்புகளிற்கேற்ப அவை விஞ்ஞான ரீதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. உணவிற்காக பயன்படுத்தப்படும் காளான் கணம் அகாரிக்கஸ் (Agaricus) வகுப்பு பசிடியோமயிசிடிஸில் சேர்க்கப்பட்டுள்ளது.

### உணவிற்காகப் பயன்படுத்தப்படும் காளான் இனங்கள்

வைக்கோல் காளான், சிப்பிக்காளான், மொட்டுக்காளான், சிடாகோ காளான், அபலோன் காளான் ஆகிய வகைக் காளான்கள் உணவிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கைக்கு பொருத்தமான காளான் இனங்கள் சிப்பிக் காளான், வைக்கோல் காளானாகும். இவற்றில் சிப்பிக்காளான் இனமே அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்றது. இதில் சிப்பிக்காளானில் அமெரிக்கன், பூட்டன் ஆகிய இரு வர்க்க இனங்களை அதிகளவில் உணவிற்கு பயன்படுத்துகின்றனர்.

### காளான் உற்பத்திக்கு வேண்டப்படும் உத்தம காலநிலை

★அடைகாக்கும்அறையில் வெப்பநிலை 18-25 பாகை செல்சியஸ் ஆக இருத்தல் வேண்டும்.

★அறுவடை அறையினுள் வெப்பநிலை 25-30 பாகை செல்சியஸ் இருத்தல் வேண்டும்.

★சாரீரப்பதன் இரண்டு அறைகளிலும் 75-85 வீதமாக இருத்தல் வேண்டும்.

### யாழ். மாவட்டத்தில் நிலவும் காலநிலைப் பொருத்தத்தன்மை

சிறப்பான காளான் உற்பத்தியைப் பெறுவதற்கு கொட்டிலில் குறைந்த வெப்பநிலையைப் பேணுவதற்கு உரிய முறைகளைக் கையாளுதல் அவசியமாகும்.

கொட்டிலில் குறைந்த மட்டத்தில் வெப்பநிலையை பேணுவதற்கும், சாரீரப்பதனை அதிகரிப்பதற்கும் பின்வரும் முறைமைகளைக் கையாளுதல் வேண்டும்.

★அறையில் 2 அங்குல உயரத்திற்கு மணலைப் பரப்பி ஈரப்படுத்தல்.

★ சுவர்களில் சாக்குகளை தொங்கவிட்டு தொடர்ச்சியாக ஈரப்படுத்தல்.

★கூரையினை கிடுகினால் வேய்தல்.

★ தகரம் அல்லது சீற்றிடப்பட்ட கூரையாயின் தும்பேயியா அல்லது கொடித்தோடை என்பவற்றை அதன் மீது படரவிடுதல்.

### கொட்டில் அமைத்தல்

கொட்டிலை அமைக்கும் இடத்தைத் தெரிவு செய்யும்போது நீர் தேங்கி நிற்காத, நிழல் உள்ள இடத்தில் அமைத்தல் வேண்டும். கொட்டிலில் அடைகாக்கும் அறை, அறுவடை அறை என இரு பகுதிகளாக இருக்கவேண்டும்.

### காளான் வளர்ப்பு படிமுறைகள்

1. ஊடகக் கலவை தயாரித்தல்

தேவையான பொருள்கள்

★ மரத்தூள் (மா,பலா)
★ அரிசித் தவிடு
★ பயற்றம்மா
★ கல்சியம் காபனேற் (நீர்ச்சுண்ணாம்பு)
★ மக்னீசியம் சல்பேற் (பேதியுப்பு)
★ 7 அங்குல அகலமும் 13 அங்குல நீளமும் கொண்ட பொலிபுறப்பலின் பைகள்
★ 1அங்குல விட்டமுடைய 1/2 அங்குல உயரமான PVC குழாய்கள்
★ பஞ்சு
★ இறப்பர் பட்டிகள்
★ கடதாசி

மரத்தூளில் செய்கை பண்ணப்படும் காளான் உற்பத்திக்கு பாரம் குறைவான மா, பலா போன்ற மரத்தூள் பயன்படுத்த முடியும். அத்துடன் ஊடகக் கலவையாக அரிசித் தவிடு, பயிற்றம்மா, கல்சியம் காபனேற்று,பேதி உப்பு, நீர் என்பன பயன்படுத்தப்படல் வேண்டும். ஊடகத்தின் PH ஆனது 5.5-6.5 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

செய்முறை-

நிலத்தில் பொலித்தீனை விரித்து அதன் மேல் மரத்தூளை பரவி அதனுடன் அரிசித் தவிடு,பயற்றம்மா, கல்சியம் காபனேற்று ஆகியவற்றைச் சேர்த்துக் கலக்கவும். பின் பேதியுப்பை நீரில் கரைத்து, அக்கரைசலை மேற்குறித்த கலவையின் மீது தெளித்து நீர் சேர்த்து நன்றாகக் கலந்து ஊடகக்கலவை பெறப்படும்.

7அங்குல அகலம், 13 அங்குல நீளமான பொலிப்புறப்பலின் பைகளில் 3/4 பகுதிக்கு கவலையை இறுக்கமாக நிரப்பவும். பையின் திறந்த பகுதியூடாக PVC குழாய்த் துண்டை உட்புகுத்தி வாய்ப்பகுதியை பஞ்சினால் அடைத்து விடவும். பஞ்சை கடதாசித் துண்டினால் மூடி இறப்பர் பட்டியை இடவும்.

2. தொற்று நீக்கம் செய்தல்

தயார் செய்யப்பட்ட ஊடகப் பைகளை நீராவியில் 2-4 மணித்தியாலயங்கள் தொற்றுநீக்கம் செய்து பின்பு ஊடகப்பைகள் ஒரு நாள் வரை குளிர்வடைய விடப்படும்.



வாய்ப்பகுதி வெட்டி வைக்கப்பட்ட ஊடகப் பைகள்

★ எளிதாக்கப்பட்ட காளான் வித்தி 5 கிராம் செய்த ஊடகப் பையினுள் இடப்படும்.

★ ஊடகக் கலவைப் பையினுள் இடப்படும் வித்தியானது வெள்ளை நிறமாகவும் மணமற்ற, தரமான வித்தியாகவும் இருத்தல் வேண்டும்.

★ ஊடகக்கலவையினுள் வித்தி இடும்பொழுது மெழுகுதிரிச் சுவாலை அல்லது மதுசார விளக்கினை ஏற்றி வைத்து வித்தி இடப்படும்.

★மீண்டும் வாய்ப்பகுதியாது கடதாசியினால் மூடி இறப்பர்பட்டி இடப்பட்டு அடைகாக்கும் அறையில் [illegible]

[illegible]

★ அடைகாக்கும் அறையானது இருட்டாகவும், வெப்பநிலை குறைவாகவும் இருத்தல் வேண்டும். தயார் செய்யப்பட்ட ஊடகப் பைகளில் பூஞ்சணங்கள் வளரும்வரை சேமித்து வைப்பதற்கு இரண்டு பக்கமும் திறக்கக் கூடியவாறு பல தட்டுக்களை உடைய இறாக்கைகளை (2' அகலம் 6' உயரம் உடைய இறாக்கை) தேவைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளப்படும்.

★ இறாக்கைகளை அமைப்பதற்கு மூங்கில் தடிகளைப் பயன்படுத்தி அல்லது பலகைகளைப் பயன்படுத்தி அமைக்கலாம்.

★அணில், எலி போன்றவற்றில் இருந்து பாதுகாப்பதற்கு இறாக்கையின் வெளிப்பகுதி கம்பிவலையினால் மூடி அடைத்துவிடப்படும்.

★இறாக்கையின் வெளிப்பகுதிக்கு சாக்கினைக் கட்டி ஈரப்படுத்துவதனாலும், அதன் மேல் கறுப்பு பொலித்தீனை மூடிக்கட்டுவதனாலும் இருள் நிலமையை வழங்கமுடியும்.

★அடைகாக்கும் அறையானது காளான் வித்தியின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு அறை இருட்டாகவும் சாரீரப்பதன் 75-85 வீதமும், வெப்பநிலை 18-25 பாகை செல்சியஸ் ஆகவும் இருத்தல் வேண்டும். அறையினுள் (இருட்டறை) 21-30 நாள்கள் பங்கஸ் வளர்ச்சிக்கு வைக்கப்படும்.

★ பங்கஸ் வித்தியின் இழையம் முழுமையாக வளர்ச்சியடைந்த பின் வாய்ப்பகுதியை வெட்டி அகற்றி அறுவடை அறைக்கு மாற்றப்படல் வேண்டும்.

### 2. அறுவடை அறை

★ நேரடியாகச் சூரிய ஒளி விழாத வெளிச்சமுள்ள இடமாகவும், காற்றோட்டமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

★ சாரீரப்பதன் 75-85 வீதமும், வெப்பநிலை 25-30 பாகை செல்சியஸ் ஆகவும் இருத்தல் வேண்டும்.

★ அடைகாக்கும் அறையில் பூஞ்சணங்கள் வளர்ச்சியடைந்த பின்னர் பூக்கள் போன்ற விசேட வடிவமாக காளானைப் பெறுவதற்கு, வாய்ப்பகுதி வெட்டி அகற்றப்பட்ட பின்னர் ஊடகப் பைகளுக்கு நீரை துகள்களாக விசுறுதல் வேண்டும்.

அறுவடை அறைக்கு மாற்றி வைக்கப்பட்ட ஊடகப்பை ஒன்றிலிருந்து 300-400 கிராம் காளானை 7-10 நாள்கள் இடைவெளியில் 8-10 தடவைகளில் அறுவடையாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒவ்வொரு அறுவடையின் பின்பும் வாய்ப்பகுதியை



ஊடகப் பைகளுக்கு வித்தி இடல்

கூரிய கத்தியினால் சுரண்டி விடல்வேண்டும்.

### காளான்களைப் பாதுகாத்தலும் சேமித்தலும்

★ அறுவடை செய்யப்பட்ட காளான் பொலிப்புறப்பலின் பைகளில் அடைக்கப்பட்டு சாதாரண நிலைமைகளில் 1-2 நாள்கள் சேமிக்க முடியும்.

★ 2 கிழமைகளில் குளிரூட்டியில் வைத்து பாதுகாக்கலாம்.

★ காளானை உலர்த்தி பைகளில் அடைத்தும் பாதுகாக்க முடியும்.

### உற்பத்தி செய்யப்படும் இடங்களும் காளான் சந்தைப்படுத்தலும்

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், மட்டுவில், சிறுப்பிட்டி, ஏழாலை, அளவெட்டி, சிறுவிளான், ஊரெழு, யாழ்.நகர் 2ஆம் குறுக்குத்தெரு ஆகிய பகுதிகளில் காளான் உற்பத்தி நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் சிறுப்பிட்டி, ஏழாலை ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்படும் காளான் மாவட்ட விவசாய பயிற்சி நிலைய விற்பனை நிலையத்திற்கு ஊடாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. மட்டுவிலில் உற்பத்தி செய்யப்படும் காளான் அலுவலகங்களுக்கு ஊடாக விற்பனை செய்யப்படுகின்றது. மற்றைய உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் இடத்திலேயே நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றனர்.


### காளான் வித்திகளில் விநியோகம்

காளான் உற்பத்தியை சரியான முறையில், சரியான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மேற்கொள்வதனால் உடலிற்கு வேண்டிய தரமான போசணை நிறைந்த உணவைப் பெற்றுக்கொள்ள முடியும் . விசாயத் திணைக்களத்தினால் தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்படும் வித்திகள் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய விற்பனை நிலையத்தினூடாக காளான் உற்பத்தியாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது.

★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கடமையாற்றிய

அமரர்


## நடராஜா விக்கினேஸ்வரன்

மரணமென்று செய்தி அறிந்து
அதிர்ந்து போனோம்!
நேற்றுவரை எம்மோடு
நிழலாக இருந்தவரே!
காற்றெனவே வந்த விதி
கடிதினிலே பிரிந்ததனால்
ஆற்றொணாச் சோகமுற்றோம்!
என்றும் எமது உள்ளத்தில்
மறையாது உம் நினைவு

அவர்களின் மறைவையிட்டு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
S.D.S.கொம்பியூட்டர் சேவிஸ்,
(சி/563547) உரிமையாளர், ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்



## நடராஜா விக்கினேஸ்வரன்

கல்வயலைப் பிறப்பிடமாகவும், சரசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜாவிக்கினேஸ்வரன் 25.12.2009 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் நடராஜா-சின்னத்தங்கம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் திருமகளின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற ஜெகசோதி-சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் ஜானுஷா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), நயனன், லவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகாமசுந்தரி, சிதம்பரநாதன் (அவுஸ்திரேலியா), முருகையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகரத்தினம், சந்திரா, ஜீவா(அவுஸ்திரேலியா), இராமச்சந்திரன், பாலச்சந்திரன் (ஜேர்மனி), ஞானச்சந்திரன் (கனடா), ஞானசூரியன் (ஜேர்மனி), சந்திரபவானி, கலாஜோதி (ஜேர்மனி), கலைச்செல்வி (நோர்வே), பீற்றா (ஜேர்மனி), கலைச்செல்வி (கனடா), சரவணபவன், பரமேஸ்வரன் (Col), பத்மாதேவி (ஜேர்மனி), ஓம்நடராசா (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிந்துஜா (அவுஸ்திரேலியா), வாகீஷன் (அவுஸ்திரேலியா), பிரசன்னா, சௌமியா, வாகீஷன், நிஷானி, ஹம்ஷா, லக்ஷன், சசிரேகா(Col), சுவர்ணரேகா (Col), சுஜீவன் (Col), சுபித்தா(Col), சுபித்தன் (ஜேர்மனி), நிமனன் (நோர்வே), கவிஸ்னயன் (நோர்வே), அக்ஷயன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், கிரிஷன் (ஜேர்மனி),ஹாய் (ஜேர்மனி), அனுஷா (ஜேர்மனி), கிரிஷா (கனடா), கீர்த்திகா (கனடா), கீர்த்தனா (கனடா), கீறா (கனடா), யோகசிவா (கனடா), ஜோன் (கனடா), கௌதம் (ஜேர்மனி), ப்ரவீன் (ஜேர்மனி), கிருபாசக்தி, சிவசக்தி (Col) காலஞ்சென்ற சரவணபவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தி. விக்கினேஸ்வரன்.

(சி/563544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் வலயம், மாவட்டம், மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வை யொட்டி நூல் ஒன்று வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையுரையாற்றுவதையும் நூலினை யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி குமாரவடிவேலுக்கும் மற்றும் மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளருக்கும் வழங்குவதையும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குமாரசுவாமி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# தேசிய கராத்தே சம்பியன் போட்டியில் யாழ்.வீரர்கள் இருவர் பதக்கம் வென்றனர்



யாழ்ப்பாணம், டிசெ.28

சர்வதேச சோட்டோக்கான் கராத்தே சம்மேளனத்தினரால் நடத்தப்பட்ட 25ஆவது தேசிய சம்பியன் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் பதக்கங்களை வென்றனர்.

களனி பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற சம்பியன் போட்டியில் 80 கிலோ கிராம் பிரிவுக்கு இடைப்பட்டவர்களுக்கான 'குமிரே' போட்டியில் சென் சேய் ரஞ்சித் சைபேந்திரகுமார் இரண்டாவது இடத்தினைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினையும் 50 கிலோகிராம் பிரிவுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கான 'குமிரே' போட்டியில் சென்.சேய் ரி. சுகேந்திரன் மூன்றாவது இடத்தினைப் பெற்று வெண்கலப்பதக்கத்தினையும் வென்றனர். (23)

# 21 வயதுக்குட்பட்டோருக்கான தேசிய ரீதியிலான கராத்தேப் போட்டியில்

## இம்முறை யாழ். வீரர்களும் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

இலங்கை கராத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியான 21 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான கராத்தே சுற்றுப்போட்டி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரகில் இன்று ஆரம்பமாகின்றது.

இச் சுற்றுப்போட்டி இரண்டு தினங்கள் இடம்பெறவுள்ளது.

இச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் உள்ள கராத்தே சங்கத்தைச் சேர்ந்த 21 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளவுள்ளனர். இச் சுற்றுப்போட்டியில் நாடளாவிய ரீதியில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (09-23)

# மாவட்டமட்ட கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டிக்கு சென்றலைட்ஸ் தகுதி

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆண்களுக்கான அரை இறுதி ஆட்டத்தில் சென்றலைட்ஸ் ''ஏ'' அணி வெற்றி பெற்றது.


சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளையாடிய கே.சி.சி.சி''பி'' விளையாட்டுக்கழக அணியை 107:57 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்தில் தகுதி பெற்றது. (04-23)

# சர்வதேசப் போட்டிகளில் ஒரு வாய்ப்புத் தாருங்கள்; உயரம் பாய்தலில் சாதித்துக் காட்டுகின்றேன்

## மாற்றுவலுவுள்ள இளைஞனின் கோரிக்கை இது

வல்வெட்டித்துறை, காட்டுவளவு ஒழுங்கையைச் சேர்ந்தவர் பாலச்சந்திரன் ஜெகன், இவருக்குப் பிறப்பிலிருந்தே இடது கால் மெலிதாக குறைபாடுடையதாகவே விளங்குகின்றது. அயினும் 22 வயதான இவர் சோம்பியிராது விளையாட்டுத்துறையில் ஈடுபட்டு பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். ஆயினும் மாற்று வலுவுள்ளோருக்கான சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்ற தனது மனவுந்தலை இங்கு உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

எனது இலட்சியம் மாற்று வலுவுள்ளோருக்கான சர்வதேச மட்டப் போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைக்க வேண்டும் என்பதாகும். எனக்குத் திறமை உண்டு. தன்னம்பிகையும் விடாமுயற்சியும் உண்டு. ஆனால் எனது திறமையை வெளிக்காட்ட நல்ல சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. காரணம் யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற காரணத்தினாலே இவ்வளவு காலமும் எனக்கு அதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை. சுமார் 5 வருடங்களாக முயற்சி செய்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினூடாக அதற்கான வாய்ப்பினை பெற முடியவில்லை. அவர்கள் அதற்கான ஏற்பாடுகளை செய்தனர். ஆனால் இன்னும் கிடைக்கவில்லை. வடக்கு மாகாணம் சமூகசேவைகள் திணைக்களத்தினால் 2009ஆம் ஆண்டுக்கான மாற்றுவலுள்ளோருக்கான விளையாட்டுப் போட்டி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. காட்சிப் போட்டியாக மாற்றுவலுவுள்ளோருக்கான உயரம் பாய்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் யாருமே எதிர்பாராத விதமாக 147சென்றிமீற்றர் தூரம் பாய்ந்து சாதனை படைத்தேன். சிறப்புப் பரிசும் கிடைத்தது. உரிய முறையில் பயிற்சி பெற்றால் எனது திறமையை மேலும் வளர்த்து 2010ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொது நலவாய விளையாட்டுப் போட்டியில் மாற்றுவலுவுள்ளோருக்கான உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் முதல் மூன்று இடங்களில் ஏதாவது ஒன்றினை நிச்சயம் வெற்றி பெற்றுச் சாதனை படைப்பேன். என்னால் முடியும் என்கின்ற நம்பிக்கை எனக்கு உண்டு.



நேர்காணல்: சுந்தா

ஆனால் எனது திறமையை தேசிய மட்டத்திலேயே வெளிக்காட்ட நல்ல சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அல்லது யாராக இருந்தாலோ அதற்கான வாய்ப்பினை பெற்றுத்தரும்படி கேட்டுக் கொள்கின்றேன். நிச்சயம் சாதித்துக் காட்டுகிறேன்.

# கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கே.சி.சி.சி. அணிக்கு வெற்றி!

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.சி.சி.சி.'பி' விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை 92:48 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டது. (04-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு விழாவின் ஆரம்ப நிகழ்வான உள்ளூர் வீரர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தையும் விளையாட்டுக் கழகத் தலைவருமான அருட்தந்தை யாவிஸ் அடிகளார் கொடியினை அசைத்து மரதன் ஓட்ட நிகழ்வினை ஆரம்பிப்பதை முதலாவது படத்திலும், மரதன் ஓட்ட நிகழ்வில் முதலாவது இடத்தைப் பெற்ற வீரர் யரோசன், இரண்டாம் இடத்தைப் பெற்ற வீரர் தயான், மூன்றாவது இடத்தைப்பெற்ற வீரர் ஜீவன் ஆகியோரை அடுத்துள்ள மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்ட பார்வையாளர்கள் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'கேற்வே' நிறுவனத்தில் ஆசிரியர்களுக்கு இடம்பெற்று வந்த பயிற்சி நெறியை நிறைவுசெய்த முதலாவது அணி ஆசிரியர்களின் நிகழ்வு நேற்று உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் 'கேற்வே' நிறுவனத்தின் யாழ்.கிளை பொது முகாமையாளர் பி.விக்கிரமநாயகம், பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியையான திருமதி உதயந்தி கனகராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் பயிற்சியை நிறைவு செய்த முதலாவது அணி ஆசிரியர்கள் பயிற்சியாளர்களுடன் சேர்ந்து நிற்பதையும் படங்களில் காணலாம்.

# முன்பள்ளி ஆசிரியர்களை அரச பணிக்குள் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது

## வலி.மேற்கு பிரதேசசபைச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.28

முன்பள்ளி ஆசிரியர்கள் கடமையுணர்வுடனும், பொறுப்புடனும் செயலாற்ற வேண்டியவர்கள்.

முன்பள்ளியில் வழங்கப்படும் முறையான விளையாட்டு ஊடான கல்வியே எதிர்காலத்தில் மாணவனின் உளத்திறன் வாய்ந்த கல்வி அபிவிருத்தியாக மாறுகின்றது. எதிர்காலத்தில் முன்பள்ளி ஆசிரியர்களை அரச பணிக்குள் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார்.

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர்களின் வளர்ச்சி-அபிவிருத்தி தொடர்பான பிரதேசக் கூட்டம் முன்பள்ளி இணைப்பாளர் ராகலிங்கம் நிரஞ்சனா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விலேயே வலி.மேற்கு பிரதேசசபை செயலா ளர் சு.புத்திசிகாமணி இவ்வாறு தெரி வித்தார். மேலும் அவர் உரையாற்று கையில் -

முன்பள்ளி ஆசிரியர்கள் மிகக் குறைந்த வேதனத்தில் அளப்பெரிய ஆசிரியப் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று அதன் முன்பள்ளி ஆசிரியர்களை அரசாங்கப் பணியினுள் உள்வாங்குவதற்கு எமது மேலதிகாரிகள் முயன்று வருகின்றனர்.

அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது. இதன் மூலம் அவர்கள் ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படலாம்.

பெரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்கள் முழுமையான கல்விப் பணியை அதாவது அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்யவில்லை.

முன்பள்ளி ஆசிரியர்கள் திறந்த பல்கலைக்கழகங்கள் ஊடாக இடம்பெறும் கல்வியை பெற்று டிப்ளோமாப் பட்டம் பெறுவதன் ஊடாக எதிர்காலத்தில் சிறந்த ஆசிரியர்களாகத் திகழலாம் - என்றார்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட சனசமூக அதிகாரி சி.ஞானவேல் ராஜா, உள்ளூராட்சி உதவியாளர்செ.ரமேஷ் உட்பட 80 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (4-302)

## மின்சாரக் கட்டணம்; கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் முகாமையாளர்கள் கழகம் இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தின் வடபிராந்திய நிலையத்துடன் இணைந்து நடத்தும் மின்சாரக் கட்டணம் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு நல்லூரிலுள்ள 'யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இலங்கை மின்சார சபையின் பிரதம பொறியியலாளர் கே.நந்தகுமார் இந்த நிகழ்வில் உரைநிகழ்த்துவார்.

## யாழ். - கொழும்பு கட்டணம் தனியார் பஸ்களுக்கு நிர்ணயம்

யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாக கொழும்பிற்கு பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் சாதாரண மினிபஸ் சேவைக்கு 516 ரூபாவும் அரைச் சொகுசுக்கு 700 ரூபாவா கவும் சொகுசு சேவைக்கு 1000 ரூபாவாகவும் கட்டணமாக அறவிடப்பட வேண்டுமென்றும் -

சேவைக் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினருடன் நடத்திய கலந் துரையாடலின் போது இலங்கைச் சிற்றூர்திச் சேவை சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன இந்தக் கட்டண நிர்ணயம் பற்றி அறிவித்தார். (04-09)


## முதலாவது பிறந்த தின வாழ்த்து

இலங்கை, நெடுந்தீவு திருநாவுக்கரசு புவனேஸ்வரி தம்பதியினரின் செல்வப்புதல்வர்கள்

பிரணவன் ஆருஷன்

அவர்கள் தமது முதலாவது பிறந்ததினத்தை இன்று (2009.12.28) திங்கட்கிழமை நெதர்லாந்தில் குதூகலமாக கொண்டாடுகின்றார்கள். அவர்களை நெழுவினிப்பிள்ளையார் அருளோடு பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துவோர்.

லிங்கநாயகம் குடும்பத்தினர்
ரமணன் குடும்பத்தினர்
நந்தபாலன் குடும்பத்தினர்
பரமேஸ்வரன் குடும்பத்தினர்

நெல்வரை, நெடுந்தீவு - 3





## கண்ணீர் அஞ்சலி



எமது செயற்குழு உறுப்பினர்
சி.ஜெயசங்கர் அவர்களின் அன்புத் தந்தை
**வீரகத்தி சிவசுப்பிரமணியம் (J.P)**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உறுப்பினர்களும், தொண்டர்களும்
(சி/563545) இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சிப் பிரிவு.


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் நகுலேந்திரன்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை, விராங்கொடையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நகுலேந்திரன் நேற்று (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (91906)

தகவல்:
குடும்பத்தினர்.

### ஆறுமுகம் தம்பிஜயா



காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் சத்திரந்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தம்பிஜயா நேற்று (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரஞ்சோதியின் அன்புக் கணவரும் தகோமணி, காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் தனபாக்கியம், தங்கேஸ்வரி, தங்கரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகரன், சிவதர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சத்திரந்தை,
களபூமி, காரைநகர்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள். (91910)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 18 ★ 03 ★ 1945



மறைவு 28 ★ 11 ★ 2009

### அமரர் இராசையா இந்திரன்

கடந்த 28.11.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (28.12.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது கோப்பாய் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பினைத் தனிப்பட்ட நேரடி அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

*கிராம சபை ஒழுங்கை,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (91908)

குடும்பத்தினர்.
இ.கருணேந்திரன்.

## வருடாந்த ஒன்றுகூடல்

குருநகர், டிசெ.28

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக ஊழியர்களின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இந்த அலுவலகத்தின் மகாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (1-51)


### சகல வயறிங் வேக்ஸ் உடனுக்குடன் சேவை ஒளி-வாகன-எலெக்ரிக்

உங்கள் லொறி, பஸ் (Bus), டிராக்டர், பக்கோ, கார், மோட்டார் சைக்கிள், ஓட்டோ(Auto) மற்றும் சகல வாகனங்களுக்குமான மோட்டார் டைனமோ, வயரிங் (Wiring), கோண்(Coms), பற்றரி வேலைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து வழங்கப்படும்.

இடம்:-கல்வியங்காட்டு சந்தியில் இருபாலை நோக்கி 500 m தூரத்தில் மதகுக்கு அருகில்

உரிமையாளர்:-கண்ணா

கல்வியங்காடு, 3ஆம் கட்டை. T.P: 0772726681

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்ட வீதியில் ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் 2 ½ பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவும்.
021 2229128, 021 2007734, 077 4573785


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலை தமிழர் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்து உகந்ததா?



1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசமைப்பின்படி முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் எல்லோருக்கும் வாக்குரிமை அளிப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. இரண்டு பெரிய தமிழ்ப் பிரிவினரைத் தவிர ஏனைய சமூகத்தவர்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸுக்கும் தலைமைவகித்த ஒரு பகுதியினர் இதனைப் பகிஷ்கரித்தனர். ஏனென்றால், அவர்களுக்கு உடனடியான சுதந்திரம் தேவையாக இருந்தது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸினால் பகிஷ்கரிப்புத் தீர்மானம் மேற்கொள்ளப் படும்போது இளைஞர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஜவஹர்லால் நேரு, பகிஷ்கரிப்புத் தீர்மானம் தெற்கில் தவறான சமுதாய மதிப்பையும், புரிந்து கொள்ளளலையும் தோற்றுவிக்கும் என எச்சரிக்கை செய்திருந்தார்.

சில பொறுப்பான உள்ளூர் தலைவர்களும் இதனை எதிர்த்திருந்தனர். அடுத்த பகுதியினர் பழைமை வாதிகள். இவர்களின் பகிஷ்கரிப்பு எதிர் மறையானது. ஏனென்றால், டொனமூர் சீர்திருத்தம் ஆகக் கூடிய உரிமைகளை மிக விரைவில் வழங்குகிறது.

ஏனைய சமூக மக்கள் அனைவரும் அரசைத் தெரிவதற்கான உரிமை கிடைக்கப் பெற்றதை கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில் இலங்கைத் தமிழர்களின் இரண்டு முக்கிய பிரதிநிதிகள் தேசிய அரசியலில் இருந்து ஒதுங்கியும் தமது வாக்குரிமையைப் பகிஷ்கரித்தும் தவிர்த்தும் ஈடுபாடற்றும் இருந்தனர்.

இதனால் 1930 களில் தனிச்சிங்கள அரசு தோன்றியதைத் தொடர்ந்து தமிழர்கள் எதிர்மறையான அனுபவங்களை எதிர் கொண்டனர்.

2005 ஆம் ஆண்டு நவம்பர் தேர்தலை விடுதலைப் புலிகள் பலாத்காரமாக பகிஷ்கரிக்கச் செய்ததன் காரணமாக வடக்கு, கிழக்கிலுள்ள பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களும் ,பல முஸ்லிம் மக்களும் மிகப்பெரும் துன்பங்களைக் கடந்த சில ஆண்டுகளாக அனுபவிக்கின்றனர்.

இந்த இரண்டு பகிஷ்கரிப்புக்களிலும் அதற்கு இடைப்பட்ட காலங்களிலும் தமிழ் மக்கள் தேவையற்ற துன்பங்களை அனுபவித்தனர்; அனுபவிக்கின்றனர்.

சில தமிழர்கள் மீண்டும் வெளிப்படையாகப் பகிஷ்கரிக்கவோ அல்லது, வாக்குகளை வீணடிக்கவோ முயற்சிக்கின்றமை ஆபத்தை ஏற்படுத்துவதாகும்.

இரண்டு வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளனர். இந்த இருவரும் தமிழர்களின் விருப்பு வாக்குகளைப் பெறுவது கடினம். தமிழர்கள் தமது இரண்டாவது தெரிவாகவேனும் இவர்கள் இருவரில் ஒருவரைத் தெரிவு செய்தே ஆக வேண்டும்.

தேசிய அரசியலில் பங்குபற்றுவது அவசியம்.

1. சகலவற்றிலுமிருந்து விலகி இருக்க வேண்டும்.

2. முன்னையஅமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், ஏ.ஸி.எஸ். ஹமீத் போன்றோர் செயற்பட்டது போன்று சிறுபான்மையினர் பற்றிப் பேசாமல் இருக்க வேண்டும்.

**தேவநேசன் நேசையா**

3. தமிழ்த் துரோகிகளாக, அடிமைகளாக இருக்கவேண்டும்.

இந்த மூன்று தெரிவுகளும்தான் உள்ளன என்று சிலர் நினைக்கலாம். ஆனால் வேறு தெரிவுகளும் உள்ளன.

பதியுதீன் மொஹமட்,ஏ.எச்.எம்.அஷ்ரப்,சௌமியமூர்த்தி தொண்டமான் போன்றோர் தமது சமுதாயத்தின் தேவைகளை தேசிய அரசியலில் இருந்து கொண்டு நிறைவேற்றிக் கொண்டார்கள் ஏன் இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் தேசிய அரசியலில் இவ்வாறான ஒருபங்களிப்பைச் செய்யவில்லை.

# இந்திய -இலங்கை அணிகள் மோதிய 5ஆவது போட்டி மோசமான களநிலை காரணமாக இடைநிறுத்தம்!

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையேயான 5ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி, டில்லியில் நேற்றுக் காலை தொடங்கிய நிலையில், ஆடுகளம் அபாயகரமாக மாறியமையால் ஆட்டம் பாதியிலேயே ரத்துச் செய்யப்பட்டது.

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் மற்றும் 'ருவென்ரி-20' போட்டிகள் முடிவடைந்து, ஒரு நாள் போட்டித் தொடர் நடைபெற்று வந்தது. கொல்கத்தாவில் நடைபெற்ற 4 ஆவது ஒருநாள் போட்டியில் அபார வெற்றிபெற்ற இந்தியா, தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையேயான 5ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி புதுடில்லி பெரோசா கோட்லா மைதானத்தில் நேற்றுக் காலை தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி, முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி, முதல் பந்திலேயே தரங்கவை இழந்தது.

தொடர்ந்து டில்ஷான் (20), ஜெயசூர்ய (31), சங்கக்கார (1), சமரவீர (2) ஆகியோரும் தட்டுத்தடுமாறி ஆட்டமிழந்தனர்.

இலங்கை அணி 23.4 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 83 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மோசமான ஆடுகளம் காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அப்போது கண்டம்பி 7 ஓட்டங்களுடனும், புஷ்பகுமார 10 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தனர்.

ஆரம்பத்திலிருந்தே மிகவும் அபாயகரமான முறையில் தாறுமாறாகப் பந்துகள் பாயத் தொடங்கின. இதனால் வீரர்கள் துடுப் பெடுத்தாட முடியாத நிலை ஏற்பட்டது. இவ்வாறு ஆடிக் கொண்டிருந்த டில்ஷானின் தோள் பட்டையில் பந்து பட்டு காயப்படுத்தியது.

இந்நிலையில், 23.4 ஓவர்கள் வரை போட்டி தடுமாற்றமாகப் போய்க்கொண்டிருந்தபோது இலங்கை வீரர் டிலான் கண்டம்பி, இந்திய அணித்தலைவருடன் ஆடுகளம் குறித்து விவாதித்தார். பின்னர் நடுவர்களும் அதனை ஏற்றுக்கொள்ள ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

## விக்ரோரியா அணியில் ரோஸ் ரெய்லர்

ஆஸ்திரேலியாவின், விக்ரோரியா அணியிலிருந்து காயம் காரணமாக பாகிஸ்தானின் சொகைல் தன்வீர் நீக்கப்பட்டதையடுத்து, நியூஸிலாந்து வீர ரான ரோஸ் ரெய்லர் சேர்க்கப்பட்டுள் ளார்.

உள்ளூர் தொடர்களில் ஒன்றான கே.எப்.சி., பிக் பாஷ் 'ருவென்ரி-20' கிரிக்கெட் தொடர் இன்று முதல் அடுத்த மாதம் 23ஆம் திகதி வரை ஆஸ்திரேலி யாவில் நடக்கவுள்ளது.

விக்ரோரியா அணியில், இடம்பெற்றிருந்த பாகிஸ்தான் சகலதுறை வீரரான சொகைல் தன் வீர், தற்போது முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக நீக்கப்பட்டார். இதனால் இவரது இடத்தைப் பூர்த்திசெய்வதற்காகவே நியூஸிலாந்தின் ரோஸ் ரெய்லர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

## பந்துவீச்சில் தூள் கிளப்புகிறது இங்கிலாந்து; தடுமாறுகிறது தெ.ஆபிரிக்கா!

டர்பன், டிச.28

இங்கிலாந்து-தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கிடையி லான இரண்டாவது டெஸ்ட்போட்டியில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 175 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடந்து வருகிறது.

முதலாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டி டர்பனில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

பிரின்ஸ் (2), ஆம்லா (2) ஆகியோர் முதல் 10 ஓவர்களுக்குள் வெளியேற்றப்பட்டனர். இதன் பின்னர் வந்த அணித் தலைவர் ஸ்மித்தும், கலீஸும் இணைந்து அணியைச் சரிவிலிருந்து மீட்டு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தனர்.

ஆனால் இந்த ஜோடி பிரிந்ததும் தென்னாபிரிக்க அணிக்கு மீண்டும் வீழ்ச்சி ஏற்பட்டது. கலீஸ் 75 ஓட்டங் களைப் பெற்ற நிலையில் ஸ்வானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் ஸ்மித் (75) துரதிர்ஷ்டவசமாக 'ரன்- அவுட்' ஆனார்.

அவரைத் தொடர்ந்து டுமினியும் (4) வந்த வேகத்தில் 'பெவிலியன்' திரும்பினார்.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 61 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 175 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது, போதிய வெளிச்சமின்மை காரணமாக முதல் நாள் ஆட்டம் முன்கூட்டியே முடித்துக்கொள்ளப்பட்டது. டி வில்லியஸும் (8), பௌச்சரும் (1) களத்தில் உள்ளனர்.

# தடம்புரள்கிறது பாகிஸ்தான்!

மெல்போர்ன், டிசெ.28

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 109 ஓட்டங்களைப் பெற்று தடுமாற்றத்துடன் காணப்படுகிறது. முன்னதாக தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக்கொண்ட ஆஸ்திரேலிய அணி விக்கெட்டுகள் இழப்புக்கு 454 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பின்னர் முதல் நாள் ஆட்டநேர முடிவின்போது ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 305 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

மைக் ஹஸி (38), ஹவுரிட்ஸ் (5) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

பின்னர் இரண்டாவது நாளான நேற்று தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி, 382 ஓட்டங்களைப் பெற்றபோது ஹஸியை இழந்தது. அவர் மொத்தமாக 82 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார். அவருடன் நின்று ஆடிய கௌரிச் 75 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். இவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 454 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது. கிளார்க் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், மொகமட் ஆஸிப் 2 விக்கெட்டுகளையும் அப்துல் ரௌவ், சயித் அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கியது பாகிஸ்தான் அணி, நேற்றைய ஆட்டநேரமுடிவின்போது 4விக்கெட்டுகள் இழப்புக்கு 109 ஓட்டங்களைப் பெற்றது.

இம்ரான் (9), சல்மான் பட் (45), இக்பால் (15), மொகமட் யூசுப் (22) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தனர். உமர் அக்மல் 10 ஓட்டங்களுடனும் மொகமட் ஆமீர் ஓட்டமெதுவும் பெறாமலும் களத்தில் உள்ளனர்.

ஆஸி. அணி சார்பாக சிடில், கௌரிச், ஜோன்சன், வோட்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.

# தமிழ் வேட்பாளர் அல்லது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் இன்று தமது அரசியல் தலைமைத்துவத்தை இழந்து நிற்கின்றார்களோ என்று எண்ணத் தோன்றியுள்ளது. தனிப்பட்ட மனிதர்களின் சுயநலம் மேலோங்கி, அவர்களின் பொறுப்பற்ற வார்த்தைகளினால் தமிழ் மக்களின் மனங்கள் கலக்கத்திலும் குழப்பத்திலும் நீந்திக்கொண்டிருக்கின்றன.

நான் அண்மையில் இந்தியாவில் இருந்தபோது வெளிநாட்டில் இருந்து சில அன்பர்கள் என்னுடன் தொடர்புகொண்டு, தமிழ் மக்கள் சார்பில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு நான் கூறிய பதில் இதுதான்:-

1.ஒரு தமிழ் மகன் தனித்துவமாக ஜனாதிபதித் தேர்தலில் நின்று, எல்லாத் தமிழ்ப் பேசும் மக்களும் அவருக்கு வாக்களித்தாலும் கூட எந்த நன்மையும் எமக்குக் கிட்டப் போவதில்லை. முக்கியமான இருவரில் ஒருவர்தான் பதவிக்கு வரப்போகின்றார். தனக்கு விரும்பியதைத்தான் அவர் செய்யப் போகின்றார்.

2.நாங்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தாலும் அதே நிலைதான்.

3. இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் கையாலாகாத் தன்மையையே வெளிக்காட்டும். மேலும் தங்களின் ஜனநாயக உரித்தை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை என்பதையும் அது எடுத்துக்காட்டும்.

4. இதுவரை காலமும் தேர்தல்களில் தமிழ் மகன் ஒருவரை நிறுத்துவது, தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்பன போன்ற காரியங்கள், தமிழ் மக்களின் பின்னணியில் ஆயுதம் தாங்கியோர் உறுதுணையாக இருக்கின்றனர் என்ற எண்ணத்தில், தமது தனித்துவத்தைக் காட்டும் விதத்தில், நடைபெற்றிருக்கலாம். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டிருக்கும் இந்த நிலையில் அதே வழிமுறைகளைப் பின்பற்றுதல் சரிதானா என்று யோசிக்க வேண்டும்.

5. இந்த நிலையில் பதவிக்கு வர எத்தனிக்கும் இருவரையும் சந்தித்துத் தமிழ் மக்களுக்கு அவர்களிடமிருந்து பெற்றுக் கொடுக்கக்கூடிய ஆகக்கூடிய நன்மைகள் என்னவென்பதை ஆராய்ந்து பார்ப்பதே சிறந்தது.

- இப்படி நான் அவர்களுக்குப் பதில் கூறினேன்.

இன்று இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உணர்ந்து செய்வதையிட்டு மகிழ்வுறுகிறேன். [illegible] பார்த்து எவ்வாறு [illegible] வேண்டும் என்பதைத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்தியம்ப வேண்டும்.

கூட்டமைப்பில் உள்ள ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாகப் பேசுவதை நிறுத்தவேண்டும்.

கூட்டமைப்பை வழிநடத்தும் ஒருவரின் வழிகாட்டலுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்.

ஒன்று மட்டும் நிச்சயம். நாங்கள் தமிழ் மகன் ஒருவருக்கு வாக்களித்தாலோ, தேர்தலைப் பகிஷ்கரித்தாலோ எங்கள் ஜனநாயக உரித்தை நாங்கள் விட்டுக் கொடுத்தவர்களாகவே அது அமையும்.

எங்கள் கைகளில் 'வாக்கு' என்ற பலத்த ஆயுதம் ஒன்று இருப்பதை நாங்கள் மறத்தலாகாது.

சௌமியமூர்த்தி தொண்டமான் மலைநாட்டுத் தமிழ்ச் சகோதர, சகோதரிகளை வழிநடத்தியபோது 'வேலைநிறுத்தம்' என்ற பாரிய ஆயுதத்தைப் பாவித்தார். முஸ்லிம் சகோதரர்கள் தங்கள் உரித்துகளைப் பெற்றெடுக்க மத ரீதியாகத் தமக்கு உதவி செய்யக்கூடிய நாடுகள் இருப்பதை ஒரு ஆயுதமாகவே பாவித்தனர்.

ஆனாலும் இலங்கைத் தமிழ் மக்கள் ஆயுதத்தில் நம்பிக்கை வைத்து இன்று [illegible] இருக்கின்றனர். [illegible] இருப்பினும், தமிழ் மக்கள் எல்லா ஆயுதங்களையும் இழந்த நிலையில் இருக்கின்றார்கள் என்று தப்புக்கணக்குப் போட்டுவிடக் கூடாது.

ஜனநாயக ரீதியில் பார்த்தால் தமிழ்ப் பேசும் மக்களின் ஒற்றுமை ஒரு பெரிய ஆயுதம். உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோமானால் வரும் 'பொதுத் தேர்தலில்' இரு பெரிய கட்சிகளும் கிட்டத்தட்ட சம பலம் பெற்றிருந்தால் அவர்களில் தமிழ் மக்கள் யாரை ஆதரிக்கின்றார்களோ அவர்களே அரசு அமைக்கத் தமிழ் மக்கள் உதவுவர்.

சென்ற தடவை 22 பேர் நாடாளுமன்றுக்குத் தெரிவானார்கள். இம்முறை அந்த ஒற்றுமையை நாம் இழந்து விடுவோமானால் எங்களின் ஒரே ஆயுதத்தையும் நாங்களே விட்டெறிந்த நிலைக்கு வந்துவிடுவோம்.

தமிழ் மக்களின் ஒற்றுமை இந்த நாட்டின் ஜாதகத்தைக் கணிக்க உதவும். பதவியில் இருக்கும் ஒருவரைக் கீழே இறக்கவும், இன்னொருவரை மேலே ஏற்றவும் தமிழ்ப் பேசும் மக்களால் முடியும் என்பதைச் சிலர் அறிந்திருக்கின்றபடியால், தமிழ்ப் பேசும் மக்களிடையே வேற்றுமைகளை விதைக்க அவர்கள் பாடுபடுகின்றனர். எங்களின் வேற்றுமைகள் அவர்களுக்கு உதவும். எங்கள் ஒற்றுமை எங்களுக்கு உதவும். இவ்வளவுதான் என்னால் கூறமுடியும். - என்றார் நீதியரசர் ஸி.வி. விக்னேஸ்வரன். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெலுங்கானா முடிவை அறிவிக்காவிடின் நாளைமுதல் காலவரையற்ற போராட்டம்!

## சந்திரசேகர ராவ் எச்சரிக்கை

ஹைதராபாத், டிசெ.28



தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கை குறித்து இன்று திங்கட்கிழமைக்குள் மத்திய அரசு முடிவு எடுக்க வேண்டும். இல்லையெனில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் காலவரையற்ற முழு அடைப்புப் போராட்டத்தைத் தொடங்க இருக்கின்றனர் என தெலுங்கானா கூட்டுப் போராட்டக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

தெலுங்கானா விடயத்தில் மத்திய அரசு தனது நிலையிலிருந்து பின்வாங்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வியாழக்கிழமை 48 மணி நேர முழு அடைப்புப் போராட்டத்தை தெலுங்கானா ஆதரவு கூட்டு போராட்டக் குழு அறிவித்தது. ஆனால் வெள்ளிக்கிழமை கிறிஸ்துமஸ் பண்டிகை என்பதால் பந்த் விலகிக்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் இந்த விடயத்தில் திங்கள்கிழமைக்குள் முடிவு எடுக்காவிட்டால் காலவரையற்ற முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று தெலுங்கானா ராஷ்ட்ர சமிதி தலைவர் சந்திர சேகர ராவ் எச்சரித்துள்ளார்.

இதற்கிடையே தெலுங்கானா ஆதரவுப் போராட்டத்தால் 3 ஆவது நாளாக பல இடங்களில் வன்முறை வெடித்தது. கலவரக்காரர்கள் கரீம்நகர் மாவட்டத்தில் உள்ள வேமுலவதா நகரில் உள்ள தெலுங்கு தேச கட்சி அலுவலகத்தை தீ வைத்து கொளுத்தினர்.

இதுபோல் வாரங்கல், நல்கொண்டா, அடிலாபாத் மாவட்டங்களில் தெலுங்குதேச தலைவர்களின் உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டன.

ரமகுண்டம் மண்டல் பகுதியில் அரசு அலுவலகத்துக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர். இதுபோல் தெலுங்கானா பகுதியில் பல இடங்களில் தொடர்ந்து ஊர்வலம், ஆர்ப்பாட்டம் ஆகியவை நடைபெற்றன.

தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கையை வலியுறுத்தி போராடுவதற்காக தெலுங்கானா கூட்டுப் போராட்டக் குழு சில நாள்களுக்கு முன் அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் முதலில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளும் இடம் பெற்றனர்.

ஆனால் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முழு அடைப்புப் போராட்டத்தின் போது தெலுங்கானா ராஷ்ட்ர சமிதி ஆத ரவு மாணவர்கள் தெலுங்கு தேச எம்.எல்.ஏ. ஜனார்த்தன ரெட்டியைக் கடுமையாகத் தாக்கினர். மேலும் தெலுங்கு தேச பிரமுகர்களின் சொத்துகளை குறிவைத்துப் போராட்டக்காரர்கள் தாக்கி வருகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில் கூட்டுப் போராட்டக் குழுவிலிருந்து விலகுகிறது என தெலுங்கு தேச கட்சி அறிவித்துள்ளது.

இருப்பினும் தொடர்ந்து தெலுங்கு தேச கட்சி அலுவலங்கள் மற்றும் தெலுங்கு தேச தலைவர்கள் சொத்துகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

# தெலுங்கானா பதற்றத்துக்கு காங்கிரஸே காரணம் எனக் குற்றச்சாட்டு

புதுடில்லி, டிசெ. 28

தெலுங்கானாப் பிரச்சினை தொடர்பாக ஆந்திர மாநிலத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றத்துக்கு காங்கிரஸ் கட்சியும் மத்திய அரசுமே காரணம் - என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழுக் கூட்டம் டில்லியில் சனிக்கிழமை தொடங்கியது. 2 நாள்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் தற்போதைய முக்கிய பொருளாதார, அரசியல் விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு இடையே கட்சியின் மூத்த தலைவர் சீதாராம் யெச்சூரி செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது, தெலுங்கானா விவகாரத்தை காங்கிரஸ் கட்சியும் மத்திய அரசும் தவறாகக் கையாண்டதால்தான் தற்போது கலவரமும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது. அங்கு அமைதியை நிலைநாட்ட அரசியல் கட்சிகள் உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் ஆலோசித்து கருத்தொற்றுமை ஏற்படுத்த மத்திய அரசு முன்வர வேண்டும்.

2 ஆவது மாநில மறுவரையறைக் குழுவை ஏற்படுத்துவது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே ஆபத்தாக முடிந்துவிடும். மொழிவாரியாக அமைந்துள்ள மாநிலம்தான் இந்தியாவின் கூட்டாட்சி முறையின் அடித்தளம் என்றும் அவர் கூறினார்.

# கண்ணீரில் மூழ்கியது கரையோரப் பகுதி



கடற்கரைக் கிராமங்களில் ஆழிப்பேரலையின் 5ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2004 டிசெம்பர் 26 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலையால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்தனர். நாகை மாவட்டத்தில் மட்டும் 6,065 பேர் இறந்தனர்.

நாகை பழைய பஸ் நிலையத்தில் உள்ள மறைமலை அடிகள் சிலையில் இருந்து துறைமுகம் வரை தி.மு.க. சார்பில் அமைதி பேரணி நடந்தது. கனிமொழி எம்.பி. தலைமை வகித்தார். அக்கரைப்பேட்டை சிந்தனை சிற்பி மழலையர் தொடக்கப்பாடசாலையைச் சேர்ந்த 29 குழந்தைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பாடசாலையைச் சேர்ந்த 53 குழந்தைகள் ஆழிப்பேரலையில் இறந்தனர். இவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இறந்த குழந்தைகளின் புகைப்படங்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான பொதுமக்கள், மாணவ, மாணவிகள் மலர்களை ஏந்தியபடி வரிசையாக சென்று அஞ்சலி செலுத்தினர்.

# புத்தாண்டில் சந்திர கிரகணம்!

சென்னை, டிசெ. 28

ஜனவரி முதலாம் திகதி புத்தாண்டு தினத்தன்று பகுதி சந்திர கிரகணம் நிகழவுள்ளது. இது இந்தியா முழுவதும் அதிகாலை 12.22 மணி முதல் 1.24 மணிவரை சுமார் ஒரு மணி நேரம் தெரியும். அதிகாலை 12.53மணி அளவில் உச்ச அளவு கிரகணம் நடக்கிறது.

சந்திரனின் சிறு பகுதியை பூமி மறைப்பதால் மிகக் சிறிய அளவில் மட்டுமே கிரகணம் ஏற்படும். எனவே இது வெறும் கண்களுக்கு தெரியாது. ஆனால் அதற்குரிய உபகரணங்கள் உதவியுடன் இதனைப் பார்க்கலாம். இந்தத் தகவலை சென்னையிலுள்ள அறிவியல் ஆய்வகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கிரகணத்தின் ஆரம்ப நிலையை ஆஸ்திரேலியாவின் தென்கிழக்குப் பகுதிகளில் பார்க்கலாம். அலாஸ்கா, இந்தோனேசியா, ஆசியா, ஐரோப்பா போன்ற பகுதிகளிலும் இந்தக் கிரகணம் தெரியும். முடிவு நிலையை வடக்கு மற்றும் தெற்கு அட்லாண்டிக் கடல் பகுதியில் பார்க்கலாம்.

# பதவியை இழந்தார் ஆந்திர ஆளுநர்; அவர் மீது பாலியல் குற்றச்சாட்டு

ஐதராபாத், டிசெ.28



ராஜ்பவனில் இளம்பெண்களுடன் பாலியல் உறவில் ஈடுபட்டார் என எழுந்த குற்றச்சாட்டு விஸ்வரூபம் எடுத்த நிலையில், ஆளுநர் பதவியில் இருந்து விலகுமாறு ஆந்திர மாநில ஆளுநர் என்.டி. திவாரிக்கு மத்திய அரசு உத்தரவிட்டது. இதையடுத்து, தனக்கு உடல் நிலை சரியில்லை என்ற காரணத்தைக் கூறி திவாரி தனது பதவியை நேற்றுமுன்தினம் ராஜினாமா செய்தார்.

அவருக்கு பதிலாக ஜார்கண்ட் ஆளுநர் சங்கர நாராயணனிடம் ஆந்திர மாநில பொறுப்பு கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநில ஆளுநர் என்.டி.திவாரி (வயது - 86) ஐதராபாத்தில் உள்ள ராஜ்பவனில் வசிக்கிறார். இவர் மூன்று இளம் பெண்களுடன் உல்லாசமாக இருப்பது போன்ற ஆபாச வீடியோ காட்சிகளை தனியார் தெலுங்கு டி.வி. சனல் ஒன்று கடந்த வெள்ளியன்று ஒளிபரப்பியது. அதில், அந்த இளம் பெண்கள் திவாரிக்கு மசாஜ் செய்வது முத்தமிடுவது மற்றும் ஆபாச காட்சிகள் இடம் பெற்றிருந்தன. அதை பார்த்து பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்திய அரசியலில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

திவாரியின் இந்தச் செயலுக்கு இந்தியா முழுவதும் பல்வேறு அரசியல் கட்சிகள், பெண்கள் அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. ஆளுநர் பதவியின் கௌரவத்துக்கு களங்கம் ஏற்படுத்திய திவாரியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று போராட்டம் வெடித்தது. ஆந்திரா முழுவதும் பெண்கள் அமைப்பினர் திவாரியின் உருவப் பொம்மையை எரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

திவாரி சம்பந்தப்பட்ட பாலியல் காட்சிகளை தெலுங்கு சனல் ஒளிபரப்பியதும், அதற்குத் தடை விதிக்கும்படி ஆந்திர உயர் நீதிமன்றத்தில் ஆளுநர் மாளிகை அதிகாரி ஆரியேந்திர சர்மா மனு தாக்கல் செய்தார். இதை பொதுநலன் வழக்காக ஏற்ற நீதிமன்றம், அந்த ஒளிபரப்புக்கு தடை விதித்தது. இதையடுத்து, ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது. இந்தத் தடையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தெலுங்கு சேனல் மனு தாக்கல் செய்துள்ளது.

இதற்கிடையே, திவாரி மீதான பாலியல் குற்றச்சாட்டு பற்றி உடனே அறிக்கை அனுப்பும்படி ஆந்திர அரசுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது. அதன் பேரில், மாநில அரசு உடனடியாக அறிக்கை அனுப்பியது.

இதைத்தொடர்ந்து, பதவியில் இருந்து உடனடியாக விலகுமாறு ஆளுநர் திவாரிக்கு மத்திய அரசு அதிரடியாக உத்தரவிட்டது. இதையடுத்து, அரை மணி நேரத்தில் திவாரி தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினார். அதில், தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் ஆளுநர் பொறுப்பில் இருந்து விடுவிக்கும்படி கூறியுள்ளார்.

அதை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், ஜார்கண்ட் மாநில ஆளுநர் சங்கர நாராயணனிடம் ஆந்திர மாநில ஆளுநர் பொறுப்பைக் கூடுதலாக அளித்தார்.

# தொண்டர்கள் கடுமையாக உழைத்தால் பா.ஜ.க. மீண்டும் ஆட்சியைப்பிடிக்கும்

## புதிய தலைவர் நிதின் கட்காரி நம்பிக்கை

மும்பை, டிசெ. 28

இந்தியாவில் மீண்டும் ஆட்சியை பிடிப்போம். தொண்டர்கள் முழு மூச்சுடன் கடுமையாக உழைத்தால் பா.ஜ.க. மீண்டும் ஆட்சி அமைக்கும் - என்று அந்தக் கட்சியின் புதிய தலைவர் நிதின் கட்காரி தெரிவித்தார்.

பா.ஜ.கட்சியின் தலைவராக இருந்த ராஜ்நாத் சிங்கின் பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து அந்த கட்சியின் மராட்டிய மாநில தலைவராக இருந்த நிதின் கட்காரி, புதிய தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறார். பதவியேற்றதும் முதன் முறையாக, சொந்த மாநிலமான மராட்டியத்துக்கு நேற்று முன்தினம் அவர் சென்றார்.

மும்பையில் அவரை வரவேற்று பா.ஜ.கவின் சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது. அதில் பங்கேற்று நிதின் கட்காரி பேசியவை வருமாறு-

மிகச் சிறப்பான வரவேற்பை நான் இங்கு பெற்றுள்ளேன். இது எனக்கு மட்டுமே உரித்தானது அல்ல. பா.ஜ.கவை சேர்ந்த அனைத்து தொண்டர்களையும் சேரும். என்னை போன்ற சாதாரண கட்சித் தொண்டர் கூட தேசிய தலைவரானதன் மூலமாக, ஒரு வித்தியாசமான அரசியல் இயக்கம் என்பதை பா.ஜ.க. நிரூபித்திருக்கிறது.

நம்மால் வெற்றி பெற முடியும். இதற்கு முன் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். எதிர்காலத்திலும் நாம் வெற்றி பெறுவோம். நாடாளுமன்றத்தில் நிச்சயமாக நாம் கொடி ஏற்றுவோம். இந்தியாவில் மீண்டும் ஆட்சியை பிடிப்போம். அதற்கான பொறுப்பில் நாம் அனைவருக்கும் பங்கு உண்டு. தொண்டர்கள் அனைவரும் முயற்சியுடன் கடுமையாக உழைத்தால் பா.ஜ.க. ஆட்யைப் பிடிக்கும்.

மராட்டியத்தில் இந்த முறை நம்மால ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. அதற்காக வருத்தப்பட வேண்டாம். அடுத்த முறை மராட்டிய சட்டசபைத் தேர்தலில் 100 இடங்களுக்கு மேல் பா.ஜ.க. கைப்பற்றும். நாம் கடுமையாக உழைத்து நம்முடைய வலிமையை அதிகரித்து ஆட்சியைப் பிடிப்போம் - என்றார்.

# ஆங்கிலப் புத்தாண்டன்று நள்ளிரவில் கோவில்களைத் திறந்தால் போராட்டம்

## இந்து முன்னணி அறிவிப்பு

சென்னை, டிசெ. 28

ஆகம விதிக்குப் புறம்பாக ஆங்கில புத்தாண்டு தினமான ஜனவரி முதலாம் திகதி நள்ளிரவில் கோவில்களைத் திறக்கக் கூடாது. அதையும் மீறி கோவில்கள் திறக்கப்பட்டால் இந்த முன்னணியினர் தமிழ்நாடு முழுவதும் கோவிலை பூட்டும் போராட்டத்தில் பூட்டு, சாவியுடன் ஈடுபடுவார்கள் - என்று இந்து முன்னணி மாநில அமைப்பாளர் நா.முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்து மதத்திற்கும், ஆங்கில புத்தாண்டிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இந்து முறைப்படி நாள் தொடங்குவது சூரிய உதயத்திலிருந்துதான். நள்ளிரவில் இந்துக்களின் நாள்கணக்கு தொடங்குவதில்லை. கிறிஸ்தவர்களுக்குத்தான் ஆங்கில புத்தாண்டு. அவர்களது கணக்கு படி நள்ளிரவில்தான் நாள் தொடங்குகிறது. இதெல்லாம் மதசார்பற்ற அதிகாரிகளால் இயங்கும் அறநிலையத் துறைக்கு தெரியவில்லை.

கோவில்கள் வியாபாரத் தலங்கள் அல்ல. இந்துமத நம்பிக்கைகளின் பிரதிபலிப்பு மற்றும் இந்துக்களுக்கு ஆத்ம அமைதியைக் கொடுக்கும் இடம் ஆகும். எனவே, பணத்திற்காக ஆகம விதிக்கு புறம்பாக ஜனவரி முதலாம் திகதி நள்ளிரவில் கோவில்களை திறக்கக்கூடாது. அதையும் மீறி கோவில்கள் திறக்கப்பட்டால் ஆகம விதிகளைக் காப்பதற்காக இந்த முன்னணியினர் தமிழ்நாடு முழுவதும் கோவிலை பூட்டும் போராட்டத்தில் பூட்டு, சாவியுடன் ஈடுபடுவார்கள். கோவில்களில் பதற்றத்தைத் தவிர்க்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜிலிங்கத்துக்கு மடல் ஒன்று,... இங்கே ...

எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்களுக்கு என் அன்பு மடல்.

*"யாகாவாராயினும் சொல்காக்க காவாக்கால் சோகாப்பார் சொல் இழுக் குப்பட்டு"*

என்ற வள்ளுவர் பெருமான் வில்லிய லான் மறையை மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவர்களுக்கு நினைவூட்டி என் அன்பு மடலைத் தொட ருகிறேன்.

அரசியல், பண்பாடு, நாகரிகம் ஆகிய விழுமிய நெறிகளை, அரசியல் முதிர்ச்சி யும் ஆளுமையும் சான்றாண்மையும் மிக்க, என்றும் தமிழ் மக்கள் நெஞ்சில் நிலைத்து நிற்கின்ற தந்தை செல்வா அவர்கள் எவ் வாறு கடைப்பிடித்து ஒழுகினார் என்ப தனை இஞ்ஞான்று மீண்டும் ஒருமுறை நினைவுகூர்ந்து உங்களுக்கு நினைவூட் டச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் அகமகிழ்கிறேன்.

மூன்று தசாப்தங்களுக்கு முன்னால் யாழ்.செயலக முன்றலில் மறைந்த தலை வர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் மருத்துவ முனைவர் ஈ.எம்.வி. நாகநாதன், கு.வன்னியசிங்கம், வ.நவரத்தினம் இன்னும் பல அரசியல் பிர முகர்களோடு இணைந்து தந்தை செல்வா அவர்கள் அறவழியில் சத்தியாக் கிரகம் ஒன்றை நடத்தினார். அப்போது நாட்டின் ஆட்சி முதல்வராக இருந்த திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா அவர்கள் லண்டன் சென்றிருந்தார். அங்கே அவ ரைச் சூழ்ந்து கொண்ட பத்திரிகையாளர் கள் யாழ்.செயலக முன்றலில் நிகழ்ந்து கொண்டிருந்த சத்தியாக்கிரகம் பற்றிக் கேட்டபோது, முதல்வர் அவர்கள், அவர் கள் சத்தியாக்கிரகம் செய்வதற்கு என்ன காரணம் என்பது எனக்குப் புரியவில்லை. அவர்களை நான் இராணுவத்தை அனுப் பிக் கலைப்பேன் என்று காட்டமாகப் பதிலளித்தார். அந்தப் பதிலைத் தந்தை செல்வாவிடம் உள்ளூர், வெளிநாட்டுப் பத் திரிகையாளர் கூறி, அவர் கருத்தை வின வியபோது, அவ்விதம் கருத்துக் கூறிய முதல்வரைப் புண்படுத்தாத விதத்தில் பின் வருமாறு நகைச்சுவை விஞ்ச தனக்கே உரிய அமைதியோடு பதிலளித் தார்:

பண்டாரநாயக்கா துப்பாக்கிச் சூட் டினை எதிர்நோக்கிய போது எப்படி உத வியற்றிருந்தாரோ அதைப்போல நாமும் இருப்போம்.

இந்தப் பொறுமையும் பெருமையும் அறிவாற்றலும் மிக்க அப்பெரு மகன் வழியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழர்க ளின் உரிமைக்கான அறவழிப் போராட்டம், இன்று பல திருப்பு முனைகளைச் சந்தித்து நிற்கிறது. தந்தையின் வழியில் நடக்க வேண்டிய உரிமைக்காகக் குரல் கொடுப்ப தற்கு, தம்மை அர்ப்பணித்ததாகக் கூறு கின்றவர்கள் நேர்மையோடும், நிதானத் தோடும் பேசும் பண்பினைக் காத்திட வேண்டும். நீங்கள் காழ்ப்புணர்ச்சியோடு உதிர்த்த சில அடிப்படையற்ற கருத்துக ளுக்குத் தங்களை மதித்து விரும்பி, பின் வரும் கருத்துக்களை யான் விளம்புகிறேன்.

உதயன், சுடர் ஒளி நிர்வாக இயக்குநர் ஈ. சரவணபவன், ஆசிரியர். வித்தியாதரன் ஆகியோர் பற்றி நீங்கள் கூறிய கருத்துக் கள் ஆதாரமற்றவை, அடிப்படை அற்றவை என்பது தங்கள் மனச் சாட்சிக்கே தெரியும். ஏனென்றால், "தன்நெஞ்சறிவது பொய் யற்க பொய்த்தபின் தன்நெஞ்சே தன் னைச் சுடும்" என்ற குறள் வழியில் ஒழுகு பவர் என்ற உங்களைப் பற்றிய கருத்து என் மனதில் நிலையானதாகும்.

உதயன், சுடர் ஒளி ஆகியன வெறும் நாளேடுகளாக ஆரம்பிக்கப்[illegible]வில்லை என்ற பேருண்மை உங்களுக்குத் தெரியாத தன்று. தமிழ் மக்களுக்கு உரிமைக் குரலாக ஓங்கி ஒலிப்பவர்களுக்கு உறுதுணையாக நீண்ட நெடுங்காலமாக உணர்வுகளையும்,




சிந்தனைகளையும், கருத்துக்களையும் பகிர்ந்து அவர்களை ஆற்றுப்படுத்தும் பணியில் இந்த இரு ஏடுகளும் சந்தித்த இழப்புக்கள், இறப்புக்கள், அச்சுறுத்தல் கள், காவல்துறை தடுப்பு, காவல்துறை விசாரணைகள் இந்த நாட்டு மக்களுக்குத் தெரிந்தது போல உங்களுக்கும் தெரிந் தவைதான்.

அப்படியொரு உண்மையை அப்பட்ட மாக மறைத்து நீங்கள் வெளியிட்ட கருத் துக்கள், நீங்கள் ஆசிரியரின் பத்தியில் விமர் சிக்கப்பட்டதனால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி யினால் உயிர்க்கப்பட்டவை என்பது வெள்ளிடை மலை. இவர்கள் இருவரில் எவரேனும் ஐ.தே.கட்சியின் அடிப்படை உறுப்பினர்களாகவோ, அல்லது அவர்களின் வேட்பாளர்களுக்கு வாக்குச் சேகரிப்பவர்க ளாகவோ அல்லது அவர்களின் பரப்புரைக் கூட்டங்களில் பேசுகிறவர்களாகவோ அல்லது அவர்களின் வேட்பாளர்களின் வெற்றிக்கு வலுச்சேர்க்கின்ற விதத்தில் கருத்துக்களைத் தங்களுடைய ஏடுகளின் மூலம் கழறுகின்றவர்களாகவோ செயற் பட்ட ஒரு சந்தர்ப்பத்தைத் தானும் நீங்கள் கூறமுடியுமா? கூறமுடியாது என்பது எங் களுக்குத் தெரியும். ஏனென்றால் அப்படி நிகழ்ந்ததுமில்லை;நிகழப் போவதுமில்லை. அப்படி இவர்களுக்கு அரசியல் பதவிக ளுக்கான விருப்பு இருந்திருக்குமானால் அதை எப்போதோ அவர்கள் நிறைவேற் றியிருக்க முடியும். அதற்கான வளமும் வலுவும் அவர்களிடம் நிறையவே உண்டு. அவர்கள் அவற்றை உரிமைப் போராட்டத் தின் வெற்றிக்குப் பயன்படுத்தினார்கள், பயன்படுத்துகிறார்கள், பயன்படுத்துவார் களே தவிர வெறும் பதடிகள் போல் பதவிக ளுக்காகப் பல்லிளித்து அங்கலாய்க்க மாட் டார்கள் என்பது நான் ஒருவன் மட்டு மல்ல தமிழ் கூறும் நல் உலகமே அறிந்த பேருண்மையாகும்.

*'என் நெஞ்சினில் கருத்தினை எழுதிட*
*எந்தைக்குத் தானும் அஞ்சேன்.*
*வன் நெஞ்சர் என்மீது சொல்லம்பு வீசினும்*
*வந்தனை செய்து கெஞ்சேன்,*
*போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித்*
*தூற்றுவார் தூற்றட்டும். துணிந்து சொல்வேன்.*
*ஏற்றதொரு கருத்தை எனதுள்ள மென்றால்'*

என்ற புரட்சிக் கனல் பாரதிதாசனின் வழி நின்று இங்கு புரட்சிக் கனலாக, அடா வடித் தனங்களையும், அராஜகங்களை யும், சமூக அநீதிகளையும் சரமாரியாகச் சாடி உதயன் மற்றும் சுடர் ஒளி ஏடுகளை உரிமைக் குரலாக ஒலிக்கச் செய்கின்ற விறல் மிக்கவர் ஆசிரியர் ந.வித்தியாதரன் அவர்கள். இதனைத் தமிழ் கூறும் நல் உலகு நன்கு அறியும்.

எனவே, தங்களுடைய பொறுப்பற்ற கருத்துக்களை பெருமனதோடு தாங்கள் மீளப்பெற்று, தங்கள் அரசியல் பண்பாட் டினை நிலைநிறுத்துவதே தமிழ் மக்க ளுக்கு நீங்கள் செய்கின்ற ஒரு நற்கரும மாகும். நீங்கள் சென்னையில் இருந்த போது, நீங்கள் இங்கு வந்தால், உங்களை இங்குள்ள அரசுக் கரங்கள் பிடித்துத் துன் புறுத்திச் சிறையில் இடுவார்கள் என்று அஞ்சி அறிக்கை வெளியிட்டீர்கள். பின்பு என்ன நிகழ்ந்ததோ தெரியவில்லை. நீங் கள் வந்தீர்கள். குடியரசுத் தலைவர் வேட் பாளர்களில் ஒருவராகினீர்கள். இவை எல் லாம் தங்கள் அரசியல்.

நாங்கள் உங்களிடம் எதிர்பார்ப்பது தனிமனித மற்றும் அரசியல் பண்பாடு மட்டும்தான். பொறுப்புணர்ச்சியோடு கூடிய செயற்பாடு மட்டும்தான்.

*சி.சிவசுப்பிரமணியம்,வடமராட்சி.*

# தேவையற்ற கருத்துக்களைத் தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் ''உதயன்'' ''சுடர் ஒளி'' பத்திரி கைகள் தொடர்பாகவும் அதன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் தொடர்பாக வும் லண்டனில் வெளியிட்ட கருத்தானது காலத்துக்கு உகந்ததாகவோ அல்லது அரசியல் நாகரிகம் கொண்டதாகவோ காணப்படவில்லை என்பதில் எவருக்கும் இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

தமிழர்களின் அரசியல் தொடர்பான பிரச்சினைகளை வலியுறுத்தி கடந்த ஆறு தசாப்த காலமாக மேற்கொள்ளப்பட்ட அரசியல் பாதையானது மீண்டும்தொடங் கிய இடத்திற்கே வந்துவிட்ட இன்றைய சூழலில், தனிப்பட்ட ரீதியில் ஒரு பத்தி ரிகை நிறுவனத்தையும் அதன் நிர்வாகி களையும் விமர்சிப்பதென்பது தேவை யற்ற ஒன்றென்றே கருத வேண்டியுள்ளது.

அதாவது மக்கள் அனுபவித்துபடும் துன்பங்களை களைந்து நிம்மதியான வாழ் வுக்கு வழிகாட்ட வேண்டிய இன்றைய சூழ்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை வெளியிடுவதென்பது எந்தவகையிலும் உகந்ததல்ல; தேவையற்றது.

'உதயன்' பத்திரிகை உள்ளதை உள்ள வாறு துணிவுடன் மக்களுக்கு தெரிவித்து வருவதால் அது கடந்து வரும் பாதை கரடு முரடானது. எனினும் மக்களுக்கு உண் மைச் செய்திகளை உள்ளவாறு வழங்கி வருகின்றது.

இந்நிலையில் முகாம்களில் முடங்கியும் பொருளாதார ரீதியில் நலிவுற் றும் வாழும் தமிழ் மக்களின் அவலங்களுக்கு குரல் கொடுக்க வேண்டிய இன்றைய நிலை யில் ஏற்காத கருத்துக்களைக் கூறி சர்ச் சைக்குள் மாட்டிக் கொள்வதை சம்பந்தப் பட்டவர் தவிர்ப்பதே நல்லது.

பேராசிரியர் கா.குகபாலன், கொக்குவில்

# அமெரிக்க விமானத்தை நடுவானில் தகர்க்க எடுத்த முயற்சி முறியடிப்பு

## 278 பயணிகள் உயிர் தப்பினர்

வாஷிங்டன், டிசெ. 28



அமெரிக்க விமா னத்தை வெடிபொ ருள் வைத்து நடுவா னில் தகர்க்க முயன்ற அல் - குவைதா பயங் கரவாதியைப் பய ணிகள் மடக்கிப் பிடித் தனர்.

இந்த விமானம் நெதர்லாந்து தலை நகர் ஆம்ஸ்டர்டம் நகரிலிருந்து 278 பயணி களுடன் அமெரிக்காவிலுள்ள டெட்ராய்ட் நகருக்குச் சென்றுகொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நடந்தது.

கிறிஸ்மஸ் தினத்தில் அமெரிக்க மக்க ளுக்குத் துயரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தச் சதி தீட்டப்பட்டி ருக்கலாம் என்றும், ஆனால் அதிர்ஷ்டவச மாகப் பயங்கரவாதி மடக்கிப் பிடிக்கப்பட் டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். பிடி பட்ட அல் - குவைதா பயங்கரவாதி உமர் பாரூக் அப்துல் முதாலாப் நைஜீரியாவைச் சேர்ந்தவர். லண்டனில் பொறியியல் படிப்பு படித்து வருபவர்.

நோர்த்வெஸ்ட் ஏர்லைன்ஸ் விமானம் வெள்ளிக்கிழமை இரவு ஆம்ஸ்டர்டம் நகரி லிருந்து அமெரிக்காவிலுள்ள டெட்ராய்ட் நகருக்குப் புறப்பட்டது. விமானம் டெட் ராய்ட் நகரில் தரையிறங்குவதற்கு 25 நிமி டங்களுக்கு முன்னர் ஓர் இருக்கையிலிருந்து பட்டாசு வெடித்தது போன்ற சத்தத்துடன் புகை வந்தது.

அருகிலிருந்த பயணிகள் பீதியடைந்து விமானப் பணியாளர்களுக்குத் தகவல் கொடுத்தனர். அந்த இருக்கையில் இருந்த இளைஞர் தான் வைத்திருந்த வெடிமருந் துக்கு நெருப்பு வைக்க முயன்றது தெரிய வந்தது. அருகில் இருந்த பயணிகளும் விமா னப்படையாளர்களும் அவரை மடக்கிப் பிடித்து நெருப்பை அணைத்தனர்.

வெடிமருந்தை வெடிக்கவைப்பதற்காக அவர் வைத்திருந்த கருவி குறிப்பிட்ட நேரத் தில் சரியாகவேலை செய்யாததால் பெரும் நாசம் தவிர்க்கப்பட்டது. இருப்பினும், நெருப் புக் காரணமாக அந்தப் பயங்கரவாத இளைஞ ருக்கும் அருகிலிருந்த 2 பயணிகளுக்கும் சிறிது காயம் ஏற்பட்டது.

விமானி அந்த நபரைப் பிடித்து விமானத் தின் முன் பகுதிக்குக் கொண்டு சென்றார். பின்னர் விமானம் டெட்ராய்ட் நகரில் தரை யிறங்கிய உடன் தனியாக நிறுத்தப்பட்டது. விமானத்தைப் பொலிஸார் சுற்றி வளைத்த னர். பின்னர் வெடிகுண்டு ஏதாவது உள்ளதா என்று சோதனை செய்தனர். அந்தப் பயங் கரவாத இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அவர் வைத்திருந்த வெடிமருந்து திரா வகமும் திடப்பொருளும் கலந்ததாக இருந் தது. அதை வெடிக்க வைக்கும் முயற்சி தோல்வியடைந்ததால் பலர் உயிர் தப்பினர் என்று அமெரிக்கப் புலனாய்வு அதிகாரி ஒரு வர் தெரிவித்தார்.

அந்த இளைஞர் தனது காலில் வெடி மருந்தை மறைத்து வைத்திருந்தார். ஓர் ஊசி மூலம் அதை இரசாயனத்துடன் கலந்து வெடிக்கவைக்க முயன்றுள்ளார்.

பிடிபட்ட பயங்கரவாதி தீக் காயத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனும திக்கப்பட்டுள்ளார். அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் வைத்தியசாலையிலேயே விசா ரணை நடத்தி வருகின்றனர்.

இந்த விமானம் நைஜீரியாவிலிருந்து ஆம்ஸ்டர்டம் நகரில் தரையிறங்கிப் பின்னர் அங்கிருந்து அமெரிக்கா புறப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அல் - குவைதா பயங்கரவாதி அமர்ந்தி ருந்த இருக்கைக்கு 3 வரிசைக்கு முன்னால் அமர்ந்திருந்த சையத் ஜாப்ரி இது குறித்துக் கூறும்போது, [illegible] சத்தம் வந்தது. [illegible] திரும்பியபோது அவரைப் பலர் மடக்கிப் பிடித்துக்கொண்டிருந்தனர்'' என்றார்.

இதற்கிடையே பிடிபட்ட பயங்கரவாதி லண்டனில் பொறியியல் படிப்புப் படித்து வருபவர் எனத் தெரியவந்துள்ளமையால் லண்டன் பொலிஸார் இது தொடர்பான விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில் சர்வதேச வர்த்தக மையம் மீது விமானத்தை மோதி அல் - குவைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத் தினர். இதில் ஏராளமானோர் கொல்லப்பட் டனர். இந்தப் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்காவில் பாதுகாப்பு பல மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்குச் செல்லும் எல்லா விமானங்களிலும் பலத்த சோதனை மேற் கொள்ளப்படுகிறது. இருப்பினும், நைஜீரிய இளைஞர் வெடிமருந்து எடுத்துச் சென்ற தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

கைது செய்யப்பட்டுள்ள அப்துல்லா விடம் எவ்.பி.ஐ. அதிகாரிகள் தற்போது தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். முதற் கட்ட விசாரணையில் தனக்கு அல் - குவை தாவுடன் தொடர்பு உண்டென்பதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து ஹவாய் தீவில் விடுமுறையைக் கழித்து வரும் ஜனாதிபதி ஒபாமாவுக்குத் தகவல் தரப்பட்டுள்ளது.

# மக்கள் தொகைப் பெருக்கத்தில் சீனாவை இந்தியா முறியடிக்கும்!

## அமெரிக்க நிறுவனம் கணிப்பு

நியூயோர்க்,டிச-28

மக்கள் தொகை பெருக்கத்தில் இந்தியா 2025ஆம் ஆண்டில் சீனாவை முந்திவிடும் என ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவனம் உலகில் உள்ள 227 நாடுகளில், மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் தொடர்பான ஆய்வை சமீபத்தில் மேற்கொண்டது.

இந்த ஆய்வின் முடிவில் வெளியிடப்பட் டுள்ள அறிக்கையில் 2025 ஆம் ஆண்டில் இந்தியா, மக்கள் தொகைப் பெருக்கத்தில் சீனாவை முந்திவிடும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

''இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சி இப்போது 1.4 சதவீதமாக உள்ளது. [illegible]னாவைக் காட்டிலும் மூன்று [illegible]கம். இதே வேகத்தில் சென் றால், 2025இல் சீனாவின் மக்கள் தொகையை இந்தியா மிஞ்சி விடும்'' என் றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''ஒவ்வொரு பெண்ணும் பெறும் குழந் தைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட் டால் இந்தியாவில் இதன் சராசரி விகிதம் 2.7 ஆக உள்ளது. இந்த விகிதம் குறைய ஆரம் பித்துள்ளது. எனினும், மிகவும் மிதமாகவே குறைய ஆரம்பித்துள்ளது.'' என்றும் அவ்வ றிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால், மக்கள் தொகை பெருக்கத் தைக் கட்டுப்படுத்வதில் பெரிய அளவு பயன் இருக்காது. அதேசமயம், சீனாவில் பிறப்பு வளர்ச்சி விகிதம் தொடர்ந்து குறைந்து வரு கிறது. ஏற்கனவே இந்தியாவை விட விகி தாசாரத்தில் குறைவாகவிருக்கும் சீனாவில் 1990 ஆம் ஆண்டில் இது 2.2 சதவீதமாக இருந்தது;1995 இல்1.8 ஆகக் குறைந்தது. 2000ஆம் ஆண்டில் இந்த விகிதம் 1.6 க்குக் குறைந்துவிட்டது.'' - என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# புல்மோட்டையில் சிங்களக் குடியேற்றங்கள்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு,டிச. 28

இடம்பெயர்ந்த மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக இந்திய மருத்துவர்களால் திருகோணமலை புல்மோட்டையில் வைத்தியசாலை அமைக்கப்பட்டிருந்த பிரதேசத்தில் இராணுவத்தினரின் உதவியுடன் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

சிகிச்சைக்காக சென்றிருந்த இடம்பெயர்ந்த மக்கள் அந்தப் பிரதேசத்தில் இருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியதையடுத்து இந்தச் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசம் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான பிரதேசம் எனவும் திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இடையில் மேற்கொள்ளும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்தச் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் துரைரட்ணசிங்கம் மேலும் சொன்னார்.

மேலும் நான்கு வருடங்கள் ஆட்சியில் இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்காக எதனையும் செய்யவில்லை எனவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் தீர்மானம் ஜனவரி 4 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம் தெரிவித்தார்.

தமது கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான 10 நிபந்தனைகள் குறித்து மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா ஆகியோருடன் பேச்சு நடத்தப்பட்டது எனவும் இந்தப் பேச்சுகளில் சரத் பொன்சேகா சாதகமான பதிலை வழங்கியுள்ளார் எனவும் துரைரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

தமது நிபந்தனைகள் தொடர்பாக இரண்டு பிரதான வேட்பாளர்களுடனும் தொடர்ந் தும் பேச்சுகளை நடத்தவுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-சி)

# ஒருவர் இறந்த பின்னரும் மனிதாபிமானமற்று செயற்படுகின்றனர் இந்தோனேஷிய அதிகாரிகள்

## படகிலுள்ள இலங்கையர்கள் கவலை

கொழும்பு, டிச. 28

இந்தோனேஷியாவின் மெராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகிலிருந்த இலங்கை அகதி ஒருவர் நோய்வாய்ப்பட்டு இறந்த பின்னரும், இந்தோனேஷிய அதிகாரிகள் மனிதாபிமானமற்ற முறையில் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர். இத்துடன் இறந்தவரின் உடலைப் பார்ப்பதற்கு அனுமதி மறுத்து வருகின்றனர் என படகில் உள்ள இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவிற்கு செல்லும் வழியில் சில மாதங்களுக்கு முன்னர் 250 பேருடன் தடுக்கப்பட்ட படகிலுள்ள இலங்கையர்களே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர். மருந்துவமனையில் வைக்கப்பட்டுள்ள ஜோர்ஜ் ஜேக்கப் கிறிஸ்டியனின் உடலை பார்ப்பதற்கு படகில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்துள்ளனர் என அகதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அவரது உடலை இலங்கைக்கு அனுப்புவதையும், இறுதிக் கிரியைகளுக்காக தம்மிடம் ஒப்படைப்பதையும் காரணமின்றி தாமதப்படுத்தி வருகின்றனர் எனவும் குற்றம் சாட்டப்படுகின்றது.

இந்தோனேஷியா இனிமேலாவது மனிதாபிமான ரீதியில் செயற்படும் என எதிர்பார்த்தோம். எனினும் அதற்கு எதிர் மாறாக பல நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என படகில் உள்ள இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்டியனின் உடலை பார்ப்பதற்கு பல தடவை வேண்டுகோள் விடுத்தோம். அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. உடலை எப்போது கையளிக்கப் போகிறது என்பதையும் தெரிவிக்கவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தோனேஷியாவின் அரசு தொடர்ந்து தங்களை அச்சுறுத்தி வருவதுடன் தங்கள‌து நலன்களைப் புறக்கணிக்கின்றது எனவும், படகில் நிலைமை மோசமாக உள்ளது என்றும் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

# மெனிக்பாம் இடம்பெயர் முகாம் கூடிய விரைவில் மூடப்படும்

## மனித உரிமைகள் அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, டிச. 28

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள மெனிக்பாம் முகாம் விரைவில் மூடப்படும் - என்று மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக முகாமில் தங்கியுள்ள சகல மக்களையும் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றிவிட முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அரசால் வழங்கப்பட்ட 180 நாள்கள் காலக் கெடுவிற்குள் மக்களை மீள் குடியேற்றுவதற்கு தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

இடம்பெயர் முகாம்களில் தற்போது 80,000 மக்கள் மட்டுமே தங்கியிருக்கின்றனர்.

நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வாக்குறுதி அளிக்கப்பட்ட காலத்திற்குள் மக்களை மீள்குடியேற்ற முடியும்.

சுதந்திர இடம்நகர்விற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் குறுகிய காலத்திற்குள் முகாம்களுக்கு திரும்புவதன் மூலம், முகாம்களின் நிலைமை சிறந்த வகையில் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்படுகிறது - என்றும் அவர் சொன்னார். (அ-சி)

## ஜீ.எஸ்.பி. வரிச் சலுகையைப் பெறுவதற்கு பேச்சு நடத்தப்படுகிறது - அமைச்சர் ரோஹித

கொழும்பு, டிச. 28

ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்தும் நாட்டுக்கு பெற்றுக் கொள்வதற்கான பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக ஐரோப்பிய சங்கத்தின் அங்கத்துவ நாடுகள் பலவற்றுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என அமைச்சர் ரோஹித்த போகெல்லாகம குறிப்பிட்டார்.

கடந்த சில தினங்களில் வெளிவிவகார அமைச்சர்களுடன் தொலைபேசி உரையாடல்கள் மூலம் இவ்விடயங்கள் குறித்து பேசப்பட்டது என அமைச்சர் கூறினார்.

(பிந்திய செய்தி முதலாம் பக்கத்தில்)

# சர்வதேச சிறப்பு விருதுகள் 2 ஊடகவியலாளர்களுக்கு

கொழும்பு, டிச. 28

ஊழலுக்கும் லஞ்சத்திற்கும் எதிராகவும் வெளிப்படைத் தன்மையைப் பேணும் வகையிலும் நேர்மையாகச் செயற்பட்டதற்கான சர்வதேச சிறப்பு விருது இவ்வாண்டு ஜனவரி 7ஆம் திகதி பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவுக்கு வழங்கப்படுகிறது.

இதேபோன்று ஊழலுக்கும் லஞ்சத்திற்கும் எதிராகவும் வெளிப்படைத் தன்மையைப் பேணும் வகையிலும் நேர்மையாகச் செயற்பட்டதற்கான இன்னொரு சர்வதேச சிறப்பு விருது ஊடக சுதந்திரத்திற்காகப் போராடி உயிரச்சுறுத்தல் காரணமாக தற்போது வெளிநாடொன்றில் அஞ்ஞாதவாசம் செய்யும் ஊடகவியலாளர் போத்தல ஜயந்தவிற்கு வழங்கப்படுகிறது என ட்ரான்ஸ் பரன்ஸி இன்ட நஷனல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜே.ஸி.வெலியமுன தெரிவித்தார்.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தின் நோக்கம் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாரத்ன தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி கொழும்பு மாநகரம் உள்ளிட்ட மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் சிவிலுடையிலும், சீருடைகளிலும் அதிக எண்ணிக்கையில் பொலிஸார் 24 மணிநேர அவதானிப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தவிர கொழும்பு மாநகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் சந்தர்ப்பங்களில், விரைவில் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## நீதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸல்ஸில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் எழுத்து மூலம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் மீள வழங்கப்பட வேண்டுமாயின் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அழுத்தங்களோ இடையூறுகளோ இன்றி சுதந்திரமான முறையில் மக்கள் தமக்கு பிடித்த வேட்பாளருக்கு வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் உறுதிப்படுத்தப்பட்டால் முடிவுகள் வெளியிடப்படும் வரையில் காத்திராது இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியைந்து பேர் வரை அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்கான விளக்கங்கள், வியாக்கியானங்களை விவரிக்கும் அறிக்கை ஒன்றைக் கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கு வாசித்தார்.

அந்த அறிக்கை பிரேரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதேபோன்று தேர்தலைப்பகிஷ்கரிக்கும் முடிவையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எடுக்கும் என எதிர்பாக்கப்படுவதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

எனினும், தேர்தலைப் பகிஷ்கரிக்கும் முடிவுக்குத் தனிப்பட்ட முறையில் கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தி உடன்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

எவ்வாறெனினும் கட்சியின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் விருப்பத்துக்கு அமைய பகிஷ்கரிப்பு முடிவு எடுக்கப்பட்டதாகவும் கட்சி வட்டாரங்கள் மூலம் அறியவந்தது. (அ-சி)

## இடம்பெயர்ந்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவகாசத்தை வழங்குமாறு தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

மேலும், இடம்பெயர்ந்த மக்களை தேர்தலில் வாக்களிப்பதற்காக ஊக்குவிக்கும் நடவடிக்கை எதனையும் தேர்தல்கள் ஆணையகம் மேற்கொள்ளவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மக்கள் தம்மை இவ்வாறு பதிவு செய்து கொள்ளும் நோக்கத்திற்காக அவர்கள் செல்லவேண்டிய உரிய கிராமசேவையாளர் அலுவலகங்களோ அல்லது பிரதேச செயலகங்களோ இல்லாதமையையும் சுட்டிக்காட்டியுள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள், சில அலுவலகங்களில் 1989 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல்களே உள்ளன என்றும், மக்களில் பலருக்குத் தமது கிராம அலுவலர் பிரிவு எது என்பதே சரியாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளன. (அ-சி)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ். றோட், இணுவில்.
← (இருஇடத்தில்) →
அண்மையில் வெளிவந்த A/L பரீட்சையில் அதிஉயர் பெறுபேறு பெற்ற அனைத்து மாணவர்களையும் வாழ்த்தி .....!
← ஆரம்பமாகின்றது →
A / L - 2012
கலை, வர்த்தகப்பிரிவு
ஜனவரி 2 இல்
Note :- எமது மற்ற நிறுவனமான
BARATHY
சித்தன்கேணியில்
அங்கும் இதே நாளில் ஆரம்பமாகிறது
உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக்கொள்ளவும்.
(சி/5635547)

CHEMISTRY
A/L 2012
ஆரம்பம் : 28/12/2009
(Monday 4.30 p.m.)
S. Vasu B.sc.
NAVALAR Institute
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

THE SCIENCE CORNER Clock Tower Lane, Jaffna

| CHEMISTRY 2012 (English Medium) | இரசாயனவியல் - 2017 (தமிழ்மொழி மூலம்) |
|---|---|
| Commence on - 29.12.2009 | ஆரம்பம் - 29.12.2009 |
| BATCH - I Tue, Thu 4.30 - 5.30 p.m. | பிரிவு - I Tue, Thu 3.30 - 4.30 p.m. |
| BATCH - II Sat, Sun 7.00 - 8.00 a.m. | பிரிவு - II Sat, Sun 3.30 - 4.30 p.m. |

By: Rajah

சுடர் ஒளி
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
THE SUDAROLI வாரமலர்
(டிசெ.27 - ஜன.02)



இன்று முதல் விற்பனையில்
ஜனாதிபதித் தேர்தல் எழுப்பும் சவால்கள்
அதிரடி மாற்றங்கள் - புதுடில்லியில்
நீங்கள் அறிய வேண்டிய உண்மைகள்
உயிர் வலிக்கும் கணங்கள் தொடரில் யாரையார் பார்ப்பது ?
ஜனாதிபதித் தேர்தல்: மக்களுக்கு அக்கறையில்லை; படையினருக்கு அக்கறை
அரங்கேறப்போகும் சிலுவைச் சுமப்புக்கள் !
முழுமையான மருத்துவராக இணையத்தளம் இயங்குமா?
இந்தியா மாறியது ஏன் ?
2010, புத்தாண்டுப் பலன்களின் தொடர்
வளரும் நாடுகளை ஏமாற்றிய கோபன் ஹேகன் மாநாடு
உண்மைக் கதை, பெண், சினிமா, கவிதைப்புனல், கலைப்பூங்கா, சித்தன் பதில்கள், மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்.
உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.